# உதயன்

36: பக்கங்கள் சுடர் 27 கதிர் 273 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 09 சனிக்கிழமை (25/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily www.onlineuthayan.com விலை ரூபா 25.00





# ஜப்பானின் அனுசரணை தொடரும்

## யாழ்ப்பாணத்தில் அகாஷி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 25

இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை, அமைதியை ஏற்படுத்துவதற்கு ஜப்பான் தொடர்ந்தும் அனுசரணை வழங்கும் என்று தெரிவித்தார் யசூசி அகாஷி.

இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் போது இணைத் தலைமை நாடுகளில் ஒன்றாக இருந்த ஜப்பானின் சார்பில் இலங்கையின் அமைதி முயற்சிகளில் தீவிர ஈடுபாடு காட்டியவர்.



நேற்றுமுற்பகல் 11 மணியளவில் அவர் யாழ்ப்பாணம் வந்தார். யாழ். ஆயர் இல்லத்தில் சர்வ மதப் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை

பார்க்க பக்கம் 4

## சில வாரங்களில் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 25

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெயர்ந்த பின்னர் 'மனிப் பாம்' முகாமில் அடைக்கப்பட்டவர்களில் எஞ்சியிருக்கும் மக்களை மீள்குடியமர்த்தும் பணிகள் அடுத்த சில வாரங்களில் ஆரம்பிக்கப்படும் என்று மீள்குடியமர்த்தல் அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

இதுவே இறுதிக்கட்ட மீள்குடியமர்த்தல் பணியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். அண்மையில், 300 குடும்பங்களைச் சேர்ந்த 994 மக்களை 'மனிப் பாம்' முகாமில் இருந்து புதுக்குடியிருப்பில் உள்ள கிராமம் ஒன்றில் மீள்குடியமர்த்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஆனால், மீள்குடியமர்த்துவதாகக் கூறித் தங்களை அழைத்து வந்து பாடசாலை ஒன்றில் தங்க வைத்துள்ளார்களே தவிர சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை என்று அரசு மீள்குடியமர்த்தியதாகக் கூறும் மக்கள் உதயனிடம் தெரிவித்தனர்.


இலங்கையிடம் இருந்து மாலைதீவு அபிவிருத்தி விடயங்கள் பலவற்றை கற்க வேண்டியிருக்கிறது. 2

தமிழக மீனவர் கொலை தொடர்பில் ஏற்பட்டிருந்த கண்டன ஆர்ப்பாட்டம் ரத்தானதன் பின்னணி என்ன? 8

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்க ஈரான் செல்கிறார் பான் கீ-மூன் 9

கிழக்கு மாகாணத்தின் தேர்தல் தமிழ் மக்களின் உயிர் நாடியான பிரச்சினை. 17


## அரசியல் கைதிகளின் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை

### மன்னார் மேல் நீதிமன்றில் 24 வழக்குகள் பாரப்படுத்தப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 25

தமிழ் அரசியல் கைதிகள் 24 பேரின் வழக்குகள் மன்னார் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு புனர்வாழ்வு அமைச்சின் மூத்த ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துவதாக அரசு வழங்கிய வாக்குறுதிக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வெலிக்கடைச் சிறைச்சாலை, அனுராதபுரம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது.

இதற்கமைவாக கடந்த 15ஆம் திகதி திறந்து வைக்

பார்க்க பக்கம் 4

## ஒட்டுக்குழுக்களின் அட்டகாசம் யாழ். குடாநாட்டில் தொடர்கிறது

### அகாஷியிடம் சுட்டிக்காட்டினர் சிவில் சமூகப் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 25

இராணுவ ஒட்டுக் குழுக்களின் அட்டகாசம் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இராணுவப் பிரசன்னம் குறைப்படாமல் நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு யசூசி அகாஷியிடம் எடுத்துரைத்தனர் சர்வ மதத் தலைவர்களும் தமிழ் சிவில் சமூகப் பிரதிநிதிகளும். யாழ்ப்பாணம் வருகை தந்த அகாஷியை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவடைந்து மூன்று வருடங்களாகிவிட்டபோதும்

பார்க்க பக்கம் 4

## ஏற்றுமதி வருவாய் தொடர்ந்து வீழ்ச்சி

கொழும்பு, ஓக. 25

இலங்கையின் ஏற்றுமதி வருவாய் கடந்த ஜூன் மாதத்தில் 11.7 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜூன் மாதத்தில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 755.8 மில்லியன் டொலர்களால் வீழ்ச்சியடைந்துள்ளது.

தேயிலை ஏற்றுமதி 6 வீதத்தினாலும் (102.4 மில்லியன் டொலர்), ஆடை ஏற்றுமதி 6.3 வீதத்தினாலும் (310 மில்லியன் டொலர்), இறப்பர் ஏற்றுமதி 15 வீதத்

பார்க்க பக்கம் 4

## வெள்ளவத்தைக் கொலையாளி கடவத்தையில் மடக்கிப்பிடிப்பு!

### மாறுவேடம் தரித்து பஸ்ஸில் சென்றபோது பொலிஸார் அதிரடிப் பாய்ச்சல்

கொழும்பு, ஓக. 25

தலைமறைவாகியிருந்த வெள்ளவத்தை முக் கொலைச் சம்பவ சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் குமாரசாமி பிரசானை (வயது - 28) நேற்றுக்காலை கடவத்தைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். அதேவேளை, இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் கொலைகள் குறித்துப் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன எனத் தெரியவருகின்றது.

தன்னை எவரும் அடையாளம் கண்டுகொள்ளக்கூடாது என்பதற்காக மொட்டையடித்து மாறுவேடத்தில் கொழும்பிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸொன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது பஸ்ஸிலிருந்த நபரொருவர் வழங்கிய தகவல்களுக்கமையவே சந்தேகநபரான பிரசான் கடவத்தைப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார் எனவும் விசாரணைக்காக அவர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 18ஆம் திகதி வெள்

பார்க்க பக்கம் 4

## சீபா உடன்பாடு செய்ய முடியாது டில்லிக்கு இலங்கை நேரில் பதில்

கொழும்பு, ஓக. 25

இந்தியாவுடன் சீபா எனப்படும் வர்த்தக உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கு விரும்பவில்லை என்று இந்திய அதிகாரிகளுக்கு இலங்கை வெளிப்படையாகத் தெரிவித்துள் ளது.

புதுடில்லியில் இருந்து வெளியாகும் பிஸ்னஸ் ஸ்ரான்டட் இதழ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த உடன்பாடு இந்தியப் பொருள்களை இலங்கையின் சந்தைக்கு திறந்து விடும்

பார்க்க பக்கம் 4

## இலங்கையின் எதிர்ப்பை நிராகரித்தது பிரிட்டன்

கொழும்பு, ஓக. 25

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் தமது நாட்டுக் குடிமக்களுக்கு விடுத்திருந்த பயண எச்சரிக்கையை பிரிட்டன் மீண்டும் புதுப்பித்துள்ளது.

ஆனால், இலங்கை தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துகளை நீக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு கோரியிருந்த போதிலும் பிரிட்டன் அதில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை.

புதுப்பிக்கப்பட்ட இந்த பயண எச்சரிக்கை அறிவிப்பை பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

புத்தர்சிலைகளின் ஒளிப்படங்களின் முகப்புடன் வெளியிடப்பட்டுள்ள இந்தப் பயண எச்சரிக்கை குறிப்பில் உள்ளூர் சட்டங்கள், சுங்கப் பிரிவு குறித்த மேலதிக தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும் ஒட்டுமொத்த பயண எச்சரிக்கை அறிவுரையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று பிரிட்டன் வெளிவிவகாரப் பணிய

பார்க்க பக்கம் 4

## கிழக்கில் முதலமைச்சர் பதவி கூட்டமைப்புக்கே கிடைக்கும்

### அடித்துக் கூறுகிறார் சம்பந்தன் எம்.பி.

அம்பாறை, ஓக. 25

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கைப்பற்றும் என நேற்றுத் திட்டவட்டமாக- ஆணித்தரமாக இடித்துரைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ்மக்கள் ஒட்டுமொத்தமாக கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஏற்பாட்டில் ஆலையடி வேம்பு பிரதேச கலாசார மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு தெரி

பார்க்க பக்கம் 4

## ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் அக்கறை காட்டும்

கொழும்பு, ஓக. 25

இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துவமாகவும், கௌரவமாகவும், நீதியுடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே, ஜெனிவா தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது என்று இந்திய வெளிவிவகார இணை அமைச்சர்

பார்க்க பக்கம் 4

# இலங்கையிடம் இருந்து மாலைதீவு அதிகம் கற்க வேண்டி இருக்கிறது

ஊடக சந்திப்பில் மாலை தீவு ஜனாதிபதி



கொழும்பு, ஓக.25

இலங்கையிடமிருந்து தனது நாடு அதிக விடயங்களைக் கற்க வேண்டியுள்ளது என இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் வாஹிட் ஹஸன் தெரிவித்தார்.

இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளை இராஜதந்திர ரீதியாக சிறந்த முறையில் கையாள்வது உள்ளிட்ட பல விடயங்களை இலங்கையிடமிருந்து கற்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு முதற் தடவையாக இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் வாஹிட் ஹஸன், கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மாலைதீவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு இலங்கை உதவ வேண்டும். இலங்கை அரசு எப்பொழுதும் மாலைதீவிற்கு உதவும் என நம்புகின்றேன்.

இலங்கைக்கான எனது முதலாவது பயணம் மிகச் சிறந்த முறையில் அமைந்தது. இதன்போது, இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட அரச முக்கியஸ்தர்களுடன் சிறந்த முறையிலான பேச்சுக்கள் இடம்பெற்றன.

இரு நாடுகளுக்கும் இடையில் உயர் கல்வி, வர்த்தக முதலீடு மற்றும் குற்றவியல் ஆகிய துறைகளில் இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் மிக விரைவில் இரு நாடுகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு இடையில் தற் போது இடம்பெற்று வருகின்ற விமான சேவை விரைவில் விஸ்தரிப்பு செய்யப்படவுள்ளது.

நான் பலவந்தமாக ஆட்சியை கைப்பற்றினேன் என்பது முற்றிலும் தவறானதாகும். நாட்டின் சட்டத்திற்கிணங்க ஜனாதிபதி பதவி விலகும்போது பிரதி ஜனாதிபதியாக இருந்தவர் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார்.

இதற்கிணங்க மக்களினால் பிரதி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நான் முன்னாள் ஜனாதிபதி நஷீட்டின் பதவி விலகலை அடுத்து ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டேன்.

மாலைதீவின் அரசியலமைப்பிற்கிணங்க அடுத்த வருடம் ஜூலை மாதத்திலேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கிணங்க எதிர்வரும் ஜூலை மாதத்திலேயே தேர்தல் நடத்தப்படும்.

இதற்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன. எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது நானல்ல. தேர்தல் ஆணையாளரே உரிய நேரத்தில் அவர் தேர்தலை நடத்துவார்." - என்றார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மாலைதீவு அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களும் கலந்து கொண்டனர். (10)

## பிறந்து ஆறே நாள்களான சிசுவின் விரல் துண்டானது

கொழும்பு, ஓக.25

பேராதனை பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில் பிறந்து ஆறு நாள்களேயான சிசுவொன்றின் கை விரல்கள் வைத்தியசாலை தாதி ஒருவரால் துண்டிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுகாதார திணைக்களம் மற்றும் வைத்தியசாலை நிர்வாகம் ஆகியவற்றினால் இருவேறு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சம்பத் ரணவீர தெரிவித்தார்.

வெட்டப்பட்ட சிசுவின் விரல் சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டுள்ளது. ஆனாலும் அது வெற்றியளிக்கவில்லை. அதனால் இன்னும் சில தினங்களில் மீண்டும் சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

குறித்த சிசுவுக்கு ஊசி மருந்தேற்றும் போது தற்செயலாக விரல் துண்டிக்கப்பட்டு விட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள தாதி தெரிவித்துள்ளார். (10)

## பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாமில் தொடரும் ஈழத்தமிழர் உண்ணாவிரதம்

சென்னை, ஓக.25

பூந்தமல்லி சிறப்பு முகாமில் உள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி அங்கிருக்கும் செந்தூரன் என்ற ஈழஅகதி கடந்த 6ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறார்.

உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரி நேற்று பூந்தமல்லி வருவாய் துறை அதிகாரி வளர்மதி, வட்டாட்சியர் ரவிக்குமார் ஆகியோர் செந்தூரனை நேரில் சந்தித்து உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரி சிகிச்சைக்கு வைத்தியசாலைக்கு வருமாறு கேட்டனர். ஆனால் செந்தூரன் மறுத்து விட்டார். தொடர்ந்து உண்ணாவிரத்தில் ஈடுபட்டு வருகிறார். (10)

## பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கு எதிராக, தப்பியோடிய இராணுவத்தினருக்கு பாதுகாப்பு அளித்தமை தொடர்பான வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இராணுவத்தில் இருந்து தப்பயோடிய 10 பேரை தன்னோடு வைத்திருந்தார் என இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (10)

# கண்ணிவெடி அகற்றும் அதிகாரிகளை அவசரமாக வீட்டுக்கு அனுப்புகிறது அரசு

**கிளஸ்ரர் குண்டு விவகாரமே காரணமாம்**

**கண்ணிவெடி அகற்றும் அதிகாரிகளாலேயே புதுக்குடியிருப்பு பகுதியில் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தியமை தொடர்பான ஆவணங்கள் வெளியிடப்பட்டன.**

கொழும்பு, ஓக. 25

இறுதிப் போரின்போது அரச படைகள் கொத்துக் குண்டுகள் எனப்படும் கிளஸ்ரர் குண்டுகளை பயன்படுத்தியமையை வெளிக்கொணர்ந்த சம்பவத்தின் பின்னணியில் இருந்ததாக குறிப்பிடப்படும் கண்ணிவெடியகற்றல் அதிகாரிகளை வீட்டிற்கு அனுப்பும் நடவடிக்கைகளை அரசு அவசர அவசரமாகச் செய்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கில் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஐ.நா. சபையின் ஒருங்கிணைப்பின் மூலம் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது.

குறித்த மேற்பார்வை அலுவலகம் திருப்திகரமாக கண்ணிவெடியகற்றல் பணிகள் நடந்திருப்பதாக உறுதியளித்தாலே மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அவ்வாறான அதிகாரிகளாலேயே வன்னியின் புதுக்குடியிருப்பு பகுதியில் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தியமை தொடர்பான ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

இதையடுத்தே கண்ணிவெடி அகற்றல் பணிகளுடன் தொடர்புடைய படை அதிகாரிகளை வெளியேற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

ஏற்கனவே கொத்துக் குண்டு விவகாரம் வெளியில் கசியவந்ததை அடுத்து சில அதிகாரிகளை உயர்மட்டம் நேரடியாகக் கடிந்து கொண்டதையடுத்து அவர்கள் தமது பதவிகளை விட்டு விலகிச் சென்றுள்ளதாக அறியவந்தது.

தொடர் அழுத்தங்களை உள்ளூர் பணியாளர்கள் எதிர்கொள்வதனால் கிளஸ்ரர் குண்டுகளை பயன்படுத்தியமை தொடர்பான புகைப் படங்கள் மற்றும் ஆவணங்களை வெளியிடாது தொடர்புடைய ஐ.நா. அதிகாரிகள் பின்னடித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மனித நேய கண்ணிவெடியகற்றல் பணிகளில் ஈடுபட்டு வரும் ஒரு நிறுவனம் கிளிநொச்சியில் கொத்துக்குண்டுகளைப் பயன்படுத்தியமை தொடர்பாக முழு ஆதாரங்களை மீட்டிருந்த போதும் அதனை அம்பலப்படுத்தியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (10)

## எதிர்காலத்தில் நான் பிரமச்சாரி

**– அமைச்சர் மேர்வின்**

கொழும்பு, ஓக.25

எதிர்காலத்தில் பிரமச்சரியத்தில் ஈடுபடப்போவதாக பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நான் பிரமச்சரியத்தில் ஈடுபடக் கூடும். ஆனால் அது இப்போதல்ல. ஏனென்றால், எனது உடம்பிலுள்ள சகல உறுப்புக்களும் ஒழுங்காக இயங்குகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சர் மேர்வின் சில்வா நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## அவமானப்படுத்துவோர் மீது நடவடிக்கை தேவையில்லை

**பொலிஸாருக்கு ஜனாதிபதி அறிவுரை**

கொழும்பு, ஓக. 25

தன்னை அவமானப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்க தேவையில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியை அவமானப்படுத்தியமைக்காக அரசியல்வாதிகளில் சிலருக்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி இதனைப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதிர்ந்த அரசியல்வாதிகளுக்கு நாகரிகம் தெரியும் அவர்கள் என்னை அநாகரிகமாகப் பேசமாட்டார்கள் எனவும் ஜனாதிபதி அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் சாதாரண மக்கள், அரச அதிகாரிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் மீது சேறுபூசி அவமானப்படுத்தும் நடவடிக்கைகளில் யாராவது ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி தனது அறிக்கையில் ஆலோசனை வழங்கியுள்ளார். (10)



கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்ட ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி 'சேவ்த சில்ரன்' அமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டு பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

# அடிப்படை வசதிகள் இன்மை; மீள்குடியமர முஸ்லிம்கள் தயக்கம்

## அகாஷியிடம் சுட்டிக்காட்டினார் சுபியான்



யாழ்ப்பாணம், ஓக.25

*போர் முடிவுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றத்துக்காக 500 முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே வந்துள்ளன. ஏனையோர் வரப்பின்னடிக்கிறார்கள். அதற்கான காரணம் மீள் குடியேற்றத்தினை மேற்கொள்வதற்கான எந்தவொரு அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இது முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறும்*

*தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்த நிலையே காணப்படுகின்றது என யாழ். மாவட்ட முஸ்லிம் பிரதிநிதி மௌலவி சுபியான் தெரிவித்தார்.*

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டு வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி ஆகாஷிக்கும் சர்வ மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்குமிடையில் யாழ். ஆயர் இல்லத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

உண்மையில் தங்களின் இவ் வருகையானது மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தில் நாங்கள் எல்லா மதத்தவர்களும் இப்போது ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வருகின்றோம்.

எனினும் நாங்கள் 1990 ஆம் ஆண்டு பல வந்தமாக யாழில் இருந்து வெளியேற்றப்பட்டோம். இருப்பினும் அந்த நேரத்தில் நாங்கள் மாவட்டத்தை விட்டுச் செல்லும் போது யாரும் எம்மை கண்டு கொள்ளவில்லை. அத்துடன் எந்தவொரு மத்தினரோ அல்லது மக்களோ அல்லது அரசியல்வாதிகளோ எங்களை வெளியேற்றும் போது வெளியேற்றியவர்களைத் தடுத்து நிறுத்தவுமில்லை.

ஏனெனில் அந்த நேரத்தில் அவ்வாறானதொரு சூழ்நிலை காணப்படவில்லை. அதனால் இங்கு இருந்தவர்களினால் எதையும் செய்ய முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் தற்பொழுது நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் இங்கிருந்து வெளியேறும்போது 5000 பேர்; சமாதானம் ஏற்பட்டு மீண்டும் வரும் வேளையில் 8000 பேராக விருத்தியடைந்துள்ளோம்.

ஆனால் தற்பொழுது மீள் குடியேற்றத்துக்காக 500 குடும்பம் மட்டுமே வந்துள்ளோம்.ஏனெனில் மீள் குடியேற்றத்துக்காக எந்தவொரு அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இது முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல மீள் குடியேற்றம் செய்யப்படுகின்ற தமிழ் மக்களுக்கும் இவ்வாறான நிலையே காணப்படுகின்றது. எனவே அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து மீள் குடியேற்றத்தினை கவனத்தில் கொள்ளவேண்டும்.

அத்துடன் மக்கள் மீண்டும் சுமூகமான நிலைக்கு திரும்பி மகிழ்ச்சியாக வாழ வேண்டும். அதற்கு ஒரு நிலையான தீர்வு அவசியமாகும். அதனைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இதன்போது யாழ் மாவட்டத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்று மீண்டும் மீள் குடியேறி எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான அறிக்கை ஒன்றினையும் யசூசி அகாஷியிடம் மௌலவி சுபியான் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (16)

# சாவகச்சேரி நகரசபையில் தலைவர், செயலாளர் படங்கள்

தென்மராட்சி,ஓக.25

சாவகச்சேரி நகரசபை உருவாகி 50 வருடங்களை நெருங்குவதால் மன்றில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய தலைவர்கள், செயலாளர்கள், விசேட ஆணையாளர்கள் ஆகியோரின் புகைப் படங்களை மன்றத்தில் பொருத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்றத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட தலைவர்கள், விசேட ஆணையாள்ர்கள், செயலாளர்கள் ஆகியோரை கௌரவிக்கும் வகையில் புகைப்படங்கள்பொருத்தப்படவுள்ளதால் இவர்களின் புகைப்படங்களை வழங்கி உதவுமாறு இவர்களது குடும்பத்தினரிடம் கோரப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை ஆரம்பித்த 1964 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 06 தலைவர்கள், 09 ஆணையாளர்கள், 12 செயலாளர்கள் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2000 ஆம் ஆண்டு வரை பணியாற்றியோரின் புகைப்படங்கள் நகரசபையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் 2000 ஆம் ஆண்டு போர் வேளையில் கட்டடங்கள் சேதமடைந்த போது அவை அழிந்துபோய் விட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)



*நல்லூர் பிரதேச சபை தனது எல்லைப் பரப்பில் உள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கென நிதியுதவிகளை வழங்கியது. நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் சனசமூக நிலையம் ஒன்றுக்கான காசோலையை நிலையத் தலைவரிடம் வழங்குகிறார். (ம-7)*

# கலைஞருக்கு அ.அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை

கலாசாலை மற்றும் கலை அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இலங்கைக் கலைஞர்களுக்கு கலைஞர்களுக்கான அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பதினெட்டு வருடங்களுக்கு குறையாமல் கலைச் சேவையாற்றியவர்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஆக்கத்திறன் கௌரவிப்பு விருதுகள் பெற்ற கலைஞர்கள் இதற்கென விண்ணப்பிக்க முடியும்.

அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளவிரும்பும் கலைஞர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் அடையாள அட்டைக்கான விண்ணபப்ப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணபப்ப்படிவங்களை 2.5 சென்றிமீற்றர் 3.5 சென்ரிமீற்றர் அளவு கொண்ட இரண்டு புகைப்படங்களை இணைத்து பணிப்பாளர் கலாசார அலுவல்கள் திணைக்களம் 8 ஆவது மாடி, செத்சிரிபாய, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு எதிர்வரும் 15.9.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறும் கடித உறையின் இடது மூலையில் கலைஞருக்கான அடையாள அட்டை எனக் குறிப்பிட்டு அனுப்பும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

# தொண்டமானாறு ஊடாக 751 போக்குவரத்து சேவை

வடமராட்சி, ஓக.25

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 751 ஆம் வழித் தடத்தில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச., தனியார் பஸ்கள் யாவும் தற்போது தொண்டமானாறு ஊடாகச் சேவையில் ஈடுபடுகின்றன.

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஊடாகவே சேவைகளில் ஈடுபட்டு வந்த பஸ்கள் தற்போது நிலைமை சீரடைந்து சுமுகநிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து 751 ஆம் வழித் தடத்தில் சேவையில் ஈடுபட வேண்டும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அதற்கமைய 751 ஆம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச., தனியார் பஸ்கள் பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டமானாறு, இடைக்காடு, தம்பாலை, கதிப்பாய், அச்சுவேலி ஊடாகவே சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப் பாதையை மீறி குறுக்கு வழியில் சேவைகளில் ஈடுபடும் பஸ்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த வழித் தடத்தில் சேவையில் ஈடுபடும் வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்க தனியார் மினி பஸ்கள் அச்சுவேலி- யாழ்ப்பாணம் பாதையில் சேவையில் ஈடுபடும் மினி பஸ்களின் நலனைக் கருத்தில் கொண்டு அச்சுவேலிக்கும் ஆவரங்காலுக்கும் இடையில் பயணிகளை ஏற்றி இறக்குவதில்லை என்று கூறப்பட்டது. (ம-8)

# சட்டவிரோத மின்பாவனை; செலுத்தினார் அபராதம்

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் நெல்லியடியில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்தின் உரிமையாளருக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அபராதத்தை பருத்தித்துறை நீதிமன்றம் விதித்துள்ளது.

இலங்கை மின்சாரசபை ஊழியர்களும் நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து நடத்திய சோதனையின் போது குறிப்பிட்ட கல்வி நிலையத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக தனியார் கல்வி நிலைய உரிமையாளர் மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நெல்லியடிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு நாற்பதாயிரம் ரூபா நீதிமன்ற அபராதமும் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு தண்டப்பணமாகவும் செலுத்துமாறு உத்தர விடப்பட்டது. (16-8)

# அநாதரவான ஆட்டோ வீதியில் இருந்து மீட்பு

வடமராட்சி,ஓக.25

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் உள்ள வீதி ஒன்றில் அனநாதரவாக விடப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றை வல்வெட்டித்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சிவப்பு நிறத்திலான 202- 4939 இலக்கம் கொண்ட ஓட்டோவுக்கு அதற்கான இறைவரி காப்புறுதி வாகன உறுதிப்பத்திரம் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் இருந்துள்ளன.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட ஓட்டோ பருத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் கொண்டு செல்லப்பட்டது.

வாகன உரிமையாளர் வரும் வரை பருத்தித்துறை நீதி மன்றத்தின் பாதுகாப்பில் ஓட்டோவை வைத்திருக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

நேரடியாக நீதிமன்றம் வந்து உறுதிப்படுத்தி ஓட்டோவைப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிவான் மேலும் கூறியுள்ளார். (ம-8)

# கூட்டணி அலுவலகம் இன்றுமுதல் கே.கே.எஸ்.வீதியில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் கே.கே.எஸ். வீதி பண்ணை நாச்சிமார் கோயிலடிக்கருகில் மாற்றப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரான வேலணை பிரதேசசபை உறுப்பினர் எஸ்.குலசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இன்று இயங்கத் தொடங்கும் இந்த அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காலஞ்சென்ற அமரர் அ.அமிர்தலிங்கத்தின் நினைவுதின நிகழ்வு இடம்பெறும் என்றும் கூறப்பட்டது. (ம-7)



*சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மாபெரும் நடமாடும் சேவையில் யு.என்.டி. நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆறுமாத ஆங்கில டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு யாழ். அரச அதிபர் சுதந்திரம் அருமைநாயகம் சான்றிதழ் வழங்குகிறார். படத்தில் செயலக உத்தியோகத்தர்கள் மானிப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அமர்ந்திருக்கின்றனர். (ம-100)*

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார். அவர் தமதுரையில் மேலும் கூறியவை வருமாறு:-

இன்றைக்கு தமிழ்பேசும் மக்களுடைய பிரச்சினை சர்வதேசமயமாக்கப்பட்டுள்ளது. தேசியப் பிரச்சினை சம் பந்தமாக சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை ஊடாக சில தீர்மானங்கள் எடுத்துள்ளது.

அந்தத் தீர்மானங்களையடுத்து இலங்கை அரசு திணறிக்கொண்டிருக்கும் சூழலில் அதனை முறியடிப்பதற்காக தமிழ் மக்கள் அரசுடன்தான் இருப்பதாக காட்டுவதற்காகத்தான் இலங்கை அரசு இந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துகின்றது.

இதேவேளை, போரின் இறுதிக் காலத்தில் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாகவும் அந்த மீறல்கள் சம்பந்தமாக விசாரணை நடைபெற்று பக்கச்சார்பற்ற நேர்மையான அறிக்கை வெளியிடவேண்டும் என்ற கருத்து வந்திருக்கின்றது. இந்த சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டு போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதா? மனிதநேயத்துக்கு மாறாக போர் இடம்பெற்றதா? என்ற கேள்விகளுக்கு பதில்கூறவேண்டிய நிலையில் அரசு சர்வதேச அரங்கில் இருக்கின்றது.

2010 இல் வடமாகாண தேர்தல் நடக்குமென 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷகூறினார். பின்னர் 2011 ஆம் ஆண்டு நடைபெறும் என்று 2010 ஆம் ஆண்டில் கூறினார். அதன் பின்னர் 2012 இல் நடைபெறும் என்று 2011 இல் கூறினார். தற்போது 2013 இல் நடைபெறும் என்று கூறுகின்றார். ஏன் முதல் கூறப்பட்ட ஆண்டுகளில் வடக்குத் தேர்தலை மஹிந்த அரசு வைக்கவில்லை? வடக்கு மாகாணத்தில் தமிழ்மக்கள் தனிப்பெரும்பான்மையாக வாழுகின்றனர், தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும், அது சர்வதேச சமூகத்துக்கு ஒருசெய்தியனுப்பும், அந்தச் செய்தி தமிழ்மக்கள் உரிமையை வழங்கும் என்று அவர்களுக்குத் நன்றாகத் தெரியும் . அதனால் இவற்றை எல்லாம் முறியடிப்பதற்காக கிழக்கில் சிங்களமக்கள் குடியேற்றப்பட்டு இனவிகிதாசாரம் மாற்றப்பட்டுள்ளதுடன் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருக்கின்றது என நினைத்து ஒருவருடம் இன்னும் கிழக்கு மாகாணசபை இருக்கும்போது அதனைக் கலைத்து தேர்தலை நடத்துகின்றது மஹிந்த அரசு. ஆனால், முஸ்லிம் மக்களும் முஸ்லிம் தலைமைகளும் அரசு தமிழ்மக்களுக்கு செய்தவைகளை நினைத்து தாங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக அரசுடன் சேர்ந்து போட்டியிடக்கூடாது என்ற காரணத்திற்காக முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என ஜனாதிபதி மஹிந்த எதிர்பார்க்கவில்லை.

அடுத்த மாதம் நடக்கவிருக்கும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பில் 8ஆசனங்களையும், அம்பாறையில் 4 ஆசனங்களையும், திருகோணமலையில் 5 ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும். அத்துடன் 2 போனஸ் ஆசனங்களையும் கூட்டமைப்புப் பெறும். எனவே, தமிழ்மக்கள் தமது ஒட்டுமொத்த வாக்களிப்பு வீதத்தை அதிகரிப்பதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணசபையை தம்வசப்படுத்தி முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றும்- என்றார்.

## அரசியல் கைதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட மன்னார் மேல் நீதிமன்றத்துக்கு 24 வழக்குகள் பாரப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தும் முதல் நடவடிக்கை இது என்று அரசு கூறுகின்றது.

எஞ்சிய கைதிகளின் வழக்குகளும் விரைவில் விசேட நீதிமன்றங்களில் பாரப்படுத்தப்பட்டு விசாரணைகள் துரிதப்படுத்தப்படும் என்று சதீஸ்குமார் தெரிவித்தார். (உ-5)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் குறிப்பிட்டுள்ளது. கடந்த 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட பயண எச்சரிக்கைக் குறிப்பில், இலங்கையில் தேசியவாத எழுச்சி நிலவுவதாலும், மேற்குலக எதிர்ப்பு தீவிரமாக உள்ளதாலும், பாலியல் குற்றங்கள் அதிகளவில் இடம்பெறுவதாலும் அங்கு செல்லும் பிரிட்டன் குடிமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

சர்ச்சைக்குரிய இந்தக் கருத்துகளை நீக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு பிரிட்டனிடம் கோரியிருந்தது.

எனினும் இலங்கை அரசின் அந்த எதிர்ப்பைக் கருத்தில் எடுக்காத பிரிட்டன், பயண எச்சரிக்கையில் மாற்றம் செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஏற்றுமதி வருவாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினாலும் (64 மில்லியன் டொலர்) வீழ்ச்சியடைந்துள்ளது. ஆடைதயாரிப்பு ஏற்றுமதி வருமானம் குறைந்ததற்கு பருத்தி விலை குறைந்ததும் ஒரு காரணம் என்று இலங்கை மத்திய வங்கி கூறியுள்ளது.

அதேவேளை, ஜூன் மாதத்தில் இலங்கையின் இறக்குமதியும் 15 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி 25.6 வீதத்தினாலும், முதலீட்டுப் பொருள்கள் இறக்குமதி 25.1 வீதத்தினாலும் குறைவடைந்துள்ள போதிலும், பெற்றோலிய இறக்குமதி 16.3 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

ஜூன் மாதம் வரையிலான இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி 2.2 வீதத்தினால் (4965 மில்லியன் டொலர்) வீழ்ச்சியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதேவேளை இந்தக் காலப்பகுதியில் இறக்குமதிகள் 4.2 வீதத்தினால், (9666.5 மில்லியன் டொலர்) அதிகரித்துள்ளது.

## ஒட்டுக்குழுக்களின் அட்டகாசம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இன்னமும் முன்வைக்கப்படவில்லை. இழுத்தடிப்புப் போக்கே காணப்படுகிறது.

வடக்கில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தாமதமடைகின்றன. மீளக்குடியமரும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை வடபகுதி மக்கள் இன்னமும் அனுபவிக்கவேயில்லை. வடமகாண சபையைத் தவிர ஏனைய மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதே உரிமையை வடபகுதி மக்களும் அனுபவிக்கும் வகையில் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்றனர். ஆனால் மக்களது காணிகளில் நிரந்தப் படைமுகாம்கள் அமைக்கப்படுகின்றன.

குடாநாட்டில் இருந்து இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை. மக்களின் அன்றாட வாழ்க்கை மீதும் இவர்களின் தலையீடுகள் தொடர்கின்றன.

இதனைவிட கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் வலி.தெற்கு பிரதேச சபையின் புதிய கட்டடத்துக்கு ஆயுததாரிகளால் கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது. இது யாழ். குடாநாட்டில் இராணுவ ஒட்டுக் குழுக்களின் நடமாட்டம் இன்னமும் உள்ளது என்பதையே காட்டுகின்றது. இவர்களது செயற்பாடுகள் தொடர்கின்றன.

எல்லாவற்றையும்விட முக்கியமாக எமது மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைப்பதற்கு இலங்கை அரசுக்கு ஜப்பான் அழுத்தம் கொடுக்க வேண்டும்.- இவ்வாறு சிவில் சமூகப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் சிவில் சமூகப் பிரநிதிகள் சார்பில் வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம், முன்னாள் பேராசிரியரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை, சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சாரீய சுவாமிகள், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, நாக விகாராதிபதி ஸ்ரீ விமலதேரர், மாநகரசபை உறுப்பினர் மௌலவி சுபியான், கைத்தொழில் வர்த்தகர் சம்மேளனத் தலைவர் க.பூரணச்சந்திரன், மகளிர் அமைப்பு தலைவி சரோஜினி சிவசந்திரன், மாநகரசபை உறுப்பினர் என்.நாச்சியார் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-5)

## ஜப்பானின் அனுசரணை தொடரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் சந்தித்துப் பேசுவதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் வந்த அகாஷி தமிழ் மக்களின் உணர்வுகளைக் கேட்டறிந்தார். நேற்றுமுன்தினம் இலங்கை வந்திருந்த அவர், ஏற்கனவே அரச தரப்பு அமைச்சர்கள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசி இருந்தார்.

நேற்றைய சந்திப்பில் அகாஷி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுக்கும் கொழும்புக்கும் இடையில் தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு என்னாலான உதவிகளைச் செய்வேன். இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜப்பான் அரசு தொடர்ந்தும் அனுசரணை வழங்கும்.

ஜப்பானின் நிதி வளங்கள் பொருளாதார நிலைமைகள் பாதிக்கப்பட்டிருப்பினும்கூட எமது அரசு, அரசியல் தீர்வு மற்றும் நல்லிணக்கத்துக்கான அனுசரணையைத் தொடர்ந்தும் வழங்கும் என்றே எதிர்பார்க்கிறேன்.

தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்களில் அரைவாசியையாவது அவர்களுக்குக் கிடைக்க எங்களால் முடிந்ததை நாங்கள் செய்வோம்.

அமைதிக்காக போரில் கொடுக்கப்பட்ட விலை அதிகம். அதனால் மனவிரக்திகள் ஏற்படும். ஆனால் இந்த மனவிரக்திகளை எதிர்காலத்துக்கும் எடுத்துச் செல்வதன் மூலம் நீங்கள் எதனை அடையப் போகிறீர்கள்?

இங்கே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதன் ஊடாக அரசியல் தீர்வு ஒன்றைப் பெறமுடியுமா என்ற கேள்வி இருக்கத்தான் செய்கிறது. இதற்கு முன்னர் இப்படிப்பட்ட தெளிவான திட்டமிட்ட ஆவணம் ஏதாவது முன்வைக்கப்பட்டிருக்கிறதா? எந்த அரசுகளாகவது நாடுகளாவது அதனைச் செய்திருக்கின்றனவா?

செய்யப்படவேண்டியவைகள் ஏராளம் இருக்கின்றன என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. யாழ்ப்பாணத்திலேயே நிறைய முன்னேற்றங்கள் செய்யப்படவேண்டியுள்ளது. உடைந்த வீடுகள் இன்னமும் காணப்படுகின்றன. இங்கு கட்டி எழுப்பப்படவேண்டியவைகளாக அனேக விடயங்கள் உள்ளன. ஆனாலும் இப்போது வீதிகளில் காவலரண்கள் இல்லை. இராணுவத்தினர் குறைக்கப்பட்டிருக்கின்றனர் என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏ-9 வீதி திறக்கப்பட்டிருக்கின்றது.

போருக்குப் பின்னர் இப்படிப்பட்ட சாதகமான விடயங்களும் நடைபெற்றிருக்கின்றன. எப்போதுமே இருண்ட பக்கத்தை மட்டுமே பார்க்காதீர்கள்.

சமாதானத்தை, அமைதியை ஏற்படுத்த நீண்ட காலம் எடுக்கும். போரை வெல்வது கடினம். சமாதானத்தை வென்றெடுப்பது அதைவிடக் கடினம். அது பொறுமையைச் சோதிக்கும் நீண்ட பயணம் - என்றார். (உ-05)

## வெள்ளவத்தைக் கொலையாளி கடவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளவத்தை இராமகிருஷ்ண டெரஸ் வீதியிலுள்ள வீடொன்றில் வைத்து தனது தந்தையையும், தாயையும், தங்கையையும் தானே கொலைசெய்தார் என பிரசான் விசாரணைகளின் போது ஒப்புக்கொண்டார். அத்துடன், தமக்கு ஏற்பட்ட பணம் தொடர்பிலான பிரச்சினையே தாம் இவ்வாறானதொரு முடிவெடுப்பதற்குக் காரணமாக அமைந்தது எனவும் தெரிவித்தார்.

முக்கொலைச் சம்பவத்தின் பின்னர் தலைமறைவாகியிருந்த பிரசான் மின்னஞ்சலொன்றை அனுப்பி விசாரணைகளில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், தான் தற்கொலை செய்துகொள்ளப்போவதாகவும் பொலிஸாருக்கு ஜாலம் காட்டினார்.

பொலிஸாரின் அதிரடியான தேடுதல் நடவடிக்கைகளுக்கு மத்தியில் சம்பவம் இடம்பெற்ற நாள்முதல் இன்று வரை (நேற்று) தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் நேற்றுக்காலை 10.45 மணியளவில் கடவத்தைப் பகுதியில் வைத்து அப்பிரதேசப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் பிரசானிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, நான் அதிகமாகக் கடன்பட்டுள்ளேன். கடன்தொல்லையால் ஏற்பட்ட பிரச்சினையே என்னை இவ்வாறானதொரு செயலுக்குத் தூண்டியது. இந்தக் கடன்தொல்லைகள் எனது குடும்பத்தவருக்குத் தெரிந்தால் அவர்கள் தாங்கமாட்டார்கள் என்பதற்காகத்தான் நான் இவ்வாறானதொரு முடிவை எடுத்தேன்.

நான், எனது தந்தை, தாய், தங்கை ஆகிய நால்வருமே இறந்துவிடலாம் என எண்ணி , மரணத்தை ஏற்படுத்தக் கூடிய நஞ்சூட்டப்பட்ட உணவை எனது குடும்பத்தவருக்கும் கொடுத்து நானும் உட்கொண்டேன். நான் உண்ட உணவில் கலக்கப்பட்ட நஞ்சின் அளவில் வித்தியாசம் ஏற்பட்டதோ தெரியவில்லை. அதனால்தான் நான் உயிர்பிழைத்தேன். அதன் பின்னர் தற்கொலை செய்துகொள்வதற்கு என் மனம் அஞ்சியது.

நான் செய்தது தவறு என்பதை உணர்ந்து இன்று (நேற்று) காலை வெள்ளவத்தைப் பொலிஸாரிடம் சரணடைவதற்காகச் சென்றேன். அப்போதும் என் மனம் இடங்கொடுக்காமல் திரும்பிவிட்டேன் என்று பிரசான் தெரிவித்தார் என பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தனது தங்கையின் தங்க ஆபரணங்களை கொட்டாஞ்சேனையிலுள்ள அடகுக் கடையொன்றில் இரண்டரை இலட்சம் ரூபாவுக்கு பிரசான் அடகுவைத்துள்ளார் என வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியிருந்த சந்தேகநபரான பிரசானின் புகைப்படத்தைப் பிரசுரித்து அவர் தொடர்பான தகவல்கள் தெரியவந்தால் பொலிஸ் சேவை இலக்கங்களுக்கு உடனடியாக அறியப்படுத்துங்கள் என ஊடகங்களினூடாக வெளியிடப்பட்ட செய்தியே பிரசானை கைதுசெய்வதற்கு எமக்கு உதவியாக இருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈழத்தமிழர் விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரினீத் கௌர் தெரிவித்துள்ளார். இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அயல் நாடான இலங்கை யுடன் இந்தியா நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. இன்று இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியாவே விளங்குகிறது. இலங்கையில் அதிகளவு நேரடி முதலீடுசெய்துள்ள நாடாகவும் இந்தியாவே உள்ளது.

அதேபோல அங்குள்ள தமிழ் மக்கள் விடயத்திலும் இந்தியா பொறுப்புடன் செயற்படுகிறது. அதன் காரணமாகத் தான் அமெரிக்காவால் ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டி ஏற்பட்டது. தமிழர் விடயத்தில் இனியும் கரிசனையுடனேயே செயற்படும் - என்றார். (10)

## சீபா உடன்பாடு செய்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதால் உள்நாட்டு உற்பத்தியைப் பாதிக்கும் என்று இலங்கை அச்சமடைந்துள்ளது.

எனினும் 2000 மார்ச் தொடக்கம் நடைமுறையில் உள்ள சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் புதிய விடயங்களைச் சேர்ப்பது குறித்து ஆலோசனை செய்யத் தயாராக இருப்பதாக இலங்கை கூறியுள்ளது.

2010 ஜூனில் டில்லி சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவுடன் சீபா உடன்பாட்டைச் செய்துகொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்திருந்தார்.

ஆனால், அண்மையில் கொழும்பு சென்றிருந்த இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மாவுடன் அதுபற்றிப் பேச இலங்கை அரசு மறுத்து விட்டது.

சுதந்திர வர்த்தக உடன்பாடு தனியே பொருள்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டது.

ஆனால் சீபா உடன்பாடு பொருள்கள், சேவைகள் மற்றும் முதலீடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சீபா உடன்பாடு தொடர்பாக இலங்கையில் உள்ள சில வர்த்தகத் தரப்புகள் தவறான பரப்புரை செய்வதாக இந்திய வர்த்தக அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாட்டை செய்து கொண்ட முதலாவது நாடு இலங்கையாகும்.

1998 டிசெம்பரில் இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டு, 2000 மார்ச்சில் நடைமுறைக்கு வந்தது. சீபா உடன்பாடு குறித்த பேச்சுக்கள் 2005 பெப்ரவரியில் ஆரம்பமாகின.

2008 ஜூலை வரையில் 13 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு அதற்கு இறுதிவடிவம் கொடுக்கப்பட்டது. எனினும் இலங்கை தயாராக இல்லாததால், இந்த உடன்பாடு இன்னமும் கையெழுத்திடப்படவில்லை.

எனினும் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாக இந்தியாவே இருந்து வருகிறது. 2011இல் இருதரப்பு வர்த்தகம் 5.16 பில்லியன் டொலராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கல்விசார் தொடர்பாடல் செயற்திட்டத் திற்கு நிறுவன ரீதியாக மனப் பூர்வமாக உதவிகள் வழங்கிய அமரர் *இ.சங்கர்(செங்காரபிள்ளை)* அவர்கள் காலமான செய்தி யறிந்து மிக்க துயருறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாரிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
*அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம்.*

(c/2915)(6.14)

## மரண அறிவித்தல்

### *நாகலிங்கம் பாலேந்திரன்*

**(இலங்கை போக்குவரத்து சபை, கோண்டாவில், காரைநகர் முன்னாள் சாலைப் பரிசோதகர்)**



கோலாம்பூரைப் பிறப்பிடமாகவும் அள வெட்டியை வசிப்பிடமாகவும் தற்போது வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலேந்திரன் 23.08.2012 வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- அன்னபூரணி தம்பதியரின் அன்பு மகனும் துரையப்பா- கண்ணாம் பிகை தம்பதியரின் மருமகனும் இராஜே ஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற திருச்செல்வி மற்றும் இராஜேந்திரன் (புகையிரத இயந்திர சாரதி), மகேந்திரன் (நில அளவையாளர்), திருமதிகாந்தி ஆகியோரின் அன்பு சகோதரனும் துசந்தி, சுகந்தி (வங்கி உத்தி யோகத்தர், இலங்கைவங்கி), வாகீசன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோ கத்தர்), மோகனாந்தி (உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசிதர், தயாளன் (சுகாதார கல்வி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(22135)(3.6.7)

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

## வைத்தியசாலை அபிவிருத்திக்கு ரூ.41 மில்லியன்

மட்டக்களப்பு,ஓக.25

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயுள்வேத வைத்திய சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக மாகாண சுகா தார அமைச்சு 41 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக கிழக்கு மாகாண சுகா தார அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அசீஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயுள்வேத வைத்திய சாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் கூட்டம் மட்டக்களப்பு பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### *திருமதி அன்னம்மா கனகசபை*



பருத்தித்துறை, திக்கத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா கன கசபை அவர்கள் கடந்த (23.08. 2012) வியாழக்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - நாகாத்தை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபையின் அன்புமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை கணபதிப்பிள்ளை, இராஜசிங்கம், இராசம்மா ஆகி யோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி (மலேசியா), பிறைசூடி (இந்தியா), காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் தேவேஸ்வரி, யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தங்கலட்சுமி (இந்தியா), காலஞ்சென்ற இந்திராணி மற்றும் விஸ்வலிங்கம் (ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர்- மன்னார்), சபேஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லோகநாதன், கருணாநிதி, தயாநிதி, குகநாதன், விஸ்வநாதன், பார்த்தசாரதி, ஜனகன், விஜயசாரதி, அகிலன், அகிலா, அஜந்தன், உமாபதி, ரகுபதி, ஜனனி, பிருந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஞ்சேகுமார், பார்த்திக்கர்ணா, கீர்த்திக், சஸ்மிதா, மதிசூடி, அருள்சூடி, தயாதரன், மைத்திரேயன், கௌதமன், ஜெனோசிகன், கோபிகன், கிரிஷாந், சோபிதா, அமிற்றா, விஸ்வேந்திரா, வர்ஜினி ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று முன்தினம் (23.08.2012) வியாழக் கிழமை மாலை 6 மணியளவில் திக்கம் இந்து மயானத்தில் இடம் பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் வட மேற்கு,
அல்வாய், திக்கம்.

(18730)(3.14)

தகவல்
மகன்

## மூன்றாம் ஆண்டின் நினைவில்.........



மண்டை தீவு மண்ணில் 10*03*1943
இறைவன் அடியில் 28*08*2009

*அமரர்*
*தம்பியப்பா*
*தெட்சணாமூர்த்தி*
(உதவி திட்டமிடல் பணிப்பாளர் - வேலணை)
திதி - பூர்வபக்க நவமி - 25.08.2012

நெஞ்சில் உறைந்த நீங்கா நினைவுடன்............

19/2 பெருமாள் கோயில் தெற்கு வீதி,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

(22137)(3.6.7)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### *திருமதி சிவக்கொழுந்து-பாக்கியம்*



பெரியவிளான் இளவாளையைப் பிறப்பிடமாகவும், திருநாவற்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக் கொழுந்து -பாக்கியம் கடந்த (23.08.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந் துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான உருத்திரசிங்கம், கேசவலிங்கம், பாலசிங்கம், சுதாகரன் மற்றும் மகேஸ்வரி, இரஜ லெட்சுமி(ஜேர்மனி), பரமேஸ்வரி, சரோஜா, சோமசுந்தரம் (கனடா), சிவ யோகம், சந்திரா,இந்திரா, சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயா ரும்,காலஞ்சென்றவர்களான இராசதுரை, நாகம்மா, ஆகியோரின் பாசமி கு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கோதண்ட பாணி, தெய்வே ந்திரம், லோகநாதன் மற்றும் லோக நாயகி, நவரட்ணம் (ஜேர்மனி), தனலட்சுமி(கனடா), கந்தசாமி, மதிவதனா (கனடா), இரட்ணராஜா, சிவராசா (சவுதி), ராதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (26.08.2012) ஞாயிற்றுக் கிழமை பி.பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளிற்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

228, திருநாவற்குளம்,
வவுனியா.

(22145)(3.14)

தகவல்
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

60 நாள் பூர்த்தியடைந்த (அல்சேஷன்) ஆண் குட்டிகள் புத்தகத்துடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771510306
(22146)(3.14)

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தி தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உண்டு.
*அழையுங்கள்*-GUNAA BEST PC
*0779086737*
(22150)(9)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நல்லின, சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், விற்பனைக்குண்டு.

★ றாஜீவ் நவாலி வீதி,
ஆனைக்கோட்டை
T.P - 0776090926
★ கதிர் வேளாண் கிளிநொச்சி
T.P - 0212280007
0772046803
(22143)(3.14)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையில் நீண்ட காலம் நிர்வாக சபை உருப்பினராக இருந்து சபையின் பணிகள் யாவற்றிலும் தொண்டாற்றி சபையின் வளர்ச்சிக்கு உதவிய **இ.சங்கர்** அவர்களின் இழப்பு எமது சபைக்கு ஈடுகட்ட முடியாத ஒன்றாகும். அன்னாரின் இழப்பால்துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

*சைவ பரிபாலன சபை*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 24 . 07 . 1953
மறைவு 26 . 07 . 2012

*அமரர்* ***தர்மலிங்கம் இரத்தினேஸ்வரன்***
***(கிராம உத்தியோகத்தர்)***

*கேணியடி, கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(22147)(9.14)

குடும்பத்தினர்

## இதய அஞ்சலி



### *இந்திரராசா சங்கர்*
### *(செங்காரபிள்ளை)*

**வீழ்ந்தது விக்ரோரியாவின் விழுதொன்று**

வேரோடு முளைத்து விழுது விட்ட விருட்சமாய்
ஊரோடுறவான அறிஞன்- தனக்குப் பேர் தேடி
அலையாத பெருமகன் ஊடகத்தை நாடித் தன்னை
உயர்த்தாது தன் பணியால் ஊடகத்தை உயர்த்தி வைத்த
சான்றோன் எங்கள் சங்கர் - என்று உரிமையுடன்
கூறிவந்தோம். தமிழ் என்றால் தன்னை மறந்து
தத்துவங்கள் பேசிடுவீர். உங்கள் ஆங்கிலத்தின்
ஆழத்தை அறிந்தவர் யார்? தாயகத்தை நேசித்துப் பலர்
நெஞ்சகத்தே குடி கொண்டிர்! போய்விட்டீராமே!
இல்லை! பாரதிபதிப்பகத்தின் எங்கள் வெளியீடாம்
125ஆம் ஆண்டு மலரில் இருக்கின்றீர் இறவாமல்!

*விக்ரோரியா கல்லூரி சமூகம்,*
*பழைய மாணவர் சங்கம், சுழிபுரம்.*

(22141)(9.14)

# மரண அறிவித்தல்

## திருமதிகௌரிநாயகி நேசராஜா



யாழ்ப்பாணம்,கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரிநாயகி நேசராஜா நேற்று முன்தினம் (23.08.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காரைநகர், பலகாட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் செல்வரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மருமகளும், நேசராஜாவின் அன்பு மனைவியும், சஞ்சீவின் அருமைத் தாயும், கவிதாவின் அன்பு மாமியும், திரிஷரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடராசா, பரமசிவம்பிள்ளை(சட்டத்தரணி) மற்றும் கோமளம், கனகராசா ஆகியோரின் அருமைச் சகோதரியும்,புனிதவதி, காலஞ்சென்ற கலாவதி மற்றும் இந்திராவதி (லண்டன்), ரஞ்சினி(லண்டன்), ரவீந்திரி, வனிதா, சிவசீலன், காலஞ்சென்றவர்களான கந்தசாமி,பத்மாவதி மற்றும் செல்வரத்தினம்,பாக்கியலக்சுமி ஆகியோரின் மைத்துனியும், யோகநாதன், கிருபா ஆகியோரின் சம்பந்தியும், பரமானந்தன் (பொறியியலாளர்), சின்னப்பு(பொறியியலாளர்),டாக்டர் இராமநாதன்,டாக்டர் குகதாசன், தேவராஜா (முகாமையாளர்,கொமர்ஷல் வங்கி), சிவசுதன், மதிவதனி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 9மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.நேசராஜா (கணவர்).
நே.சஞ்சீவ் (மகன்).

239, பலாலி வீதி,
கந்தர்மடம்.

(22136)(5-6-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23.02.1966

மறைவு
06.09.2011



## திருமதி றெஜிதா தன்பாலசிங்கம்

திதி:- பூர்வபக்க நவமி 25.08.2012

அன்பின் பிறப்பிடமாய் அடக்கத்தின் அணிகலனாய்
அகல்விளக்காய் என் உள்ளத்தில் நிறைந்திருந்தாய்
இல்லத்தரசிக்கு இலக்கணமாய் வாழ்ந்து நின்றாய்
இல்லறத்தின் மாண்புக்கோர் ஒப்பில்லாத வித்தகியாய்
என் உள்ளக் கோயிலில் வீற்றிருந்து ஒளிபரப்பினாய்
உன் பிரிவு தினம் தினம் என்னை அனு அனுவாய் கொல்லுதம்மா

முத்தான பிள்ளைகள் நாம் மூன்றுபேரும்
முக்கனிகளாய் உன் நிழலில் வாழ்ந்திருந்தோம்
சடுதியாய் நீங்கள் எமைப் பிரிந்ததனால்
சக்தியற்ற நடைப்பிணங்கள் ஆனோம் அம்மா
அருகிலிருந்து அரவணைத்து அறுசுவை உணவூட்டி
அண்ணாவுக்க ``பாங்க்``வேலை கிடைக்குமா? என்று ஏங்கினீர்களே
இன்று அண்ணாவும் ``பாங்கில்``வேலைக்குச் சேர்ந்து விட்டார்
இன்னும் வந்து பாராமல் இருப்பதுதான் ஏனம்மா?
நீங்கள் கண்ட கனவை நனவாக்கும் வகையில்
நாங்கள் இங்கு என்றும் வாழ்ந்திடுவோம்
ஓராண்டென்ன? ஓராயிரம் ஆண்டானாலும் உங்களை
எம்முள்ளத்தில் இருத்திப் பூசிப்போம் அம்மா
உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்முடனே நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

**- குடும்பத்தினர்.-**

(22132) (2-6-7)


# ஈரவிழிகளுடன்...

எம் ஆசானாய்
எம்மவர்க்குப் பேராசானாய்
உலக நெறித் தத்துவத்தை
உணர்ந்துரைத்த உத்தமரே!
எம்மை விட்டுத் தனியாக
பிரிந்து தான் சென்றதேனோ?

கரை காணா அறிவொளியை
எப்படி இனி நாம் பெறுவதையா?
ஒளி நிறைந்த உம் விழிகளை
எப்போ நாம் காண்பதையா?
எம்மை அழகுறச் சிற்பமாக்கிய
எம் சிற்பி மறைந்ததேனோ?

சந்தேகம் என்றவுடன் - அருகில்
நீ வருவாயே !
உம் பணியைப் பெற்று
உயிர் பெற்ற நாமெலாம்
ஐயா, ஐயா என்று
அழைக்கின்ற குரல்கேட்டு
எழுந்து எமைப் பாரையா

நீர் மறைந்தாலும்
உம் பணியை எடுத்துரைக்க
உம் பெயரைப் பறைசாற்ற
பாரதி பதிப்பகம் இங்குண்டு
என்றுமே எங்கள் இதய நதியில்
ஓடமாய் உங்கள் நினைவுகள் .



பிறப்பு
21.10.1937

இறப்பு
23.08.2012

அமரர்

## இந்திரராசா சங்கர்
## (செங்காரபிள்ளை)

(உரிமையாளர், பாரதி பதிப்பகம்)

**பாரதி பதிப்பக ஊழியர்கள்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பூச்சியத்துக்குள் ஓர் இராச்சியம் நடத்தும் எண்ணம் வேண்டாம்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே காண்பது என்ற தனது அழுங்குப்பிடியைக் கைவிடுவதற்கு, அசைந்து கொடுப்பதற்கு, அரசாங்கம் ஆக்கபூர்வமான சமிக்ஞை எதனையும் காட்டுவதாக இல்லை. பதிலாக, அதனூடு மட்டுமே, அந்த மார்க்கமே தேவைதாது என்று இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில், கடந்த பல தசாப்தங்களாக, அவ்வப்போது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்த சிங்கள அரசுகள், தமது மேலாண்மை உரிமைகளை நிலைநாட்டும் போக்கிலும், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பிடுங்கி எறிந்து, அவர்களை ஆளப்படுவோராக ஆக்கும் வஞ்சக நோக்கிலுமே கண்ணும் கருத்துமாக இருந்தன.

இந்தியா மற்றும் அனைத்துலக சக்திகளின் அனுசரணையுடன் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றமை வரலாறு. காலத்துக்குக் காலம், வெளிநாடுகள் இட்ட அழுத்தங்களின் போதும், தமிழர்கள் நடத்திய போராட்டங்களாலும் உண்டான தவிர்க்கமுடியாத நிலையில், தீர்வு குறித்துப் பிரஸ்தாபிப்பதும் சில உரிமைகளை அரைவேக்காடாகக் கிள்ளித் தெளிப்பதுமே இலங்கை அரசின் நீண்டகால வழமையும் போக்கும் ஆகிவிட்டன.

அந்த வரிசையில், தென்னாபிரிக்க அரச தலைவர்களினதும் ஜப்பானிய ராஜதந்திரி யசூசி அகாஷியினதும் உதவியுடன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு அக்கறை உள்ளதாக அரசு சமிக்ஞை காட்டி இருக்கிறது இப்போது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் எந்த வழியிலேனும் உள்வாங்குவதே அரசின் உள்ளார்ந்த திட்டம் என்பதனை எவரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை!

தமது நியாயமான முன் நிபந்தனைகளை ஏற்பதற்கு மறுக்கும் நிலையில், அரசின் உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தாம் சேர்ந்துகொள்ள முடியாது என்பது கூட்டமைப்பின் திட்டவட்டமான நிலைப்பாடு. அதனால், வெளிநாட்டு இராஜதந்திரிகள், வெளிநாட்டு அரச பிரதிநிதிகள் ஊடாக கூட்டமைப்பைத் தனது வசப்படுத்தும் உத்தியை கொழும்பு அரசு இப்போது கையில் எடுத்துள்ளது. இது விடயத்தில் அரசாங்கத் தரப்பு பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்கின்றது.

இலங்கைக்குக் கடந்தவாரம் விஜயம் செய்த தென்னாபிரிக்க வெளிவிவகாரத்துறைப் பிரதி அமைச்சர் மற்றும் ஜப்பானின் இராஜதந்திரி யசூசி அகாஷி ஆகியோர் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரைச் சந்தித்துப் பேசியமை, அரசின் தூண்டுதலினாலேயே என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

இதே வேளை -

இலங்கை அரசாங்கம், தனது சொந்தத்தில் உகந்த அரசியல் தீர்வுப் பொதி எதனையும் இதயசுத்தியுடன் வெளியிடாமல், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற தனது பொறிக்குள் இழுத்து விட முயன்றுவருவது ஒன்றும் இரகசியம் அல்ல.

இதன் மத்தியில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, அரசுடனான பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கு, மேலேகுறிப்பிட்ட இரண்டு வெளிநாடுகளின் பிரமுகர்களூடாகச் சமிக்ஞை காட்டியமை குறித்து அரசின் மூத்த அமைச்சரும், ஏற்கனவே இரண்டு தரப்புகளுக்கும் இடையேயான பேச்சுக்களில் பிரதான வகிபாகம் தாங்கியவருமான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, 'நக்கல்' பாணியில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

எமது நாட்டுக்கான தீர்வு குறித்துப் பேச்சு நடத்துவதற்கு ஏன் வெளிநாடுகளின் உதவியை நாடுகிறீர்கள் என்பது அவரது கிண்டல். உங்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்று தாகம் ஏற்பட்டால் தண்ணீர் பருக்குவதற்கு நாம் (அரசு) தயாராக இருக்கிறோம். இருந்தும், ஏன் உங்களுக்குத் தாகமாக இருப்பதாக கதறுகிறீர்கள் என்பது அவரின் நக்கல்!

இதற்கிடையில், ஜாதிக விமுக்தி பெரமுனவும் (ஜே.வி.பி) அதன் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிடில், வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் காலம் திரும்பவும் வரக்கூடும். அதற்கான அத்திபாரத்தைப் போடவேண்டாம். வடக்கில் வாழும் மக்களின் காணிகளை அரசு கையகப்படுத்தி வரும் விடயத்திலும், தமிழ் அரசியல் கைதிகளின் குறைகளைத் தீர்ப்பதிலும் அரசு நியாயமாக, பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டுமெனவும் முன்னர் நாடாளுமன்றில் கருத்துவெளியிட்டிருந்தார்.

இதனை இங்கு ஏன் குறிப்பிடுகிறோம் என்றால், இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தில் மதில்மேல் பூனையாக இருந்துவரும் ஜே.வி.பி., அவ்வப்போது நிலவும் அரசியல் சூழ்நிலைக்குத் தக்கவாறு, அரசியல் இலாபம் தேடும் போக்குடன், தமிழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் போக்கிலேயே கருத்து வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. தீக்குள் விரலை வைத்து ஏன் அதனைச் சுட்டுக்கொள்ள வேண்டும் என்ற போக்கை அவதானிக்க முடிகிறது.

மொத்தத்தில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதில் தென்னிலங்கைத் தலைவர்கள், ஐக்கியதேசியக் கட்சியும் சரி, ஜே.வி.பி.யும் சரி தமக்குள்ள குறைந்தளவு அரசியல் பலத்தினால் தமிழர்களுக்கு உதவ முடியாது; உதவ மாட்டா என்பது மிக வெளிச்சமாகத் தெரிகிறது.

அதற்கும் மேலாக, அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகளான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிகஹெல உறுமய ஆகியன, இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தமோ, அதன்பாற்பட்ட எந்தவகையான செயற்பாடுமோ இனியும் வேண்டாம் என்று குமுறி அரசின் செயற்பாடுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் பக்கபலம் சேர்த்து வருகின்றன.

இன்னொரு புறத்தில்-

இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்பதும் அதனைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதும் உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் மேலோங்கி வருகிறது என்பதனைக் கருத்தில் கொள்ளாமல் கண்ணை மூடிக்கொள்ளவும் இயலாது.

ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும், அதற்கான தெரிவுக்குழுவும் தமிழருக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகளைத் தக்க வடிவத்தில், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல், வாழ்வியல் அபிலாசைகளைப் புறந்தள்ளிவிடும் வகையில் அமையக் கூடாது. அவர்களின் மொழி, நில, நிர்வாக உரிமைகள் எதுவும் சீண்டப்படாத வடிவம் கொண்டதாகவே தீர்வுப் பொதி வடிவமைக்கப்பட வேண்டும்.

முப்பது வருட உரிமைப் போரில் தோல்வி கண்டு விட்டதால், தமிழர் சமூகம், சிங்களப் பெரும்பான்மை அரசு வழங்கும் அற்ப சலுகை சார் உரிமைகளைத் தமிழர் சமூகம் ஏற்றுக்கொள்ளாது என்பதே அவர்களின் இதய நாதமாக இன்னமும் ஒலிக்கிறது.

இதனை இலங்கை அரசு மட்டுமன்றி, இந்தியா உட்பட்ட அனைத்துலக அரசுகளும் அவர்தம் ஆட்சியாளர்களும் இராஜதந்திரிகளும் மனதில் கொள்ளாவிடில், பூச்சியத்திற்குள் ஓர் இராச்சியம் நடத்தும் வேடிக்கையாகவே அது அமையும்!

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வடக்கிலிருந்து 18,000 மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஒக.25

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 9 ஆயிரத்து 219 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை நாடெங்கிலும் நடைபெறவுள்ளது. இதில் இந்த வருடம் வடமாகாணத்தில் 18 ஆயிரத்து 105 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 9 ஆயிரத்து 219 மாணவர்களும் கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 307மாணவர்களும் முல்லைத்தீவில் ஆயிரத்து 720 மாணவர்களும் வவுனியாவில் 2 ஆயிரத்து 963மாணவர்களும் மன்னாரில் ஆயிரத்து 896மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

இந்தப் பரீட்சை வடமாகாணத்தில் 200 பரீட்சை நிலையங்களில் நடைபெறுவதோடு 85 இணைப்பு நிலையங்களும் 6பிராந்திய சேகரிப்பு நிலையங்களும் இயங்கும் என மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இவர்கள் பரீட்சை எழுதுவதற்கு 90 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

பரீட்சார்த்திகளுக்கான காகிதங்கள் மற்றும் உபகரணங்கள் ஏற்கனவே எடுத்து வரப்பட்டுள்ளன.

வினாத்தாள் பொதிகள் இன்று எடுத்து வரப்படும் என்று கூறப்பட்டது. இதேவேளை பரீட்சார்த்திகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற பாடசாலைகளில் நேற்று விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் விசேட விடுமுறையில் மாநாட்டுக்கு வரலாம்

## பொதுச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக. 25

இலங்கை ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தாபன விதிக்கோவைக்கு அமைய விசேட விடுமுறை பெற்று வவுனியாவில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளமுடியும் என்று பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம்திகதி வவுனியாவில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 55ஆவது பேராளர் மாநாடு நடைபெறவுள்ளது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பல நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.அதற்கு தமது சங்கத்தில் அங்கத்துவம் பெறும் ஒவ்வொரு ஆசிரியரும் விசேடவிடுமுறைபெற்று அந்த மாநாட்டில் கலந்துகொள்ளமுடியும்.

தாபன விதிக்கோவையின் 22 ஆம் அத்தியாயத்தில் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு உள்ள உரிமைகள் சலுகைகள் பற்றி குறிப்பிடுகின்றது. அதில் ''தேசிய மாநாடு ஒன்றில் பங்குபற்ற தொழிற்சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒருநாள் விசேட விடுமுறையும் இலவசரயில் பயணச்சீட்டும் பெறும் உரிமை உண்டு என்றுள்ளது.

பாடசாலைகளில் இந்தச் சீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும். அதனை நிரப்பி அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் கையெழுத்துப் பெற்று விரும்பும் ரயில் நிலையத்தில் சென்று ஆசிரியர்களுக்கான இலவச ரயில் பயணச் சீட்டைப் பெற்று பயணிக்க முடியும்.

ரயில் பயணத்துக்கு மாத்திரமே இலவச போக்குவரத்துக்கான உரிமை உண்டு என்று தாபன விதிக்கோவை குறிப்பிடுகிறது. வடமாகாணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ரயில் ஆணைச் சீட்டு மட்டும் தற்போதைக்குச் சாத்தியமில்லை. ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இது உதவும். எனவே வடமாகாண ஆசிரியர்கள் உட்பட சங்கத்தில் அங்கத்துவமுள்ள ஆசிரியர்கள் அனைவரும் தாபன விதிக்கோவைக்கு அமைய விசேட விடுமுறை பெற்று மாநாட்டில் கலந்துகொள்ளமுடியும். தனிப்பட்ட விடுமுறை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர் என்பதை உறுதிப்படுத்தி ஒவ்வொரு ஆசிரியருக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் வழங்கும் பத்திரத்தை பாடசாலையில் சமர்ப்பித்து மாநாடு சென்று வந்ததை ஆசிரியர்கள் உறுதிப்படுத்தலாம் என்று அவர் மேலும் கூறினார். (ம-4)

# முதல் ஆறு மாத காலத்தில் வடக்கில் 249 நிறுவனங்கள் சேமலாபத் திட்டத்தில்

## பிரதித் தொழில் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக.25

வடக்கில் இந்த ஆண்டின் முதல் 6 மாத காலப்பகுதியில் 249 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ளன என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் உள்ள தொழில் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தில் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் சகல பணியாளர்களும் உள்வாங்கப்படுவதன் மூலமே அவர்கள் எதிர்காலத்தில் இதனால் பயனடைய முடியும்.

இந்த ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஜூன் வரையான ஆறு மாத காலப்பகுதியில் 56 தொழில் முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகளில் 40 தொழில் முறைப்பாடுகள் திணைக்களத்தால் தீர்க்கப்பட்டுள்ளன. ஏனைய 16 முறைப்பாடுகள் தீர்க்கப்படாத நிலையில் உள்ளன. தீர்க்கப்படாத இந்த 16 முறைப்பாடுகளும் விரைவில் தீர்த்து வைக்கப்படும்.

வடக்கில் ஊழியர் சேமலாப நிதி திட்டத்தின் கீழ் சகல தொழில் நிறுவனங்களையும் உள்வாங்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

# தேர்தல்கள் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.25

அளவெட்டி- மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கூறினார். இந்தச் சங்கத்தில் 13 கிளைகளுக்கும் ஒரே சமயத்தில் கிளைக்குழுத் தெரிவுத் தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

அளவெட்டி கூட்டுறவாளர் வீதி கிளைக்கு இ.பாலச்சந்திரன், அலுக்கை கிளைக்கு வி.ஜெயந்தன், ஆலடி கிளைக்கு க.நிமலன், முதலி யார் கோயிலடி கிளைக்கு செ.செல்வ குமாரன், பொன்னிப்புலம் கிளைக்கு வை.கைலைநாதன், கணேஸ்வரம் கிளைக்கு தி.வித்தககலாநிதி, அளவெட்டி தெற்கு கிளைக்கு வே.பிரதீஸ்குமரன், மல்லாகம் சந்தி கிளைக்கு பா.வாகீசன், கல்லாரை கிளைக்கு த.கண்ணதாசன், குளமங்கால் கிளைக்கு அ.விமலராஜ், கலைநகர் கிளைக்கு க.கமலநாதன், மல்லாகம் நீதிமன்ற வீதி கிளைக்கு இ.தயாகரன்,மல்லாகம் கே.கே.எஸ். வீதி கிளைக்கு சி.குணாளன் ஆகியோரின் தலைமையில் இந்த கிளைக்குழு தெரிவு இடம்பெறும் என்றும் கூறப்பட்டது. (ம-17)

# குறிகாட்டுவான் சேவை தனியார் பஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஒக.25

குறிகாட்டுவான் 776 வழிப்பாதை சிற்றூர்திகள் தற்போது யாழ். தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் குறித்த பஸ் சேவை யாழ். சத்திரச் சந்திக்கும் அஞ்சல் அலுவலகத்துக்கும் இடையில் இருந்து இடம்பெற்று வந்தன.

தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் குறிகாட்டுவான் செல்லும் பயணிகள் யாழ். பஸ் நிலைய தனியார் பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# வவுனியா தெற்கு பிரதேச சபையின் பணிகள் புதிய கட்டடத்தில் ஆரம்பம்

வவுனியா,ஓக. 25

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கென 4 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் அமைச்சர்களால் திறந்து வைக்கப்பட்டு கடந்த புதன்கிழமை தொடக்கம் பிரதேச சபையின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக சிவலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

நேரியகுளம் வீதி, நெளுக்குளம் பாடசாலைக்கு அண்மையில் இந்தப் பிரதேச சபைக்குரிய காணியில் இந்த இரண்டு மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு தற்போது இயங்கிவருகிறது.

நேரியகுளம் வீதி, நெளுக்குளம் பாடசாலைக்கு அண்மையில் இந்தப் பிரதேச சபைக்குரிய காணியில் இரண்டு மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

இந்த 4 கோடி ரூபாவில் எல்.ஜீ.ஐ.ஐ.ரி. நிறுவனத்தின் 70 வீதமான நிதியும், உள்ளூர் கடன் அபிவிருத்தி அதிகாரசபையின் 23 வீதமான நிதியும் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் 7 வீதமான நிதியும் உள்ளடங்குகிறது.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இந்தக் கட்டடத்தை நிர்மாணித்துள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி நினைவுக் கல்லிலும் ஜனாதிபதியின் பெயர் பொறிக்கப்பட்டது.

ஆனால் அன்றைய தினம் வேறு நிகழ்வுகளில் ஜனாதிபதி கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டு அந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை. பதிலாக மூன்று அமைச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, தினேஸ் குணவர்த்தன, குணரட்ண வீரக்கோன் ஆகியோரே நிகழ்வில் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.

முன்னர் இந்தப் பிரதேச சபைக்கென நிரந்தரக் கட்டடம் எதுவும் இல்லாததனால் 2000 ஆம் ஆண்டிலிருந்து நெளுக்குளம், வேப்பங்குளம் பகுதியை அண்மித்து வாடகைக்கு தனியார் வீடு ஒன்றில் சபை இயங்கி வந்தது.

இந்தநிலையில் கடந்த புதன்கிழமை தொடக்கம் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது என்று சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

## வற்றின குளங்களை மூடி காணி வழங்க ஏற்பாடு

### விவசாயிகள் பாதிப்பு

வவுனியா, ஓக.25

வவுனியா நகரப் பகுதியில் சில குளங்கள் மண் போட்டு நிரப்பப்பட்டு வருகின்றன என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். தற்போது நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியை அடுத்து வவுனியாவில் பல குளங்கள் வற்றிப்போயுள்ளன.

இந்த நிலைமையை சில அரசியல்கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி குளங்களை மண் போட்டு நிரப்பி பொதுமக்களுக்கு காணி வழங்க ஏற்பாடு செய்துள்ளன.

ஏற்கனவே வவுனியா பண்டாரிக்குளத்துக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும் வவுனியா பத்தினியார் மகிழங்குளம் உட்பட பல்வேறு குளங்களை திட்டமிட்டு அபகரித்த அரசியல் கட்சிகள் குளங்களை மண் போட்டு நிரப்பிவருவதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். பல ஏக்கர் விவசாய நிலப்பரப்புக்கான நீர் விநியோகம் தடை செய்யப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-402)

## பிரதேச செயலகங்களுக்கான கட்டடவேலைகள் ஆரம்பம்

அக்கராயன், ஓக.25

துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களின் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலகக் கட்டடப் பணிகள் ஓராண்டுக்கு மேலாக இடம்பெறாமல் இடைநிறுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கான பணிகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் மேல் மாடிக்கான கட்டடப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீள்குடியமர்வு செய்யப்பட்ட இந்தப் பிரதேச செயலகப் பிரிவுகளில் நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு வருகை தருவதால் பிரதேச செயலகங்களில் காணப்படும் வசதியீனங்களால் மக்களுக்கான சேவைகளை சிறப்பாகச் செய்வதில் இடர்கள் ஏற்படுகின்றன என்று அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பிரதேச செயலகங்களில் காணப்படும் நெருக்கடிகள் நிவர்த்தி செய்யப்படும்.

இந்தப் பிரதேச செயலகங்களுக்கான கட்டடப் பணிகள் நிறைவடைந்து புதிய கட்டடத்தில் பணிகள் இடம்பெறும் போது தான் தற்போது மேற்படி பிரதேச செயலகங்களில் காணப்படும் நெருக்கடிகள் நிவர்த்தி செய்யப்படும் என நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (எ-18)



வவுனியா பொலிஸாரின் பரிசோதனை நிகழ்வு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. வவுனியா சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஹேமந்த பொலிஸாரின் உடை மற்றும் துப்பாக்கிகளையும் பார்வையிட்டார். (எ)

## மின்சார மயானம் திங்களன்று திறப்பு

வவுனியா,ஓக. 25

வவுனியா பூந்தோட்டத்தில் மின்சாரம் மூலம் உடல் தகனம் செய்யும் மயானம் நாளைமறுதினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

வவுனியா நகரசபைத் தலைவர் ஐ.கனகையா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

42மில்லியன் ரூபா செலவில் இந்த மின்சார மயானக் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாக திறக்கப்படாது இழுபறிபட்டு வந்த பூந்தோட்ட மின்சார மயானம் திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-402-400)

## நல்ல விளைச்சல்: வெங்காயத்தை விற்க முடியவில்லை

நெடுங்கேணி பிரதேசத்துக்கு உட்பட்ட கீரிசுட்டான், கற்குளம், பட்டிக்குடியிருப்பு, பிரிந்தகுளம் போன்ற கிராம மக்கள் வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டு பெரும் விளைச்சலைப் பெற்ற நிலையில் அதனை விற்பனை செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

சர்வோதய நிறுவனத்தால் மானிய அடிப்படையில் மேற்படி பகுதி மக்களுக்கு விதை வெங்காயம் வழங்கப்பட்டது. ஒரு குடும்பத்துக்கு 2 அந்தர் வீதம் வழங்கப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டனர். அதிக விளைச்சலைப் பெறக்கூடிய வகையில் அதனைப் பராமரித்தும் வந்தனர். இதனால் வெங்காய விளைச்சல் அதிகரித்துக் காணப்பட்டது. இருந்தபோதிலும் உரிய விலைக்கு வெங்காயத்தை விற்பனை செய்ய முடியவில்லை என அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வெங்காய விற்பனையை மேற்கொள்வதற்கு உதவுமாறு வேண்டிநிற்கின்றனர். (எ-435)

## ஓரளவு குறைந்துள்ளது குடிதண்ணீர் தட்டுப்பாடு

### துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிப்பு

அக்கராயன், ஓக.25

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டுக்கான நெருக்கடி ஓரளவு குறைந்துள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதேச செயலர் மேலும் தெரிவித்ததாவது:-

துணுக்காயில் குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாக மக்கள் முறைப்பாடு தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் குடிதண்ணீருக்கான தேவையை நிறைவேற்ற முல்லைத்தீவு அரச அதிபர் நிதி ஒதுக்கியிருந்தார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவும் கிராமங்களுக்கு குடிதண்ணீரை வழங்கி வருகின்றோம். மழை இல்லாமல் இருப்பதனால் பல குளங்கள் நீர் வற்றி வறண்டு காணப்படுகின்றன. மழை கிடைக்குமாக இருந்தால் குடிதண்ணீர்ப் பிரச்சினை இல்லாமல் போகும். மழையை எதிர்பார்த்து மக்கள் காத்திருக்கின்றனர்.

குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுவதால் குடி தண்ணீரை மக்களுக்கு வழங்கும் செயற்பாட்டிலேயே மும்முரமாக ஈடுபட்டு வருகிறோம்.

குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் குடிதண்ணீரை மக்களுக்கு வழங்கும் செயற்பாட்டிலேயே மும்முரமாக ஈடுபட்டு வருகிறோம்.

எங்களால் முடிந்த உதவிகளைச் செய்துவருகிறோம். மழை பெய்வது பிந்திக் கொண்டிருப்பதால் குடிதண்ணீருக்குத் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவக்கூடும். ஆனாலும் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம் - என்றார். (எ-18)

## துன்பப்படும் மக்களுக்கு உதவுவதையே எனது பணியாகக் கொண்டுள்ளேன்

### அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், ஓக.25

துன்பப்படும் மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கு சென்று அவர்களுக்கு உதவுவதையே எனது பணியாகக் கொண்டுள்ளேன் என்று வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.



மன்னார் எருக்கலம்பிட்டியில் 9 கோடி 50 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள பெரிய அபிவிருத்தி பணிகளின் முதற்கட்டமாக இரண்டு கிலோ மீற்றர் எருக்கலம்பிட்டி பிரதான பாதையின் புனரமைப்பு திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் றிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அவைகளை நாம் பேசி தீர்த்துக் கொள்ள முடியும்.

என்னால் முன்னெடுக்கப்படும் மக்கள் நலன் திட்டங்களை இனவாத ரீதியில் காண்பித்து அதில் குளிர்காய பல சக்திகள் எதிர்பார்க்கின்றன. தாம் வாழ்ந்த மண்ணில் எவராக இருந்தாலும் அவர்கள் வாழ்வதற்கு பூரண உரிமையுண்டு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் மக்களது வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செய்கின்ற எமக்கு எதிராக பல சதிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் எனது அரசியல் செயற்பாட்டை தடுத்து நிறுத்தி விடவும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இந்த நாட்டில் சகலரும் சமமான உரிமைகளை அனுபவிக்க வேண்டும் - என்றார். (எ-12)

## ஆயிரத்து 400 பேர் பப்பாசி செய்கையில்

யாழ்ப்பாணம், ஓக.25

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 400 விவசாயிகள் பப்பாசிச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர் என்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பப்பாசிச் செய்கையில் 'ரெட்லேடி' எனும் இனமே அனைத்து விவசாயிகளாலும் பயிரிடப்படுகிறது. 2007 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட இந்த இனச் செய்கையைத் தற்போது 80 சதவீதமானவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இது பயிரிடப்பட்டு 6 மாதகாலத்தில் பயனைத் தரக்கூடியது. அறுவடை இலகுவானது. கூடிய விளைச்சல் தரக்கூடியது. இதனாலேயே இந்த இனத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுகின்றனர்.

இவற்றைத் தவிர உள்ளூர் இனம், ரட்னா இனம் போன்றவையும் பயிரிடப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-13)

## ஆசிரியர்கள் இடமாற்றம்

தென்மராட்சி, ஓக. 25

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றிய ஒன்பது ஆசிரியர்கள் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றாம் தவணை ஆரம்பத்தின் போது தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த ஆசிரியர்கள் கடமையாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)



தற்போது நிலவும் கடும் வறட்சியை அடுத்து சரவணை கிழக்கு மக்கள் குளங்களைத் துப்புரவு செய்து வருகின்றனர். சரவணை கிழக்கில் உள்ள கெழுவுக் கேணியைப் பொதுமக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். இதனை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, வேலணை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி மீரா திசைநாயகம் பிள்ளை, கிராம உத்தியோகத்தர் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (ம)

## வீதித் திருத்தப் பணிகளுக்கு சபை உறுப்பினர் முட்டுக்கட்டை

வலி.தென்மேற்கு,ஓக.25

மக்கள் நடமாட முடியாதவாறு சேதமடைந்த நிலையிலுள்ள ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கல மாதா வீதியைப் புனரமைப்பதற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை சபை உறுப்பினர்களின் முட்டுக்கட்டையால் கைவிடப்பட்டது.

இந்த நிலை குறித்து அதிருப்தியும் வேதனையும் அடைந்த அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரான ஆ.ச.கணேசவேல் சபைக் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

அடைக்கலமாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இந்த மாத இறுதியில் இடம்பெறவுள்ளது. ஆலயத்துக்கு அருகில் உள்ள அடைக்கல மாதா ஆலய வீதி சுமார் 50 அடி நீளம் வரை சேதமாகியுள்ளது.

ஆலயத் திருவிழா இறுதி நாளன்று இந்த வீதியால் மாதாவின் சுற்றுப்பிரகாரம் இடம்பெறுவது வழக்கம்.

ஆலயத்துக்கு வரும் மக்களின் நலன்கருதி இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதியிலுள்ள பொது அமைப்புகளும் அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரான ஆ.ச.கணேசவேலும் பல தடவைகள் பிரதேச சபையிடம் கோரியிருந்தனர்.

இதற்கமைய வீதியை புனரமைப்பது சம்பந்தமாக மதிப்பீட்டைத் தயாரித்த பிரதேசசபைத் தலைவர், இந்த மாதம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர்களின் அங்கீகாரத்துக்காகத் தெரியப்படுத்தினார்.

இதே நேரம் மனிதாபிமான முறையில் இந்த வீதியைப் புனரமைப்பதற்கு சக உறுப்பினர்களை ஒத்துழைக்குமாறு இதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்த உறுப்பினர் ஆ.ச. கணேசவேல் கோரியிருந்தார்.

ஆனால் இவரின் கோரிக்கையை ஏற்க உறுப்பினர்கள் மறுத்ததனால் இந்த வேலைத் திட்டம் கைவிடப்பட்டது.

இது குறித்து அதிருப்தியடைந்த உறுப்பினர் சபையை விட்டு வெளியேறினார். (ம-115)

## 44 லட்சம் ரூபா செலவில் அரியாலையில் வீதி திருத்தம்

அரியாலை கிழக்கு மற்றும் மணியந்தோட்டம் பகுதியில் உள்ள மூன்று வீதிகள் நல்லூர் பிரதேச சபையால் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த வீதிகள் புனரமைப்புக்காக 44 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று பிரதேச சபையின் தலைவர் ப. வசந்தகுமார் தெரிவித்தார்.

உதயபுரம் வீதி 20 லட்சம் ரூபா நிதியிலும், பூம்புகார் மற்றும் அரியாலை கடற்கரை வீதிகள் 24 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன. இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் போக்குவரத்து வசதி கருதி இந்த வீதிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே வேளை அரியாலை 8 ஆம் குறுக்கு வீதி நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## இராணுவ வாகனம்– மோ.சைக்கிள் விபத்தில் உயர்தர மாணவன் காயம்

தென்மராட்சி, ஓக.25

சக மாணவரிடம் பரீட்சைக்குரிய பாடக் குறிப்புக்கள் வாங்குவதற்கு மோட்டார் சைக்கிளில் வந்த மாணவரும் எதிரே வந்த இராணுவ வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியதில் மாணவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் மீசாலைச் சந்தியில் இடம்பெற்றது.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த சபாநாயகம் வேணுகானன் (வயது-20) என்னும் மாணவனே காயமடைந்தவராவார்.

இவர் சுயநினைவிழந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சையின் மூன்றாவது பாடத்துக்கான பாடக்குறிப்புக்கள் பெறுவதற்கு நண்பர் ஒருவரிடம் சென்று கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (ம-9)

### பிரதேச சபை உறுப்பினருக்கும்

## தொலைபேசிக் கட்டணம் வழங்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஓக.25

பிரதேச சபை உறுப்பினர்களுக்குத் தொலைபேசிக் கட்டணமாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரை உறுப்பினர்கள் கோரியுள்ளார்கள். இதற்கான தீர்மானம் வலி. தென்மேற்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரதேச சபையின் தலைவர், உப தலைவர் ஆகியோருக்கு தொலைபேசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. அதற்குரிய தொலைபேசிக் கட்டணத்தையும் பிரதேச சபை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் மக்களுக்குச் சேவை செய்வதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும் இதுபோன்ற சலுகை வழங்கப்பட வேண்டும். மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே உறுப்பினர்கள் தொலைபேசியை பாவித்து வருகிறார்கள்.

எனவே உறுப்பினர்களுக்கும் தொலைபேசிக் கட்டணமாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்குமாறு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-115)

## யாழ். மத்திய பஸ் நிலையத்தில் கட்டாக்காலிகள் ஆக்கிரமிப்பு

### கட்டுப்படுத்த பயணிகள் கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், ஓக.25

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் பயணிகளுக்குத் தொல்லை தரும் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பகல், இரவு வேளைகளில் இந்தப் பகுதிகளில் கூடும் கட்டாக்காலிகள் பயணிகள் அமரும் இடங்களை அசிங்கம் செய்து வருகின்றன. இதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி பஸ்கள் புறப்படும் நேரங்களில் பஸ்களுக்கு முன்பாக ஓடித் திரிந்து விபத்துக்கள் இடம்பெறவும் இவை வழி ஏற்படுத்துகின்றன என்று மேலும் கூறப்பட்டது. (ம-17)

## சாவகச்சேரி நகரப் பகுதியில் கடைகளில் சோதனை

### சுகாதாரப் பிரிவு நடவடிக்கை

தென்மராட்சி, ஓக.25

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வருடத்திற்குரிய வியாபார உரிமம் பெறாத வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதென சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தீர்மானப் பிரகாரம் பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.

சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் இயங்கிய அரைக்கும் ஆலை இந்த வருடத்திற்குரிய வியாபார உரிமம் பெறாததால் நேற்று நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தலைமையில் சென்ற குழுவினர் அரைக்கும் ஆலையை மூடினர்.

இந்த ஆலை உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## 16 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு

தென்மராட்சி, ஓக.25

யாழ்.மாவட்டச் செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர், பாவனையாளர் பாதுகாப்பு விதிகளை மீறிச் செயற்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 16 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, விற்பனை விலையை விட அதிகரித்த விலைக்குப் பொருள்கள் விற்றமை, திகதி காலாவதியான பொருள்கள் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் வர்த்தகர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் தொடர்பான 16 வர்த்தகர்களையும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளை அனுப்புமாறு பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-9)

## மண்டைதீவு உப அலுவலகம் திங்கள் இயங்க ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஓக.25

வேலணை பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகம் நாளை மறுதினம் திங்கள் முதல் இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

போரால் சேதமுற்று பயன்படுத்தப்படாதிருந்த இந்த அலுவலகத்தை மீண்டும் திறக்க வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் எஸ். குலசிங்கம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பிரேரித்திருந்தார்.

இந்தப் பிரேரணை ஆராயப்பட்டு உப அலுவலகத்தை திங்கட்கிழமையில் இருந்து இயக்க சபை தீர்மானித்தது. கூட்டம் பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா தலைமையில் நடைபெற்றது. (ம-7)

## மீன்பிடி வலைகள் எரியூட்டப்பட்டு நாசம்

### நேற்று முன்தினம் பாஷையூரில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக.25

பாஷையூரில் மீன்பிடிப்பதற்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வலைகள் இனந்தெரியாத விஷமிகளால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிகாலைவேளை தீச்சுவாலை எழுவதை அவதானித்த அயலவர்கள் உடனடியாகத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும் குறித்த வலைகள் முழுவதுமே எரிந்து நாசமாயின. (ம-23)

## ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிதம்பரத்தை சேர்க்கக் கோரும் மனு நிராகரிப்பு



டில்லி,க.25

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல் வழக்கில் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தை சேர்க்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் நிராகரித் தது.

ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டு ஊழல் வழக்கில் மத்திய அமைச்சர்களாக இருந்த ஆ. ராசா, தயாநிதி மாறன் ஆகியோர் ராஜினாமாச் செய்தனர். இந்த வழக்கில் ப. சிதம்பரத்தையும் சேர்க்கக்கோரி ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியும் தொண்டு நிறுவனம் ஒன்றின் சார்பில் பிரசாந்த் பூஷனும் சி.பி.ஐ. தனிநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

ஆனால் ப.சிதம்பரத்தை ஸ்பெக்ட்ரம் வழக்கில் சேர்க்க எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லை என்று கூறி சி.பி.ஐ. தனி நீதிமன்றம் இருவரது மனுக்களையும் நிராகரித்தது. இதன் பின்னர் இருவரும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தனர். இந்த இரண்டு மனுக்களையும் நீதிபதி சிங்வி, ராதாகிருஷ்ணன் ஆகியோர் விசாரித்து நேற்று தீர்ப்பளித்தனர். அந்தத் தீர்ப்பில் ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டு ஊழல் சதியில் சிதம்பரத் துக்கு எந்த பங்கும் இல்லை என்று கூறி இரண்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் நிராரித்தது. (வ)

# தி.மு.க.வின் ஆர்ப்பாட்டம் ரத்தானதன் பின்னணி என்ன?

### பழ.நெடுமாறன் கேள்வி



தமிழக மீனவர்கள் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்டிக்கும் வகையில் நடைபெற இருந்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் ரத்து செய்யப்பட்டதன் பின்னணி என்ன? என்று இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது:-

தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் எனக்குப் பதில் சொல்வதாக நினைத் துக் கொண்டு மீண்டும் மீண்டும் பொய்யானதும் முன்னுக்குப்பின் முரணா னதுமான விவரங்களையே தந்துள்ளார்.

இலங்கையில் போர்நடந்த போது, அங்கு உடன டியாகப் போர் நிறுத்தம் கொண்டு வர மத்திய அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய தலைவரான கருணாநிதி, அதில் அடியோடு தவறி விட்டார் என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும்.

நாடாளுமன்றத்திற்கு முன் தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்டிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அந்த ஆர்ப்பாட்டம் திடீர் என்று கைவிடப்பட்டதன் பின்னணி என்ன?

ஈழப்போர் நெருக்கடியான கட்டத்தை அடைந்த வேளையில் இவர் செய்த அப்பட்டமான துரோ கத்தை மறைப்பதற்காக, முன்பு ஆட்சியில் இருந்த போது நடத்திய செம்மொழி மாநாடும் இப்போது நடத்திய டொசோ மாநாடும் எள்முனை அளவும் உதவவில்லை என்பதை இனி யாவது அவர் உணர்வது நல்லது-என்றுள்ளது. (வ)



சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜெர்மனி நாடாளுமன்ற உறுப்பினர் ஆன்ரூஸ் ஷாக்கன்ஹாப் தமிழக நிதியமைச்சர் பன்னீர்செல்வத்தைச் சந்தித்து பேசினர்.

## அணுமின் நிலையம் குறித்த வழக்குகளில் ஓக.29 தீர்ப்பு

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பான வழக்குகளில் எதிர்வரும் 29 ஆம் திகதி சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கவுள்ளது. கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக வழக்கு கள் தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுக்கள் மீதான தீர்ப்பு ஒத்திவைக் கப்பட்டிருந்தது. இந்தநிலையில் வடபழனியைச் சேர்ந்த பொறியாளர் ஜி. சுந்தரரா ஜன், கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கான தமிழக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி கொடுத்ததை எதிர்த்து ஒரு மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனுக்கள் மீது நீதிபதிகள் பி.ஜோதிமணி, பி. தேவதாஸ் முன்னிலையில் கடந்த சில நாள்களாக விசாரணை நடைபெற்று வந்தது. நேற்று முன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தின் திருத்தப்பட்ட அனுமதி உத்தரவை சட்டத்தரணி ரீட்டா சந்திரசேகரும், அணுமின்நிலையத்தின் பாதுகாப்புக்கான பரிந்துரைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய மனுவை அணு சக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் சட்டத்தரணி சுரேஷ் குமாரும் தாக்கல் செய்தனர்.

இந்தமனுக்கள் மீது இருதரப்பு விவாதம் நடைபெற்றது. பின்னர், கூடங்குளம் வழக்குகளில் எதிர்வரும் 29 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதிபதி பி. ஜோதி மணி தெரிவித்தார். (வ)

## டிரக் – ரயில் விபத்து 13 பேர் சாவு

சம்பல்புர், ஓக.25

ஒரிசா மாநிலம் சம்பல்புர் மாவட்டத்தில் கையர்பலி என்ற இடத்தில் ஆளில்லாத ரயில்வே கடவையை கடக்க முயன்ற டிரக் மீது ரயில் மோதியதில், வாகனத்தில் பயணம் செய்த 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அனலப்பள்ளியில் இருந்து சிந்துர்பங்காவுக்கு விவசாயத் தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு வந்த டிரக்கின் ஓட்டுநரும், 12 பெண்களும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

## மழை பெய்ய வேண்டி பிணங்களை தோண்டி சிறப்புப் பூசை செய்த மக்கள்

ஆந்திராவின் மெகபூப் நகர் மாவட்டம் நந்நி பேட்டை கிராம மக்கள் மழை வேண்டி பிணங் களைத் தோண்டி சிறப்பு பூசை செய்துள்ளனர்.

இந்தியாவின் வட மாநிலங்களில் கன மழை பெய்து வந்தாலும் தென் மாநிலங்களில் கடும் வறட்சியே காணப்படுகின்றது.

இந்தியாவின் வட மாநிலங்களில் கன மழை பெய்து வந்தாலும் தென் மாநிலங்களில் கடும் வறட்சியே காணப்படுகின்றது.

இதில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்கள் மழை இல்லாமல் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தநிலையில் ஆந்திராவின் மெகபூப்நகர் மாவட்டம் நந்நி பேட்டை கிராமத்தைச் சேர்ந்த பெரியவர்கள், சுடுகாட்டில் புதைத்த பிணங்களைத் தோண்டி பூசை செய்தால் நல்ல மழை பெய்யும் என்று கூறினார்கள்.

இதையடுத்து நேற்று முன்தினம் கிராம மக்கள் அனைவரும் 2 மந்திரவாதிகளுடன் சுடுகாட்டுக்குச் சென்றுபிணங்களைத் தோண்டி பூசை செய்துள்ளனர்.

இந்த பூசை முடிந்ததும் பிணங்களை மீண்டும் கல்லறைகளில் வைத்து மூடி விட்டு அந்தப்பகுதியில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று மழை வேண்டி பிரார்த்தனை செய்தனர்.

மழை வேண்டி ஆந்திராவில் நடந்த இந்த விநோத பூஜை அம்மாநிலம் மட்டுமல்லாது அனைத்து இடங்களிலும் பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

# ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் 'ஜெ' குரல் கொடுக்காதது ஏன்?

### கேள்வி எழுப்புகிறார் நடிகை குஷ்பு



எங்கோ பிறந்து வளர்ந்து, 26 ஆண்டுகளாக தமிழகத்தில் வாழும் எனக்கே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை குறித்து ரத்தம் கொதிக்கும்போது ஜெயலலிதா ஏன் அவர்களுக்காக இதுவரை குரல் கொடுத்ததில்லை என்று நடிகை குஷ்பு கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.கழகம் நடத்திய டெசோ மாநாட்டு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் மதுரை பாலரங்காபுரத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் அவர் கலந்து கொண்டு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

மதுரையில் டெசோ மாநாடு நடந்து 26 ஆண்டுகளின் பின்னர் சென்னையில் நடந்த மாநாட்டு தீர்மானம் குறித்து பேச வாய்ப்புக் கிடைத்துள்ளது.


ஈழத்தமிழர்களுக்காக இன்னும் போராடிக் கொண்டுள்ளோம். ஏன் என்று தெரியவில்லை. கலைஞர் என்ற ஒரு தனிமனிதர் எத்தனை ஆண்டுகள் போராட முடியும். தலைவர் கலைஞரின் ஈழத்தமிழர்களுக்கான போராட்டம் 56 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்து விட்டது.

கலைஞர் சொல்வது போல இலங்கைத் தமிழர்கள் அங்கே இரண்டாம் தர குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர். ஈழத்தமிழர் களுக்காக முதலில் குரல் கொடுத்தவர் தந்தை செல்வா. அவரையும், அண்ணல் அமிர்தலிங்கத்தையும் அழைத்து இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை குறித்து தமிழக மக்களுக்கு புரிய வைத்தவர்கள் தலைவர் அண்ணா, கலைஞர் ஆவார்கள். அதன்பிறகே இலங்கைத் தமிழர்களின் நிலை உலகுக்குத் தெரிய வந்தது.

ஜெயலலிதா ஈழத்மிழர்களுக்காக இதுவரை குரல் கொடுத்ததில்லை. ஏன் அ.தி.மு.கவைச் சேர்ந்த ஒருவர் கூட குரல் கொடுத்ததில்லை.

ஆனால் டெசோ மாநாட்டுக்கு மட்டும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இந்த மாநாட்டை முதலில் எதிர்த்தவர் இலங்கை ஜனாதிபதி. அதற்கடுத்து ஜெயலலிதா அம்மையார். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியவர் தான் ஜெயலலிதா. இந்த குற்ற உணர்ச்சி அ.தி.மு.கவில் உள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்க வேண்டும். போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்கள் என்று சொன்னவர்தான் அவர் -என்றார். (வ)

## சீனாவுக்கு கடத்தவிருந்த கடற்குதிரைகள் பறிமுதல்



சீனா, ஜப்பான் உட்பட ஆசிய நாடுகளுக்கு கடத்தவிருந்த 16000 உலர்ந்த கடற்குதிரைகளை பெரு நாட்டின் பொலிஸார் கைப்பற்றினர். பெரு நாட்டின் லிமா விமான நிலையத்திலிருந்து இந்தக் கடத்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் கடற்குதிரைகளின் தூள், பாலுணர்வு பயன்பாடுகளுக்கும் அரிய மருத்துவத்துக்கும் பயன்படுகின்றது. இந்தக் கடற்குதிரைகள் பெரு நாட்டில் அதிகம் உள்ளதால் இங்கிருந்து ஆசிய நாடுகளுக்கு கடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் லிமா விமான நிலையத்தில் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் இதைக் கண்டுபிடித்து கடற்குதிரைகளைப் பறிமுதல் செய்தனர்.

பொலிஸ் தலைமை அதிகாரி விக்டர் பெர்னாண்டஸ், ''இந்தக் கடற்குதிரைகள் 250 000 டொலர்கள் அல்லது 160,000 யூரோக்கள் வரை விற்பனையாகலாம்'' எனத் தெரிவித்தார்.

## புரட்சியாளர் மீது தாக்குதல்

### சிரியாவில்100 பேர் சாவு

டமாஸ்கஸ்,ஒக.25

சிரிய புரட்சியாளர்களின் ஆக்கிரமிப்பில் உள்ள டமாஸ்கஸின் சில பகுதிகளில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிரடித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் டமாஸ்கஸில் மட்டும் குறைந்தது 100 பேர் உயிரிழந்தனர். 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காஃபர் செஸ மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 24 பேர் உயிரிழந்தனர்.

கபூன் பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட குண்டு துளைக்கப்பட்டிருந்த சடலங்கள் கிடந்தமை கடந்த புதன்கிழமை தெரியவந்ததாகக் கண்காணிப்பு அமைப்பு



தெரிவித்தது.

இதேவேளை ஈராக் எல்லையில் உள்ள நகரத்தின் சில பகுதிகளைக் கைப்பற்றி விட்டதாக அரசு எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

சிரியாவில் கடந்த 17 மாதங்களாக இராணுவத்துக்கும்' அரசு எதிர்ப்பாளர்களுக்கும் இடையே' போர் இடம்பெற்று வருகிறது.

பேச்சின் மூலம் ஜனாதிபதி பாஷர் அல்-அசாத்தை பதவியிறக்கம் செய்து சண்டையை முடிவுக்குக் கொண்டு வர சிரியா நாட்டு முன்னணி அமைச்சர் ஒருவர் ஆலோசனை தெரிவித்திருந்தார். ஆனால் அவர் தெரிவித்த மறுநாளே இராணுவத்தினர் அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

சிரியாவின் துணை பிரதமர் காத்ரி ஜமில் கூறுகையில்,

அதிபர் அசாத் பதவி விலகிய பின் பேச்சு நடத்தலாம் என்று அரசு எதிர்ப்பாளர்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தால் பேச்சு என்ற நிலையை எட்டவே முடியாது. பேச்சில் அனைத்து பிரச்சினைகளுக்கும் முடிவு காணலாம். பேச்சுக்கு அரசு தரப்பு தயாராக உள்ளது- என்றார்.

## கடாபி ஆதரவு படைகளிடமிருந்து பீரங்கி, ஏவுகணைகள் பறிமுதல்

லிபியாவில் கடாபிக்கு ஆதரவான புரட்சிப் படைகளிடமிருந்து பீரங்கிகள் மற்றும் ஏவுகணைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று உள்துறை அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

லிபியாவில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி கடாபிக்கு ஆதரவான புரட்சிப் படையிடமிருந்து 100 இற்கும் மேற்பட்ட பீரங்கிகள் மற்றும் 26 ஏவுகணைகளைக் கைப்பற்றியதாக லிபியா உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆயுதங்கள் திரிபோலியின் தென்கிழக்கே 60 கிலோ மீற்றர் தொலைவில் தருனா அருகே சூக் அல்-அஹத்தில் உள்ள ஒரு வீட்டில் கைப்பற்றப்பட்டன. அந்த வீட்டில் புரட்சிப் படையினர் தங்கியிருந்தனர்.

கடந்த 19ஆம் திகதி இரு கார் குண்டுத் தாக்குதல் நடந்ததை முன்னிட்டு, அது குறித்து உள்துறை அமைச்சக அதிகாரிகள் ஆய்வு செய்யச் சென்றனர்.

அப்போதே இந்த ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன என்று உள்துறை அமைச்சக உயர் பாதுகாப்புக் குழுவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.



*விர்ஜினியா மாகாணத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் அமெரிக்க துணை அதிபர் ஜோ பைடன் தனது ஆதரவாளர்களுடன் உற்சாகமாகக் கலந்துரையாடிய வேளையில்...*

## விமானத்தில் தூக்கம் புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் வந்த பெண்

பாகிஸ்தானில் இருந்து பிரான்ஸ் சென்ற பெண், விமானத்தில் தூங்கி விட்டதால் மீண்டும் அதே விமானத்தில் பாகிஸ்தான் திரும்பியது அவருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் இருந்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸூக்கு கடந்த புதன்கிழமை புறப்பட்ட விமானத்தில் பேட்ரிஸ் கிறிஸ்டைன் அகமது என்ற பெண் பயணம் செய்தார்.

விமானம் பாரிஸ் சென்றது. ஆனால் பேட்ரிஸ் நல்ல தூக்கத்தில் இருந்துள்ளார். அதை விமான ஊழியர்களும் கவனிக்கவில்லை.

மறுநாள் பாரிஸில் இருந்து விமானம் மீண்டும் லாகூர் புறப்பட்டது. அப்போது தூக்கத்தில் இருந்து விழித்தவர் அதிர்ச்சி அடைந்தார்.

''ஐயையோ நான் பாரிஸில் இறங்க வேண்டும். விமானத்தை பரிஸூக்கு திருப்புங்கள்'' என்று சத்தம் போட்டார். அதைக் கேட்டு விமான ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

விமானத்தை மீண்டும் பரிஸூக்கு திருப்ப முடியாது. அமைதியாக உட்காருங்கள் என்று ஊழியர்கள் கூறிவிட்டனர். வேறு வழியின்றி மீண்டும் லாகூர் வந்தார் பேட்ரிஸ்.

பரிஸில் அவர் இறங்காததை எப்படி ஊழியர்கள் கவனிக்கவில்லை என்பது குறித்து தீவிரவிசாரணை இடம்பெற்றுள்ளது.

## அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி ஈரான் செல்கிறார் பான் கீ மூன்

ஈரானில் நடக்கும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் எதிர்ப்பை மீறி, ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில், வரும், 30 மற்றும் 31 ஆம் தேதிகளில், அணிசேரா நாடுகளின் மாநாடு நடைபெற உள்ளது.

ஐ.நா.பொதுச்செயலர் பான் கீ மூன், பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட, 41 நாடுகளின் தலைவர்கள், இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். 21 நாடுகளின் வெளி



யுறவு அமைச்சர்களும், இதில் பங்கேற்க உள்ளனர் என்று, ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் தன்னுடைய நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு இந்த மாநாட்டை ஒரு கருவியாக பயன்படுத்துகிறது. எனவே, ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனும், எகிப்து அதிபர் முகமது முர்சியும் இந்த மாநாட்டில் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டும்' என்று அமெரிக்காவும், இஸ்ரேலும் வற்புறுத்தியிருந்தன.

ஆனால், இந்த நாடுகளின் எதிர்ப்பை மீறி, ஈரானில் நடக்கும் அணிசேரா நாடுகள், மாநாட்டில் பங்கேற்க பான் கீ மூன் முடிவு செய்துள்ளார். இந்தத் தகவலை பான் கீ மூனின் தகவல் தொடர்பாளர் மார்டின் நெசிர்க் தெரிவித்தார்.

## மைக்ரோசொப்ட் நிறுவனத்துக்கு புதிய சின்னம் அறிமுகம்

நியூயோர்க், ஒக.25

பில்கேட்ஸின் மைக்ரோசொப்ட் நிறுவனம் நேற்று முன்தினம் புதிய சின்னத்தை அறிமுகம் செய்தது.

இதற்கு முன் பறக்கும் கொடிபோல நான்கு நிறங்களின் தனித்தனி சதுரங்கள் மைக்ரோசொப்ட் நிறுவன சின்னமாக இருந்தது.

இப்போது சிவப்பு, பச்சை, நீலம், பழுப்பு ஆகிய நான்கு கட்டங்கள் ஒரே அளவுடன் இருப்பதுபோல எளிமையான (சின்னம்) லோகோ வடிவமைக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 37 ஆண்டுகள் ஆகின்றன. அப்போது முதல் 5ஆவதாக வெளியிடப்படும் புதிய சின்னம் இது. எனினும், கடந்த 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போதுதான் புதிய சின்னம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது மென்பொருள் கண்டுபிடிப்புகளில் புதிய அத்தியாயத்துக்குள் நுழைவதை குறிக்கும் வகையிலும் நவீன வர்த்தக உலகில் எளிமையாக அனைவரையும் கவரும் வகையிலும் இருக்கும் என்று மைக்ரோசொப்ட் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொலம்பியா நாட்டில் ஒரே நேரத்தில் 16 அமைச்சர்கள் ராஜினாமா

பொகோட்டா, ஒக.25

கொலம்பியா நாட்டில் ஒரே நேரத்தில் 16 அமைச்சர்கள் நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்தனர்.

லத்தீன் அமெரிக்க நாடான கொலம்பியாவில் நேற்று முன்தினம் 16 அமைச்சர்கள் ராஜினாமாச் செய்ததை அடுத்து மேலும் சில அமைச்சர்கள் ராஜினாமாச் செய்வார்கள் என்று தகவல்கள் தெரிய வந்துள்ளது.

பொருளாதார நவீனமயமாக்கல் தொடர்பாக அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. கொலம்பியா அதிபர் ஜூவன் மனுவல் சாண்டோஸ், புதிய மின்சக்தித் துறை அமைச்சராக நேற்றுமுன்தினம் மாற்றப்பட்டார். இதனைத் தொடர்ந்து சாண்டோஸ் 16 அமைச்சர்களை ராஜினாமாச் செய்யுமாறு கேட்டுக்கொண்டதை அடுத்து நேற்றுமுன்தினம் 16 அமைச்சர்கள் ராஜினாமாச் செய்தனர்.


> பொருளாதார நவீன மயமாக்கல் தொடர் பாக அமைச்சரவை மாற்றம் செய்யப் பட்டுள்ளதாக தெரிகிறது.

## பின்லேடன் கொலை நடந்தது எப்படி? செப்.11 இல் வெளிவருகிறது புத்தகம்

பாகிஸ்தானில் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட போது , அமெரிக்கப் படைகள் நடத்திய அதிரடித்தாக்குதல் குறித்த புத்தகம் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டதன் 11 ஆம் ஆண்டு நினைவு தினமான அடுத்த மாதம் 11 ஆம் திகதி வெளியிடப் படவுள்ளது.

இதனை அமெரிக்கப் படையில் பணியாற்றிய படையினரில் ஒருவர் எழுதியுள்ளார்.

அல்குவைதா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன், 2011 ஆம் ஆண்டு மே மாதம் பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில்




பதுங்கியிருந்த போது அமெரிக்கப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவின் நேவீ-சீல் என்ற படையினர் தான் பின்லேடனை நள்ளிரவு வேளையில் சுற்றி வளைத்தனர். இதுதொடர்பான புத்தகம் விரைவில் வெளி வர உள்ளது.

'நோ ஈஸி டே' என்ற பெயரில், அமெரிக்கப்படையில் பணியாற்றிய டாட்டன் என்பவர் 'மார்க் ஓவன்' என்ற புனைபெயரில் எழுதியுள்ளார்.

இவர் தான் பின்லேடன் பதுங்கியிருந்த மாளிகையில் மூன்றாவது தளத்தில் இருந்து, பின்லேடன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு பிணமாக கிடந்ததை முதலாவதாக பார்த்து உறுதி செய்தார்.

இந்நிலையில் இவர் எழுதிய புத்தகம் அடுத்த மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்ட 11 ஆம் ஆண்டு நினைவு நாளில் வெளியாகிறது. இதனை பெங்குயின் என்ற அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணிப் பதிப்பகம் வெளியிடுகிறது.

# பாகிஸ்தானில் மோசமான வெள்ளம்

## 30 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்துக்கு 30 பேர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரஃப் உத்தர விட்டுள்ளார்.

இறந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கைபர் பாக்துன்கவா மாகாணம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். வெள்ளத்தில் ஏராளமான கால்நடைகளும் இழுத்துச் செல்லப்பட்டன.



இதுதவிர கைபர் பாக் துன்கவா பகுதியில் பல வீடுகள், கடைகள் மற்றும் விவசாய நிலங்களும் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

கடுமையான மழை காரணமாக நௌசெரா மாவட்டத்தில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. காட்டாற்று வெள்ளத்துக்கு பஜாவூர் பழங்குடியின பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கைபர் பாக்துன்கவா மாகாணம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணி மேற்கொள்ளும்போது, இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கணவரை தேநீர் குவளையால் அடித்துக் கொலை செய்த பெண்





வொஷிங்டன்,ஓக. 25

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் நடுவராகப் பணியாற்றி வந்த பெண், தனது கணவரை தேநீர் குவளையால் அடித்துக் கொலை செய்ததாக கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் பெயர் லூயிஸ் ஆன் குட்மேன். 70 வயதாகும் இவர் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றி வந்தார். இவரது கணவர் பெயர் ஆலன் (அவருக்கு வயது 80).

கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி பொலிஸாரைத் தொடர்பு கொண்ட லூயிஸ், தனது கணவர் மாடிப்படியில் விழுந்து கிடப்பதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து விரைந்து வந்த பொலிஸார் ஆலனின் உடலைக் கைப்பற்றி விசாரணையை ஆரம்பித்தனர். முதலில் ஆலன் மாரடைப்பால் இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

ஆனால் பிரேதப் பரிசோதனை மற்றும் தடயவியல் சோதனையில், அவர் ஏதோ ஒன்றால் தாக்கிக் கொல்லப்பட்டிருக்கிறார் என்று தெரிய வந்தது.

இதையடுத்து பொலிஸார் தங்களது விசாரணையைத் தீவிரப்படுத்தினர். லூயிஸை தொடர்ந்து விசாரித்து வந்தனர். இந்த விசாரணையில் தேநீர் குவளையால்ஆலனை, லூயிஸ் தான் அடித்துக் கொலை செய்தார் என்று தெரியவந்தது. அதையடுத்து தற்போது லூயிஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதற்காக தனது கணவரை லூயிஸ் கொலை செய்தார் என்ற விவரத்தைப் பொலிஸார் தெரிவிக்கவில்லை. (வ)

# நாசாவுக்கு அருகில் டைனோசரின் கால் தடங்கள் கண்டுபிடிப்பு

வொஷிங்டன், ஓக.25

தற்போது நாசா விண்வெளி ஆய்வு மையம் அமைந்துள்ள இடத்துக்கு அருகே டைனோசர் குடும்பத்தைச் சேர்ந்த நோடோசரின்கால்தடங்களை டைனோசர் குறித்த ஆய்வாளர் ஒருவர் கண்டு பிடித்துள்ளார்.

110 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய கால் தடமாக இது இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

டைனோசர் குறித்த ஆய்வுகள் உலகம் முழுவதும் தொடர்ந்தபடியே உள்ளன. இந்த நிலையில் நாசாவின், கோடார்ட் ஸ்பேஸ் பிளைட் மையம் அருகே ஒரு நோடோசரின் கால் தடத்தை டைனோசர் ஆய் வாளர் ஒருவர் கண்டு பிடித்துள்ளார். இது 110 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய கால் தடமாகக் கருதப்படுகிறது.

இதுகுறித்து ஆய்வாளர் ரே ஸ்டான்போர்ட் தெரிவித்ததாவது:-

தனது எதிரியிடமிருந்து தப்பித்து ஓடும்போது இந்த கால் தடம் பதிந்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம். இது மிகவும் அரிய கண்டுபிடிப்பாகும். நோடோசரின் கால்தடங்கள் இதுவரை நமக்கு அதிகம் கிடைத்ததில்லை. எனவே இது முக்கிய கண்டுபிடிப்பாகும். பாசி வடிவில் இந்த கால் தடம் கிடைத்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் கனடாவில் சில கால் தடங்கள் கிடைத்துள்ளன. ஆனால் தற்போது கிடைத்துள்ளது ஒரு முழுமையான கால் தடமாகும். இந்த கால் தடம் நோடோசரின் இடது பின்னங்கால் தடமாகும் - என்றார்.

இந்த ஆய்வு முடிவை நாசா தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக தீவிர ஆய்வுக் கும் நாசா முடிவு செய்துள்ளது.

## நோர்வே தாக்குதல் நபர் பிரேய்விக்கு 21 வருட சிறை

நோர்வேயின் ஒஸ்லோ மற்றும் உட்டோயா தீவு தாக்குதல் கொலையாளி ஆண்டெர்ஸ் பிரேய்விக்கு 21 வருட கால சிறைத்தண்டனை விதித்து நோர்வே நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித் துள்ளது.

அவர் மனநலம் பாதிக்கப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டால், மருத்துவ பராமரிப்பன் கீழ் தடுத்து வைக்குமாறு தண்டனை வழங்கப்படவிருந்தது. எனினும் அவர் நல்ல அறிவாற்றலுடன் இருப்பதாக மருத்துவ பரிசோதனை ஆதாரங்கள் நிரூபித்துள்ளதால் அவருக்கு 21 வருட சிறைத் தண்டனை வழங்கப்படுவதாக நீதிபதிகள் தமது தீர்ப்பை அறிவித்துள்ளனர்.


## வின்னக வாழ்வில் எட்டாண்டு நினைவு



தோற்றம் 02.03.1973

மறைவு 24.08.2004

அமரர்

**சுப்பையா சுபேந்திரன்**

திதி: வளர்பிறை நவமி (25.08.2012)

அன்பின் செல்வமே சுபேந்திரா எம்மை நீ
துன்பக்கடலில் துடிதுடிக்க வைத்து
சொர்க்கத்தில் சேர்ந்து எட்டாண்டு ஆனதடா
நெஞ்சில் நிறைந்து நிழலாடும் உன்னினைவு
என்றென்றும் எம்முயிரோடு நிலைத்திருக்கும்
எம்முயிரோடும் உணர்வோடும் கலந்த
உன் அழகு முகங்காணத் துடிக்கின்றோம்
வருவாயா சுபேந்திரா ?

'மிஷாந்த மகால்'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(22102)(5-6-7)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வேம்படி, சென்றல் பாடசாலைகளுக்கு அருகில் முதலாம் குறுக்குத்தெருவில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0776917030

(22035)(5-6-7)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உடுவில் மானிப்பாய் வீதியில் 7¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 066 5789,021 224 0973

(22044)(5-6-7)

## வயல் காணி விற்பனைக்கு

கிளிநொச்சியில், கரடிப்போக்கு சந்தியில் இருந்து 3.5கி.மீ தூரத்தில் 5ஆம் வாய்க் காலில் அமைந்துள்ள இருபோகம் நெற் பயிர் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதிகள் கொண்ட 21 ஏக்கர் வயல்காணி விற்ப னைக்குண்டு.

அதிக விலை கோரலுக்கு மட்டும்.

தொடர்பு: 077 288 1855,021 228 5317

தரகர் தேவையில்லை

(21950)(5-6-7)

## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counselors. This is a one year, week-end (Saturday&sunday) course, that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read. write and understand.
2. A pass in Advance Level.
3. Interested in Social Activities.

The applicants will have to buy a special application form in our office and submit them before the 15th of September. Only 25 applicants will be selected to follow this training.

**For further details please contact.**

**'AHAVOLI'**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway**
**St.Patrick's Road, Jaffna.**
**Contact No.: 021 222 2856**

(C22101)(5.6.7)





## கிருபா லேணர்ஸ் வழங்கும்

யாழ்ப்பாணம் - 021 2224353, சாவகச்சேரி.நெல்லியடி. சுன்னாகம். கிளிநொச்சி. விசுவமடு.

VIJAY TV ஜூனியர் சீனியர் சுப்பர்சிங்கர் வெற்றியாளர்களான

ஸ்ரீகாந் மற்றும் மாளவிக்காவுடன்

மற்றும் பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும்

யூனியர் சீனியர் இசை நிகழ்ச்சி

26.08.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

VIP ரிக்கட்டுக்களைக் கொள்வனவுசெய்யும் ரசிகர்களுக்கு இசை நிகழ்ச்சி முடிந்தவுடன் ரில்கோ ஹோட்டலில் மாளவிக்கா, ஸ்ரீகாந்துடன் புகைப்படம் எடுக்கும் சந்தர்ப்பம் இலவசமாக வழங்கப்படுவதோடு Tilko Hotel இனால் குறைந்த செலவில் வழங்கப்படும் இராப்போசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ரிக்கெட்டுகளுக்கு : கிருபா லேணர்ஸ் 021 2224353 மற்றும் நிகழ்வன்று மண்டபவாயிலிலும்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= VIP

OUR SPONSORS

ராம்கோ சீமெந்து | உதயா ஜுவல்லர்ஸ் 81, கஸ்தூரியார் வீதி, யாழ். 021 222 4434 | TILKO 021 222 5969 | EUT தளபாடங்கள் | நல்லி சில்க்ஸ் 021 2225573 ராசி சில்க்ஸ் 021 2225571 | FAMILY SUPER MARKET Jaffna Road, Manipay. Tel: 0773946487 | மிலன் மோட்டோர்ஸ் யாழ்வீதி, மானிப்பாய் T.P: 021 2255312 | Ranjanas CERAMIC | CAC Ceylon Art Creation

# உதயன்

**06** **தரம் 05 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்**

சுட்டெண் : ..............................................

## வினாத்தாள் I


நேரம் : 45 நிமிடங்கள்

* ***01 - 30 வரையிலான வினாக்களில் மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.***

01) நீண்ட நீண்ட இலைகளாம் - தண்டு சிவப்பு மஞ்சளாம்
துண்டு துண்டாய் வெட்டினால் - உண்ண உண்ண இனிக்குமாம்
பாடலில் எதைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது?
1) தேங்காய் 2) பனை 3) கரும்பு

02) இழுத்து எடுத்தானாம் - உரசி அடித்தானாம்
பூவொன்று பூத்தது - பூத்தவுடன் கருகியது
இதில் கூறப்படுவது எதைப்பறிறியதாகும்?
1) பட்டாசு 2) தீக்குச்சி 3) மின்னல்

03) கட்டங்களில் காட்டப்பட்டுள்ள குறியீடுகளின் பெறுமதி ஒன்றுக்கொன்று சமனானது.



இதன்படி

04) பாடசாலையொன்றில் பெரும்பாலும் காணக்கூடியவை

1) மாணவர்கள்
ஆசிரியர்கள்
கதிரை மேசைகள்

2) கதிரை மேசை
கட்டிடங்கள்
எழுதுபலகை

3) புத்தகங்கள்
பிள்ளைகள்
கணினிகள்

05) சமையலறை ஒன்றில் எப்போதும் இருக்கவேண்டியது
1) அடுப்பு 2) அகப்பை 3) பாத்திரங்கள்

06) கடலில் எப்போதும் இருப்பது
1) அலை 2) மீன் 3) நீர்

* ***இரண்டு அப்பிள் பழங்களின் விலை ஒரு அன்னாசிப் பழத்தின் விலைக்குச் சமனாகும். ஒரு அன்னாசிப்பழத்தின் விலையில் மூன்று கொய்யாப்பழங்கள் வாங்கலாம். அப்பிள் பழம் இரண்டினதும் கொய்யாப்பழங்கள் மூன்றினதும் விலை ரூபா 240 ஆகும்.***

07) அன்னாசிப்பழம் ஒன்றின் விலை
1) 80 ரூபா 2) 60 ரூபா 3) 120 ரூபா

08) அப்பிள் பழம் ஒன்றினதும், கொய்யாப்பழம் ஒன்றினதும் விலை
1) 100 ரூபா 2) 90 ரூபா 3) 80 ரூபா

09) கவின் புகைப்படமொன்றைக் காட்டி 'இவரின் மூத்த சகோதரனின் மகன் என் தம்பி ஆவார்' எனக் கூறினார். இதன்படி புகைப்படத்தில் இருப்பவர் கவினுக்கு என்ன உறவு?
1) சித்தப்பா 2) அப்பா 3) மாமா

10) பூமாவின் வயது 3 வருடங்களாகும். அவளது அக்கா சீமாவின் வயது பூமாவின் வயதின் 3 மடங்காகும். இன்னும் எத்தனை வருடங்களில் சீமாவின் வயது பூமாவின் வயதின் இருமடங்காகும்.
1) 5 வருடங்களிவ் 2) 3 வருடங்களில் 3) 4 வருடங்களில்

* ***11ஆம் 12ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள மூன்று சொற்களுக்கும் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவுசெய்க.***

11) உணவு - மருந்து - எரிபொருள்

1)  2)  3) 

12) சித்திரக்கோலம் - இயக்கம் - வர்ணம்

1)  2)  3) 

13) கட்டத்துக்குள் இருக்கும் எண்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து வெற்றுக்கட்டத்துக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 0.5 | 0.7 | 1.0 | ........ | 1.9 |


1) 1.4
2) 1.1
3) 1.2

14) உருவிலுள்ள கட்டங்களில் A, B ஆகிய இடங்களில் வரவேண்டிய எண்கள் எவை?

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 24 | 27 | A | 48 |
| 18 | B | 45 | 43 | 42 |
| 5 | 18 | 24 | 30 | 36 |

1) 32உம், 16உம் 2) 30 உம், 15 உம் 3) 30 உம், 12 உம்

15) பின்வரும் எண்கள் அமைந்துள்ள விதத்தை அவதானிக்க. வினாக்குறியிட்ட இடங்களுக்கு வரவேண்டிய எண்கள் எவை?





1) 4176உம், 578 உம்
2) 4076உம், 578 உம்
3) 4076உம், 7524உம்


16) வெற்றுக்கட்டத்துக்கு வரவேண்டிய எண் யாது?

| | | |
|---|---|---|
| 12 | 3 | ........ |
| 10 | 5 | 25 |
| 8 | 9 | 36 |


1) 18
2) 15
3) 14


* ***17 ஆம் 18 ஆம் வினாக்களில் அடுத்துவரும் உருவைத் தெரிவுசெய்க.***

17) 

18) 

* 19ஆம் 20ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவுக்கு மிகவும் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவுசெய்க.

19) 

20) 

21) எமது நாட்டிலுள்ள காடுகள் அனைத்தையும் அழித்து வீடுகள் அமைத்தால்
1) நாட்டில் வீடில்லா எவரும் இருக்கமாட்டார்கள்.
2) எல்லா மனிதர்களும் பயிர்செய்து உண்ணத்தொடங்குவார்கள்.
3) கடும் வரட்சியால் எல்லா உயிரினங்களும் செத்துமடியும்.

22) வீட்டு முற்றத்தில் கிளைவிட்டுப் படர்ந்திருந்த மாமரம் முழுமையாக வெட்டப் பட்டால் நாம் அனுபவிக்கும் உடனடி விளைவு
1) வீட்டைச் சுற்றி நிலம் வரண்டுபோகும்.
2) பறவைகளின் இன்னிசை கீதம் கேட்கமுடியாதிருக்கும்.
3) இனி ஒருபோதும் மாம்பழம் சாப்பிடக் கிடைக்காமல்போகும்.

23) A எனும் பேருந்து B எனும் பேருந்தை முந்திக்கொண்டு கொழும்பை அடைந்தது. எனினும் C எனும் பேருந்தை அதனால் முந்தமுடியவில்லை. இம்மூன்று பேருந்து களும் கொழும்பை வந்தடைந்த ஒழுங்குவரிசை
1) ABC 2) BAC 3) CAB

24) அமுதாவின் வீட்டிலிந்து தெற்குநோக்கி0 130 மீற்றர் தூரத்தில் தபால் நிலையம் அமைந்துள்ளது. மைதானத்திற்கு வடக்கே 180 மீற்றர் தூரத்தில் அமுதாவின் வீடு அமைந்துள்ளது. இதன்படி மிகச்சரியான கூற்று
1) தபால் நிலையத்திற்கு தெற்கே மைதானம் அனமந்துள்ளது.
2) தபால் நிலையத்திற்கும் வீட்டுக்கும் இடையே மதானம் அமைந்துள்ளது.
3) வீட்டிலிருந்து எதிர்த்திசைகளில் தபால் நிலையமும் மைதானமும் அமைந்துள்ளன.

25) விதைகளின் பருமன் அதிகரித்துச்செல்லும் ஒழுங்கு
1) பயறு ⇨ எள்ளு ⇨ கடுகு ⇨ கௌபி ⇨ கடலை
2) கடுகு ⇨ எள்ளு ⇨ பயறு ⇨ கௌபி ⇨ கடலை
3) பயறு ⇨ கௌபி ⇨ கடலை ⇨ எள்ளு ⇨ கடுகு

26) பலகை - கைபல எனின், வசதி
1) திசவ 2) சவதி 3) திவச

27) 'மங்களம்' என்பதை □○△□⊗ என எழுத முடியுமாயின் 'களங்கம்' என்பதை எழுதும் முறை,
1) △□○△⊗ 2) □△○□⊗ 3) △□○○⊗

28) பரிமளாவின் அக்காவுக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உள்ளனர். அத்தோடு அவர்களது வீட்டில் அம்மாவும் அப்பாவும் அப்பாவின் அம்மாவும் உள்ளனர். பரிமளாவின் வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?
1) 8 பேர் 2) 9 பேர் 3) 3 பேர்

29) கந்தசாமி தனது சதுரங்கவடிவக் காணியைச் சுற்றி வேலி அமைத்தான். அதற்கு அவனுக்கு 20 தூண்கள் பயன்பட்டன எனின், காணியில் ஒரு பக்கமாகப் பார்க்கும்போது எத்தனை தூண்கள் நடப்பட்டிருக்கும்?
1) 5 2) 6 3) 4


30) முதலில் தரப்பட்டுள்ள சொற்சோடிகிடையிலான தொடர்பின்படி அடுத்துவர வேண்டிய சொல்லின் பகுதியைத் தெரிவுசெய்க.
புத்தகத்திற்கு எழுத்துப்போல பாடசாலைக்கு ..................................
1) புத்தகங்கள் 2) பாடங்கள் 3) மாணவர்கள்

31)

ரா தி ண்
லை நு த
பு ர கோ
க அ ம்

கட்டத்திலுள்ள எழுத்துகளில் சிலவற்றைப் பயன் படுத்தி இலங்கையின் பிராதான நகரமொன்றின் பெயரை எழுதுக.

..............................................

32) 

அருகிலுள்ள பலகையினாலான சதுரமுகியின் எல்லா முகங்களிலும் சிவப்பு நிறம் பூசப்பட்டுள்ளது. அதனை உருவில் காட்டப்பட்டுள்ள கோடுகள் வழியே வெட்டும் போது கிடைக்கும் துண்டு ஒன்றின் எத்தனை முகங் கள் சிவப்பு நிறம் கொண்டதாக இருக்கும்?

..............................................

✱ ***33 - 35 வரையுள்ள வினாக்களில் ஒரு சம்பவம் விளக்கப்பட்டுள்ளது. அச்சம்பவத்தை முறையாகக் காட்டக்கூடிய வகையில் உரிய படங்களின்கீழ் 1, 2, 3, 4, 5 என இலக்கமிடவும்.***

33) 

............ ............ ............ ............ ............

34) 


............ ............ ............ ............ ............

35) 

............ ............ ............ ............ ............

✱ ***36 - 38 வரையுள்ள வினாக்களுக்குப் பின்வரும் விளக்கத்தை அவதானித்து விடை தருக.***

கீழே தரப்பட்டுள்ள உருவில் எலியொன்றின் வளை காட்டப்பட்டுள்ளது. எலி வளையினுள் நுழையும் பாதையும் வெளியேறும் பாதையும் அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ளன.



36) எலி மேற்கு நோக்கி எத்தனை முறை பயணித்திருக்கின்றது?

..............................................

37) எலி வடக்கு நோக்கி எத்தனை முறை பயணித்திருக்கின்றது?

..............................................

38) எலி தெற்கு நோக்கி எத்தனை முறை பயணித்திருக்கின்றது?

..............................................

✱ A எனும் நகரிலிருந்து வடதிசையில் சரிநேரே 5km தூரத்தில் B நகரம் அமைந்துள்ளது. B நகரிலிருந்து சரிநேரே கிழக்குத் திசையில் 10 km தூரத்தில் C நகரம் உள்ளது. C நகரிலிருந்து தெற்குத் திசையில் நேராக 5 km தூரத்தில் D நகரம் அமைந்துள்ளது.

39) C நகருக்கு மிக அண்மையிலுள்ள நகரம் எது?

..............................................

40) A நகருக்கு மிகத் தூரத்திலுள்ள நகரம் எது?

..............................................

சுட்டெண் : ........................................

## வினாத்தாள் II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**01. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மேல்வானில் கீழிறங்கிப்போகும் சூரியன் தங்கப்பந்துபோல பிரகாசித்தது. பல வண்ண நிறங்களில் வான்மேகங்கள் சித்திரக்கோலம் காட்டின. காலையில் இரைதேடிச்சென்ற பட்சிகள் கூட்டம் தமது கூடுகளை நோக்கி சீராகப் பறந்தன. 'சில்' என்று குளிரைத் தழுவியபடி மெல்லக்காற்று வீசியது. அயற்சூழல் இருண்டு கொண்டுவரும் வேளையில் வௌவால்கள் தமது பாரமான உடம்பைத் தாங்கியபடி இரைதேடிப் பறந்தன. இராக்காலப் பிராணிகளின் ஒலிகள் ஒவ்வொரு திக்கிலிருந்தும் மெல்லக் கேட்கலாயின. சூரியக் குமரனை வழியனுப்பிய சோகத்தில் சந்திரக்குமாரி மேகங்களிடையே முகம் மறைத்து எட்டிப்பார்த்தாள்.

01) மேலுள்ள பந்தியில் விபரிக்கப்படும் காட்சி எது?
..............................................................................................

02) இரவுவேளையில் இரைதேடிச் செல்லும் பிராணி எது?
..............................................................................................

03) சந்திரக்குமாரியின் சோகத்துக்கு காரணம் யாது?
..............................................................................................

04) வான்மேகங்கள் எவ்வாறிருந்தன?
..............................................................................................

05) பந்தியில் உவமை ஒன்றை எழுதுக.
..............................................................................................

06) பந்தியிலிருந்து பெயர் அடைமொழிகள் இரண்டைத் தெரிந்து எழுதுக.
..............................................................................................

07) அயற்சூழல் இருண்டு கொண்டுவரும் வேளையில்......... எனும் சொற்றொடரின் கருத்தை மொழிநடையில் எழுதுக.
..............................................................................................
..............................................................................................

08) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.
1. பட்சிகளின் - ..........................................
2. உடம்பை - ..........................................
3. திக்கிலிருந்தும் - ..........................................
4. சோகத்தில - ..........................................

09) வௌவால் தவிர்த்து வேறு இராக்காலப் பிராணிகள் இரண்டின் பெயர்களை எழுதுக.
..............................................................................................

10) பந்தியிலிருந்து பின்வருவனவற்றை எழுதுக.
1. பெயராகவும், வினையாகவும் வரும் சொல் - ..........................
2. பன்மை படர்க்கை இறந்தகால வினைமுற்று - ..........................

**02. பின்வரும் சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

01) ஆறு ஒன்றை மறித்துக் குறுக்காகக் கட்டப்படும் மதில் - ..........................

02) நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி - ..........................

03. பின்வரும் மரபுச்சொற்களின் உட்கருத்தினை எழுதுக.

01) காலம் செல்லுதல் - ........................................

02) கணவளர்தல் - ........................................

**04. பின்வரும் இணைமொழிகளைப் பொருத்தமான இடங்களின் எழுது வதன்மூலம் வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.**

**கள்ளங்கபடம், கண்ணுங்கருத்தும், சுகதுக்கம், ஈடுஇணை, ஏற்றதாழ்வு**

01) எம் பெற்றோர் எம்மைப் பேணி வளர்ப்பதில் ......................... இல்லாதவர்கள்.

02) அயலவர்களின் ......................... களில் பங்குகொள்வது உயரிய பண்பாகும்.

03) வாழ்க்கையில் வரக்கூடிய ......................... களைக் கண்டு நாம் துவண்டு விடக்கூடாது.

**05. பின்வரும் பழமொழிகளில் விடுபட்ட இடங்களை உரிய சொல் கொண்டு எழுத்துப்பிழையின்றி எழுதுக.**

01) கற்றது ............................................ கல்லாதது உலகளவு.

02) ................................... கறிக்குதவாது.

03) விளையும் பயிரை ................................... தெரியும்.

**06. பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியமாக்கி எழுதுக.**

01) வண்டு வந்து பூவில் அமர்ந்து தேன் குடிக்கிறது.
..............................................................................................

02) இராக்காலத்தில் பூக்கும் பூ வெள்ளை நிறமானது.
..............................................................................................

**07. ஒழுங்குமாறியிருக்கும் சொற்களை ஒழுங்கமைத்து கருத்துள்ள வாக்கிய மாக்கி எழுதுக.**

01) மழை / காரணமாக / ஏற்பட்டுள்ளது / மலையகத்தில் / மண்சரிவு / தொடர்ச்சியான / அபாயம்.
..............................................................................................

02) இலங்கை / பெற்றது / 1948 ம் / சுதந்திரம் / மாதம் / பெப்ரவரி / திகதி / ஆண்டு
..............................................................................................

✱ ***மிகச்சரியான விடையின்கீழ் கோடிடுக.***

08. உலக மக்களிடையே பெரும்பாலும் பிரசித்தமான விளையாட்டு எது?
1) காற்பந்து 2) கரப்பந்து 3) கிரிக்கெட் 4) ஹொக்கி

09. பௌத்தர்களுடைய சமயநூல் எது?
1) திரிபிடகம் 2) அல்குர்ஆன் 3) பைபிள் 4) பகவத்கீதை

10. கழித்தொதுக்கப்பட்ட பொருளை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்றமாதிரி மாற்றி அமைத்தல் எவ்வாறு அழைக்கப்படுமெ?
1) உற்பத்தி 2) மீள்சுழற்சி 3) தன்னிறைவு 4) கலப்படம்

11. கீரை வகைகளில் உள்ள போஷணைச் சத்துக் குறையாமலிருக்க யாது செய்ய வேண்டும்?

1) வெட்டிய பின் கழுவ வேண்டும். 2) கழுவியபின் வெட்ட வேண்டும்.
3) கூடுதலாக வேக வைக்கவேண்டும். 4) அவித்து உண்ணவேண்டும்.


12. தாவரங்களிலிருந்தோ அல்லது விலங்குகளிலிருந்தோ பெறப்படாத, உணவுக்கு அவசியமான ஒன்று பின்வருவனவற்றுள் எது?
1) மாசி 2) வெண்ணெய் 3) யோகட் 4) உப்பு

13. ஆறும் கடலும் கலக்குமிடத்தைக் குறிக்கும் பொதுவான சொல் எது?
1) களப்பு 2) குடா 3) கழிமுகம் 4) முனை

14. கியூலெக்ஸ் என்ற நுளம்பின்மூலம் பரவும் நோய் எது?
1) யானைக்கால் நோய் 2) மலேரியா
3) டெங்கு 4) பறவைக்காய்ச்சல்

15. விவசாயத்தின்போது பயன்படுத்தப்படும் சாதனம் ஒன்று
1) பரம்புப்பலகை 2) மட்டப்பலகை
3) மூலைமட்டம் 4) சேற்றுத்தடுப்பு

16. ஒரு மின்கலம் ஒரு மின்குமிழ் இரண்டு கம்பித்துண்டுகள் என்பவற்றைக் கொண்டு ஆக்கப்பட்ட பின்வரும் எந்த அமைப்பில் மின்குமிழ் ஒளிரும்?
1) 2) 3) 4)




17. இலங்கையின் தேசியக்கொடியில் சுற்றிவரவுள்ள மஞ்சள் நிறம் குறிப்பது?
1) தேசிய ஒற்றுமை 2) நாட்டின் தன்னிறைவு
3) தேசாபிமானம் 4) நாட்டின் தனித்தன்மை

18. இலங்கையின் தேசிய இலச்சினையால் முன்வைக்கப்படும் கருத்து
1) சமாதானம் நிறைந்த நாட்டில் சூரிய சந்திரர் உள்ளவரை தர்மம் நிலைக்கும் என்பது
2) சௌபாக்கியமான நாட்டில் சமாதானம் இருக்கும்வரை நல்ல குடிமக்கள் உருவாவர் என்பது
3) சௌபாக்கியமான தன்னிறைவுடைய நாட்டில் சூரிய சந்திரர் உள்ளவரை தர்மம் பாதுகாக்கப்பட்டு நாட்டு மக்கள் அனைவரும் சிறப்புற்றிருப்பர் என்பது
4) வீரமும் சமாதானமும் என்றும் நாட்டு மக்களுக்கு அவசியம் என்பது.

19. பின்வரும் விளையாட்டுக்களில் கிராமிய விளையாட்டு எது?
1) 2) 3) 4)



20. குவளையொன்றில் நீர் நிரப்பிய ஒரு மாணவன் அதனுண்ளள் ஒரு சீவாத பென்சிலைப் போட்டபின் ஒரு பக்கமாக இருந்து அவதானித்தான். அவனது அவதானிப்பில் பென்சில் தென்பட்ட விதத்தைக் காட்டும் சரியான உரு எது?
1) 2) 3 ) 4)



21. 

அருகிலுள்ள இலச்சினை எந்த நிறுவனத்துக்குரியது?
1) காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
2) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
2) சுகாதாரத் திணைக்களம்
4) அஞ்சல் திணைக்களம்

22. நிலத்தில் சேரும் தாவரப் பாகங்களை உக்கலடையச் செய்யும் பிராணி எது?
1) எறும்பு 2) மண்புழு 3) நத்தை 4) கறையான்

23. குறித்த சீருடை இல்லாது பணிபுரியும் அரச உத்தியோகத்தர் இவர்களில் யார்?
1) பொலிஸார் 2) இராணுவத்தினர்
3) மருத்துவதாதிகள் 4) ஆசிரியர்கள்

24. பிறைப்பூ எம்மாதத்தில் பூக்கிறது?
1) தை 2) புரட்டாதி 3) பங்குனி 4) சித்திரை

25. 'ஆராரோ ஆரிவரோ' எனத் தொடங்கும் கிராமியப்பாடல் எவ்வாறு பெயரிடப்படுகிறது?
1) ஒப்பாரி 2) தாலாட்டு 3) அருவிவெட்டு 4) ஓடப்பாட்டு

26. மரத்திலுள்ள இலைகளை ஒன்றுசேர்த்து ஒட்டிக் கூடு அமைக்கும் பிராணி எது?
1) காகம் 2) அணில் 3) செவ்வெறும்பு 4) எறும்பு

27. தாவரப்பாகங்களை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் பிராணி எது?
1) குதிரை 2) அணில் 3) காகம் 4) பன்றி

**28. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விடயத்துக்கேற்ப பொருத்தமான கூட்டினுள் "✓" அடையாளமிடுக. உமது வசதிக்காக 1 ம் வினாவுக்கான கூடு நிரப்பப்பட்டுள்ளது.**

| | தாவரத்தின் பெயர் | நடுவதன்மூலம் புதிய தாவரம் ஒன்றைப் பெறும் வழி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தண்டு | இலை | வேர் | வித்து | பழம் | கிழங்குத் துண்டு |
| 01) | தேங்காய் | | | | | | ✓ |
| 02) | மாங்காய் | | | | | | |
| 03) | கறிவேப்பிலை | | | | | | |
| 04) | சதைக்கரைச்சான் | | | | | | |
| 05) | அவரை | | | | | | |
| 06) | மரவள்ளி | | | | | | |
| 07) | டேலியா | | | | | | |
| 08) | பனை | | | | | | |
| 09) | வற்றாளை | | | | | | |
| 10) | பலா | | | | | | |

29. பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.
6735, 6537, 6753, 6573

..................................................

30. குமாரின் நிறை அவனது அப்பாவின் நிறையின் 1/3 பங்காகும். அவனது அப்பாவின் நிறை 71kg எனின், குமாரின் நிறை என்ன?


..................................................

31. மோட்டார் சைக்கிள் ஒன்று குறித்த தூரம் சென்ற பின்னர் அதன் மானியின் வாசிப்பு இவ்வாறு இருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 3 | 9 | 9 | 9 |


இன்னும் 11km சென்ற பின்னர் அதன் மானியின் வாசிப்பு எவ்வாறு இலக்கங்கள் அமைந்திருக்கும் என எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

32. 

அருகிலுள்ள உருவில் 3 தட்டுகள் உள்ளன. இதில் மேல்தட்டில் 1 பெட்டி வரும்வரை இன்னும் பெட்டிகளை அடுக்கினால் மொத்தம் எத்தனை பெட்டிகளை அவ் அடுக்கு கொண்டிருக்கும்?


..................................................

33. 

ஒவ்வொரு இடைவெளியும் 1 செ.மீ. இருக்குமாறு பலகை ஒன்றில் பின்வருமாறு ஆணிகள் அறையப்பட்டுள்ளன. அதில் இறப்பர் நாடாவொன்றினால் சில ஆணிகள் இணைக்கப்பட்டுள்ள விதம் உருவில் உள்ளது. இறப்பர் நாடாவில் உள்ளடக்கப்படும் உருவின் பரப்பளவு எவ்வளவு?
...................... சதுர சென்ரிமீற்றர்

34. தேக்கரண்டி ஒன்றில் எடுக்கக்கூடிய திரவத்தின் அளவு 5 மில்லிலீற்றராகும். நோயாளி ஒருவருக்கு ஒரு நேரத்திற்கு இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளைக்கு 3 தடவை குடிப்பதற்கு திரவ மருந்து கொடுக்கப்பட்டுள்ளது. அவர் 3 நாள் முழுமையடையும்வரை வைத்தியர் சொன்னதுபோல் மருந்து குடித்தாராயின் அவர் குடித்த மருந்தின் அளவு யாது?
.......................... மில்லிலீற்றர்

**35. தேவிகா முதலாம் தவணைப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.**




01) சுற்றாடல் பாடத்தை விட தமிழ்ப்பாடத்தில் எத்தனை புள்ளி கூடுதலாகப் பெற்றுள்ளார்?

..................................

02) எவ் இரு பாடங்களில் சம புள்ளிகள் பெறப்பட்டுள்ளன?

..................................

03) கணித பாடத்தில் 100 புள்ளி பெறுவதற்கு எத்தனை புள்ளிகள் குறைவாக உள்ளன?

..................................

04) தேவிகா 5 பாடங்களிலும் பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?

..................................

**36. பின்வரும் வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

01) I am reading a book - ..................................................

02) Where are you? - ..................................................

**37. பின்வரும் தமிழ் வாக்கியத்தை சிங்கள் மொழியில் கூறும் விதத்தை தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதுக.**

01) எனக்கு விளையாடுவதற்கு ஆசை -
..................................................

* பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை எழுதுக.


02) மம பஹவசரே இகெனகன்னவா -
..................................................

**38. உருக்களில் காட்டப்பட்டுள்ள பெயர்களை எழுதுக.**

01) 
02) 
03) 

................................ ................................ ................................

**39. பின்வரும் சம்பவத்தினை வாசிக்க. அதனைத் தொடர்ந்து 5 வாக்கியங்களை எழுதுவதற்கு கீழே தரப்பட்டுள்ள படங்களைப் பயன்படுத்துக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களுக்குமேல் இடம்பெறுவதோடு எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் சரியாக அமைதல் வேண்டும்.**
ஆகாயத்தில் கருமேகங்கள் வரிசை வரிசையாய்ச் சூழ்ந்திருந்தன. மெல்ல மெல்ல சூழலை இருள் கௌவ ஆரம்பித்தது. சுழன்று வீசிய காற்றில் மரங்கள் பலமாக அசைந்தாடின.



கட்டுரை எழுதுவதற்கு வேறுதாளைப்பயன்படுத்துக.


பீ. எம். புன்னியாமீன்,
மஸீதா புன்னியாமீன்.
தொ.பே.இல: 081 2493746.


# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள

## மாணவர்களுக்கான சில ஆலோசனைகள்

மூ.வே. அன்பழகன் ,
ஆசிரியர்,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே ! நீங்கள் இப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவது நிச்சயம் என்ற உணர்வுடன் பரீட்சைக்குத் தோற்றுங்கள். பரீட்சைக்குத் தேவையான தயார்படுத்தல்களை நன்கு திட்டமிட்டு மேற்கொண்டுள்ளீர்கள். கடின பயிற்சிகளைச் செய்து பெரும் முயற்சி செய்த நீங்கள் நிச்சயமாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவது உண்மை.

**வெற்றி உங்களுக்கே !** பரீட்சை என்பது உங்கள் திறமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்த கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பம். ஆகவே பரீட்சையை எண்ணி நீங்கள் ஏங்கவோ தயங்கவோ அஞ்சவோ வேண்டாம். நீங்கள் எல்லோரும் திறமைசாலிகள் தான் . உங்கள் எல்லோரிடமும் நல்ல ஆற்றல்கள் இருக்கின்றன அவற்றை நல்லமுறையில் பயன்படுத்தினால் நிச்சயம் வெற்றி உங்களுக்கே.

**பரீட்சைக்கு முன்–** பரீட்சை தினத்துக்கு முதல் நாள் அதிக நேரம் கண்விழித்து படிப்பதைத் தவிர்த்து நன்கு ஓய்வெடுங்கள். அன்றைய நாள்களில் மரக்கறி உணவுகளை உண்பது உடலுக்கு ஆரோக்கியமானது. குளிர்பானங்கள், செயற்கை உணவுகளை தவிர்ப்பது மிகவும் நல்லது. மனதை ஒரு நிலைப்படுத்தி மகிழ்ச்சிகரமாக இருங்கள். பரீட்சைக்கு தேவையான பொருள்களாக இரண்டு பேனாக்கள், இரண்டு பென்சில்கள், ஓர் அடிமட்டம், ஓர்அழிப்பான், சுட்டிலக்கம் மட்டும் எழுதப்பட்ட புதிய தாள்கள் என்பவற்றைக் கொண்டு செல்ல ஆயத்தப்படுத்துங்கள். இரவு 9 மணிக்கு முன்பதாக நித்தரைக்குச் சென்று விடுதல் சாலச் சிறந்தது

**பரீட்சை அன்று காலையில்** – காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து உடலை நன்கு சுத்தமாக வைத்திருங்கள். அது போல் உங்கள் உள்ளத்தையும் உற்சாகப்படுத்த தங்கள் இல்லங்களுக்கு அருகில் உள்ள வணக்கத் தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுங்கள். காலையில் இலகுவாக சமிபாடடையக்கூடிய வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளை அளவாக உட்கொள்ளுங்கள் . பரீட்சை ஆரம்பமாவதற்கு குறைந்தது 30 நிமிடங்கள் முன்பதாக பரீட்சை மண்டபத்திற்குச் சமுகமளியுங்கள்.

**பரீட்சை மண்டபத்தில்** – நீங்கள் எழுதப் போவது ஒரு போட்டிப் பரீட்சை . ஆகவே அதில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்காக நீங்கள் உங்கள் முழுத்திறமைகளையும் ஆற்றல்களையும் அங்கே வெளிப்படுத்த வேண்டும். பரீட்சை மண்டபத்தில் இருக்கும் அவ்வளவு நேரத்தையும் பயன்படுத்துங்கள்.

**வினாத்தாள் 1 எழுதும்போது** – வினாத்தாள் தந்ததும் முதலாவதாக உங்கள் சுட்டிலக்கத்தை எழுதிவிடுங்கள். பரீட்சை தாள்களில் அளவான பெரிய எழுத்துக்களில் அழகாக எழுதுங்கள் மிகச்சிறிய தெளிவில்லாத எழுத்துக்களில் எழுதும் போது சரியான விடைகள் கூடத் தெளிவின்மையால் பிழையாக கணிக்கப்படலாம். விடைகளை எழுத முன்பு வினாக்களில் கேட்கப்பட்டுள்ள விடயத்தை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள் இது மிக அவசியமானதாகும் ஏனெனில் கேட்கப்படும் கேள்விகளுக்கான விடைகள் தரப்பட்டுள்ள விடயங்களிலேயே மறைந்திருக்கலாம். அவற்றை வாசித்து அறிந்து கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டா என்று உங்களை பரீட்சிக்கின்றார்கள். ஆகவே வினாத்தாளில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தெளிவாக அறிந்த பின்னரே விடைகளை அளிக்கத் துணியுங்கள் அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விடையளியுங்கள். கவனத்தைத் சிதறிவிடாது வினாவை அவதானித்து விடை எழுதுங்கள்.

செய்கை வழித் தாளில் வந்த விடையை மிக அவதானத்துடன் விடைத்தாளில் எழுதுங்கள்.

கேட்கப்படும் கேள் விகள் மிகவும் இலகுவானவை. ஆனால் அவை கேட்கப்படும் முறை தான் கடினமாகவும் சிக்கலாகவும் தோன்றும். ஆகவே கேள்விகள் தெளி வாக விளங்கும் வரை திரும்பத் திரும்ப வாசியுங்கள். தெளிவான பின் கேள்வி எவ்வளவு இலகுவானதென்பது உங்களுக்கே நன்கு விளங்கும். விடை எழுதுவதற்கு தரப்பட்ட நேர அவகாசம் நீங்கள் தெளிவாக வாசித்து ஒழுங்காக விடையளிக்கப் போதுமானதாகும் நீங்கள் நேரம் போதாது என்ற பதற்றத்தை விட்டு விடுங்கள் ஆயினும் சுறுசுறுப்பாக விடையளியுங்கள்.

1] இவ் வினாப்பத்திரம் 40 வினாக்களை உள்ளடக்கியது

2] 45 நிமிட நேரமே வழங்கப்படும்

3] குறிப்பிட்ட நேரத்துக்குள் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்

4] வினாப்பத்திரம் 1 இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியே செயலா ற்றுவது மிகப் பிரதானமாகும். உதாரணமாக ஒரு வினாவுக்கு 4 விடைகள் தரப்பட்டு சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் , சரியான விடைக்கு கோடிடப்படுமாயின் அவ் விடைகளுக்குரிய புள்ளிகள் வழங்கப்படமாட்டாது

5] ஒரு வினாவுக்கு இரு சொற்களோ இரு எண்களோ எழுத வேண்டியிருப்பின் ஒன்று மாத்திரம் எழுதப்பட்டிருப்பின் , அந்த வினாவுக்கு ஒரு புள்ளியேனும் வழங்கப்படுவதில்லை.

6] நீங்கள் எழுதும் விடைகளில் எழுத்துப் பிழைகள் வருவதைக் கூடுமான வரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

7] சரியான விடையின் கீழ் கோடிடுக என்றவாறு கேட்கப்படும் வினாக்களில் மிகச் சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை மட்டும் கோடிடாமல் முழு விடைக்கும் ஒழுங்காக கோடிடுங்கள். சரியான விடையின் கீழ் கோடிடும் போது அடிமட்டத்தை வைத்துக் கோடு வரைவதற்கு நேரம் விரையமாகலாம். எனவே , அதனை தவிர்த்துச் சுயமாகச் கோடிடுவது நல்லது

8 ] சரியான விடைக்கு கோடிடும் போது ஓரேயொரு விடைக்கு மட்டும் கோடிடுங்கள். இரு விடைகள் கோடிடப் பட்டு அதில் சரியான விடை இடம்பெற்றிருந்தாலும் அது பிழையான தெரிவாகவே பரீட்சகரால் கருதப்படும்

9] செய்கை வழிகள் எதுவும் , உமக்கு தரப்படும் பரீட்சை விடைத்தாளில் இடம் பெறாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள். தேவையேற்படின் பென்சிலால் குறித்து விடைகளைப் பெறலாம்.

10] வினாத்தாள் ஒன்றில் உங்கள் வேகமும் விவேகமும் சரிவர துலங்க வேண்டும்.

45 நிமிடங்களில் செய்து முடிக்க வேண்டிய வினாத்தாள் ஒன்றை 30 நிமிடங்களில் செய்து முடித்து விட்டீர்களானால் மிகுதியாகவுள்ள 15 நிமிடங்களில் பரீட்சைத்தாள்களை திரும்ப முதலாவது வினாவில் இருந்து திருப்பிப் பாருங்கள் . சிலவேளையில் நீங் கள் சரியென நினைத்தது தவறாக இருக்கலாம். அதைத்திருத் திக் கொள்ள 15 நிமி டங்களையும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துங்கள் . எப்படியாயினும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைத் தாளை மூடிவிட்டு பராக்குப் பார்த்துக் கொண்டிருப்பது மிக மிக முட்டாள் தனமான செயலாகும். அங்கு நீங்கள் பராக்கு பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் பெறும் புள்ளிகளை குறைத்து விடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

வினாக்களில் கேட்கப்பட்டுள்ள முறைகளில் விடையளியுங்கள். அதாவது கீறிட்ட இடத்தில் நிரப்புங்கள் என்று கேட்கப்பட்டால் கீறிட்ட இடத்தில் தெளிவாக எழுதுங்கள். சரியான விடையின் கீழ் கீறிடுங்கள் எனக் கேட்கப் பட்டால் சரியான விடையின் கீழ் கீறிடுங்கள் . அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுங் கள். கண்டிப்பாக எல்லா வினாக்களுக்கும் விடையளி யுங்கள். விடையளிக்காது விட்டு விடாதீர்கள்.

**வினாத்தாள் 2**

இவ் வினாப்பத்திரத்துக்கு விடை எழுத ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள் தரப்படும், இவ் வினாப்பத்திரம் தரம் 1 தொடங்கி 5 வரையுள்ள அரச பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும். தமிழ்மொழி, சுற்றாடல் செயற்பாடுகள், கணிதம், ஆங்கிலம், அழகியல், ஆக்கம், உடற்கல்வி, சிங்களம் ஆகியவற்றில் இருந்து வினாக்கள் தொகுக்கப் படும் குறிப்பிட்ட நேரத்க்கு சகல வினாக்களுக்கும் விடையளிக்கவேண்டும், வினாப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியே செயலாற்றுவது மிகப் பிரதானமாகும் , நீங்கள் எழுதும் விடைகளில் எழுத்துப் பிழைகள் வருவதைக் கூடுமான வரை தவிர்த்துக் கொள்ளுங்கள் , செய்கை வழி கள் எதுவும் உமக்குத் தரப்படும் பரீட்சை வினாத்தாளில் இடம்பெறாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள் விடைகள் யாவும் தெளிவான கையெழுத்தில் இருக்க வேண்டும். கணித வினாக்களில் அலகுகளை கவனமாக எழுதுங்கள்.

**கட்டுரைக்கு விடையளிக்கும் போது....**

காலத்தை தீர்மானிக்கவேண்டும் 6 வாக்கியங்களுக்கு எதை எழுதுவது எனத் திட்டமிடல் வேண்டும். கருத்து தெளிவாக இருத்தல் வேண்டும் கேட்கப்பட்ட அளவு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் , பயனிலலை திருத்தமாக அமைத்த வாக்கியங்களாக இருக்க வேண்டும். வாக்கியங்கள் தலைப்புக்குப் பொருத்தமானதாக எழுதப்பட்டிருக்க வேண்டும் எழுத்துப் பிழைகளின்றி இருக்க வேண்டும். பேச்சு மொழியில் எழுதப்படலாகாது, வாக்கியங்கள் கூறியது கூறலாக அமையக்கூடாது, வினா வினவப்பட்டுள்ள காலத்தைக் கருத்தில் கொண்டு விடையெழுத வேண்டும், ஆங்கிலச் சொற்கள் கலத்தல் கூடாது , உறுப்பான எழுத்தாக இருக்க வேண்டும், தலைப்பை திருப்பி எழுதக்கூடாது . நிறைவாக – உங்களது சிறந்த பெறுபேற்றைக்கேட்டு ஆனந்தப் படுவ தற்காக பெற்றோர் , ஆசிரியர் , பாடசாலைச் சமூகத் தினர் யாவரும் எப்போழும் ஆவலாக இருப்பர் உங்கள் பெறுபேறு குறித்து உங்கள் வளர்ச்சியில் அக்கறை கொண்ட யாவருக்கும் அறியப்படுத்துங் கள். வளமான எதிர்கால நல்வாழ்வுக்கும், கல்விப் பாதையில் வெற்றிகள் பல குவித்திடவும் இப் பரீட்சை ஒரு படிக் கட்டாக அமையட்டும்.

நல்வாழ்த்துக்கள் !

### வினாத்தாள் 5இல் வெளியான வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 2 | 02. 3 | 03. 3 | 04. 2 | 05. 1 | 06. 2 | 07. 2 | 08. 1 | 09. 2 | 10. 3 | 11. 3 |
| 12. 3 | 13. 3 | 14. 2 | 15. 1 | 16. 2 | 17. 1 | 18. 1 | 19. 3 | 20. 2 | 21. 1 | 22. 3 |
| 23. 3 | 24. 1 | 25. 2 | 26. 2 | 27. 1 | 28. 1 | 29. 1 | 30. 2 | 31. 3 | 32. 3 | 33. 14 |
| 34. 49 | 35, 1 | 36. 60 ரூபா 00 சதம் | | 37. 125 ரூபா 00 சதம் | | | 38. வடக்கு | | 39. கமல் | |
| 40. 8 | | | | | | | | | | |

### வினாத்தாள் 5இல் வெளியான வினாத்தாள் II இற்கான விடைகள்

01) 01. இரவுக் காட்சி / நிலாக் கட்சி 02. முத்துக்கள்போல் / புன்முறுவல் பூப்பது போல
03. அசைந்து ஆடாத 04. ஒளி / விழிப்புடன் / கீதம் 05. குருவி இன்று விழிப்புடன் இருந்தது
06. நித்திரை 07. அசையும் 08. இசைத்தன 09. அம்மா 02) எதையும் அளவுடன் செய்தல் வேண்டும்.
03) 01. நான் பிறந்த சூழல் அழகான இயற்கை காட்சிகளைக் கொண்டது.
02. கோழி தனது குஞ்சுகளுக்கு உணவு தேடிக் கொடுக்கின்றது. 04) 01. இயற்கை
02. உபகரணங்களைப் 05) 01. தலைநகரம் 02. நூற்றாண்டு 06) 01. குயில்கள் கூவின
07) 01. நிலையில்லாதது 02. வேதனையில்துன்புதல் 08) 01. ஆகா! என்ன அழகான ஓவியம்
02. நான் வந்தேன்; ஆசிரியரைக் கண்டேன். 09) 01. அலவன் 02. நள்ளி / பெடை
10) 01. pluck 02. sweep 03. clean 11) 01. பாசல 02. புட்டுவ 03. தஹய 04. நாசய
12) 01. Bread 02. Pharmacy 03. Airport 04. Bicycle 13) 01. ✓ 02. × 03. ✓ 04. ✓ 05. ✓ 14) 01. ஸ்ரீலங்கா ரெலிகொம் 02. வாகனம் நிறுத்தத் தடை 03. கல்பிந்து 04. வெற்றிலை
15) 01. 3 02. 2 03. 3 04. 1 05. 1 06. 4 07. 3 08. 3 09. 2 10. 3
11. 2 12. 4 13. 1 14. 2 16) 01. 55/= 02. கார்த்திகை 03. ஐப்பசி 04. 15/= 05. 265=
17) 01. 8, 6 02. 3cm 03. 4km 900m 04. $3cm^2$ 05. 1100 ரூபா 06. 45 ரூபா 07. 35 ரூபா
08. 28 ரூபா 09. 40999 10. 10 11. 1.0 12. 4 மணி 45 நிமிடம் 13. 40/=
18) பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக.

### வினாத்தாள் 6இல் வெளியான வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 3 | 02. 2 | 03. 2 | 04. 2 | 05. 3 | 06. 3 | 07. 3 | 08. 1 | 09. 1 | 10. 2 | 11. 2 |
| 12.1 | 13. 1 | 14, 3 | 15. 2 | 16. 1 | 17. 2 | 18. 2 | 19. 1 | 20. 2 | 21. 3 | 22. 2 |
| 23.3 | 24. 3 | 25. 2 | 26. 3 | 27. 1 | 28. 2 | 29. 2 | 30. 3 | 31. அநுராதபுரம் | 32.4 | 33. 2, |
| 4, 3, 5, 1 | | 34. 3, 4, 5, 1, 2 | | 35. 1, 2, 3, 4, 5 | | 36. 2 முறை | | 37. 5 முறை | | 38. 3 முறை |
| 39. D | 40. C | | | | | | | | | |

### வினாத்தாள் 6இல் வெளியான வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 01) மாலைக்காட்சி 02) வௌவால் 03) சூரியக்குமரனை வழியனுப்பியது 04) பல வண்ண நிறங்களில் சித்திரக்கோலம் காட்டின 05) தங்கப் பந்து போல 06) மேல், தங்க, வண்ண, சித்திர 07) பொருத்தமான மொழிநடையில் எழுதப்பட்ட விடைக்கு புள்ளியிட
08) 1. பறவைகளின் 2. உடலை 3. திசையிலிருந்தும் 4. கவலையில் 09) ஆந்தை, ஆட்காட்டிக்குருவி, மின்மினிப்பூச்சி 10) 1. இரை, ஒலி 2. மறை, பார் 02. 01) அணைக்கட்டு
02) ஈருடகவாழி / உபயவாழி 03. 01) இறத்தல் 02) உறங்குதல் 04. 01) ஈடுஇணை
02) சுகதுக்கம் 03) ஏற்றத்தாழ்வு 05. 01) கைம்மண்ணளவு 02) ஏட்டுச்சுரைக்காய்
03) முளையில் 06. 01) வண்டுகள் வந்து பூக்களில் அமர்ந்து தேனைக் குடிக்கின்றன.
02) இராக்காலங்களில் பூக்கும் பூக்கள் வெள்ளை நிறமானவை 07. 01) தொடர்ச்சியான மழை காரணமாக மலையகத்தில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. 02) இலங்கை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் பெற்றது. 08. 2 09. 1 10. 211. 1 12. 4 13. 3 14. 1 15. 1 16. 4 17. 1 18. 3 19. 2 20. 3 21. 4 22. 4
23. 4 24. 2 25. 2 26. 3 27. 1 28. 02) வித்து 03) வேர் 04) இலை 05) வித்து
06) தண்டு 07) கிழங்கு 08) பழம் 09) தண்டு 10) வித்து 29. 6537, 6573, 6735, 6753 30. 24 kg 31. 04010 32. 21 33. 6 சதுர சென்றிமீற்றர் 34. 90 மில்லிலீற்றர்
35. 01) 10 புள்ளிகள் 02) தமிழ், சமயம் 03) 50 புள்ளிகள் 04) 280 36. 01) நான் புத்தகமொன்றை வாசிக்கிறேன் 02) நீங்கள் எங்கே போகிறீர்கள் 37. 01) மட்ட செல்லம் கரன்ன ஆஸய் 02) நான் ஐந்தாம் தரத்தில் கற்கிறேன்
38. 01) ஆர்தர் சீ. கிளார்க் 02) அநகாரிக தர்மபால 03) கர்னல் ஹென்றி ஓல்கொட் 39. பொருத்தமான வாக்கியத்துக்கு புள்ளி வழங்குக.



மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் வாஹிட் ஹசன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது செயலகத்தில் சந்தித்தார்.

## கூடிய மின் உற்பத்தி; பாதிப்புக்கு அதுவே காரணம்

### நுரைச்சோலையில் 5ஆவது தடவை பழுது

கொழும்பு,ஓக.25

அளவுக்கதிகமான மின்உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டமையே நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் பழுதடைந்தமைக்குக் காரணம் என்று இந்த மின் உற்பத்தி நிலையத்தை வடிமைத்த சீன வடிவமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக மின்உற்பத்திப் பணிகள் 85 வீதமாக குறைவ டைந்தது. மின் உற்பத்தி நிலையத்தை முறையாக திட்டமிட்டு கையாளப்படாமையே இவ்வாறான பிரச்சினைக்குக் காரணம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மின்உற்பத்திப் பிரச்சினைகள் காரணமாக கொழும்பில் தினமும் இரண்டு மணித்தியால மின்தடை ஏற்பட்டது. நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஆரம்ப கட்டத்திலிருந்து ஐந்தாவது தடவையாக பழுதடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தபால் மூலம் வாக்களிப்போர் அஞ்சத் தேவையில்லை

### தேர்தல் திணைக்களம் தகவல்

கொழும்பு,ஓக.25

வாக்களிக்கப்பட்ட பின் வாக்குச் சீட்டுகளில் மாற்றம் செய்யப்படலாம் என தபால் மூலம் வாக்களிப்போர் அஞ்சத் தேவை இல்லையென தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு வாக்குச்சீட்டில் மூன்றுக்கு மேற்பட்ட தனித்துவத் தன்மைகள் உள்ளன. இதனால் மாற்றங்கள் செய் வது சாத்தியமில்லை என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னைய தேர்தல்களில் தபால் வாக்களிப்பின் போது வாக்களித்த பின் வாக்குச்சீட்டை காட்டும்படி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என முறைப்பாடு கிடைத்தாக தேர்தல்கள் ஆணையாளர் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். இம்முறை அவ்வாறு நிகழாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

# டெங்கை ஒழிக்க வான் வழியாக பி.ரி.ஐ. பக்ரீறியா தூவ ஏற்பாடு

### கொழும்பு நகரில் விரைவில் நடவடிக்கை

கொழும்பு,ஓக.25

கியூபாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பி.ரி.ஐ பக்ரீறியாக்கள் கொழும்பு நகரில் வான் வழியாக தூவப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை டெங்கு தொற்று தொடர்பாக இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த இரண்டு மாதங்களில் மேற்கு, சப்ரகமுவ மாகாணங்கள் மற்றும் கண்டி மாவட்டத்தின் அக்குறணை பிரதேசத்தில் டெங்கு தொற்று நோய் தீவிரமாக பரவியதாக தொற்றுநோய் பரவுகை ஆய்வுப் பிரிவு கண்காணித்துள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தில் 25 ஆயிரத்து 500 பேர் டெங்கு தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன், 83 பேர் உயிரிழந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

டெங்கு தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வான் வழியாக பி.ரி.ஐ பக்ரீறியாக்களை தூவுவதற்கு செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கால்நடையாக இலகுவாக செல்ல முடியாத நிலையில் இருக்கின்ற பிரதேசங்களை பிரதானமாக இலக்குவைத்தே பக்ரீறியாக்கள் தூவப்படவுள்ளன. மேலதிக பி.ரி.ஐ பக்ரீறியாக்களை இறக்குமதி செய்வது தொடர்பாக கியூபா தூதவர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சு அதிகாரிகளுக்குஇடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. (ச)

## பாணந்துறையில் மூழ்கியது சைப்பிரஸ் வர்த்தகக் கப்பல்

**குறித்த கப்பல், கப்பல் சேவைச் சட்டத்தை மீறியமைக்காக 2007 ஆம் ஆண்டு முதல் தடுத்து வைக்கப் பட்டிருந்தது.**

கொழும்பு,ஓக.25

பாணந்துறை கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது. இந்தக் கப்பல் பாணந்துறைக்கு மூன்று கடல்மைல்கள் தொலைவில் நங்கூரமிடப் பட்டிருந்ததாக வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் அஜித் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சைப்பிரஸுக்குச் சொந்தமான குறித்த கப்பல், கப்பல் சேவைச் சட்டத்தை மீறியமைக்காக 2007 ஆம் ஆண்டு முதல் தடுத்து வைக்கப் பட்டிருந்தது.

சமுத்திரம் மாசடையக் கூடும் என்ற காரணத்தினால் அதிலிருந்த 207 தொன் எரிபொருள் அகற்றப்பட்டதாக வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். ஆயினும் கப்பலின் தாங்கியில் 10 அல்லது 20 தொன் எரிபொருள் மீதம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## இந்தியாவின் 3 ரயில்கள் இலங்கையில் சேவையில்

கொழும்பு,ஓக.25

இந்தியாவினால் வழங்கப்பட்ட மூன்று ரயில்களை இலங்கை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இரண்டு அதிவேக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சில நாள்களிலேயே பழுந்தடைந்தன.

இந்த நிலையில், முதல் கட்டமாக குறித்த ரயில்கள் பரிசோதனை நோக்கில் சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு - மாத்தறை மற்றும் கொழும்பு - திருகோணமலைக்கு இடையில் இந்தச் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

தெற்கு அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்காக இந்த ரயிலகளை இந்தியா வழங்கி இருந்தது.

இதேவேளை கடந்த வாரம் சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஐந்து ரயில்கள் சோதனை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும் எட்டு ரயில்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## குற்றம் புரிந்த பட்டதாரிகளும் சிறையில்

இலங்கையில் கடந்த வருடத்தில் பல விதமான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 300 பட்டதாரிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கையில் இருக்கின்ற சிறைச்சாலை களில் கல்வி கற்றவர்களும், உயர்கல்வித் தரங்களைக் கொண்டவர்களும் இருப்பதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். சாதாரண சமூக நிலையை கொண்டவர்களைப் போன்றே, மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற சமூகத்தில்உயர் நிலைமைகளை வகிப்பவர்களும் தண்டனை அனுபவித்து வருவதாகஅவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றம் புரிந்தவர்கள் அவர்களின் குற்றத்தின் தன்மைக்கேற்ப சிறைச்சாலைச் சூழலில் தண்டனை அனுபவிப்பதாகவும், அவர்கள் உயர் கல்வி கற்றவர்கள், மற்றும் கல்லாதவர்கள் என்ற பாகுபாடு காட்டப்படவில்லை என்றும் அவர் கூறினார். சிறைச்சாலையினுள் தமக்கு தேவையான கல்வியைப் பெற விரும்புபவர்களுக்கும் அதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## மாலைதீவு படையினருக்கு இலங்கையில் பயிற்சி

கொழும்பு,ஓக.25

மாலைதீவு பாதுகாப்புப் படையினருக்கு இலங்கையில் பயிற்சி அளிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினருக்கு பயிற்சி அளிப்பது தொடர்பில், இலங்கைக்கு வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முஹம்மட் வாஹிட் ஹசன், ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுடன்பேச்சு நடத்தியுள்ளார்.

இதுதொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சின்போது பொருளாதாரத் துறைகளை மேம்படுத்திக் கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கல்வி, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வரும் உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்

### மருத்துவ கவுன்ஸில் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.25

இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் சிரேஷ்ட அங்கத்தவர் டாக்டர் லலந்த ரணசிங்க மீதான கைக்குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கை மருத்துவ கவுன்ஸில் இந்த மிரட்டல்களுக்கு பயப்படப்போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

இது தனியொரு சம்பவம் அல்ல. இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் பல அங்கத்தவர்கள் குண்டுத் தாக்குதல், துப்பாக்கிச்சூடு, அடித்தல் போன்ற பலவகை பயமுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று மருத்துவ கவுன்ஸில் அங்கத்தவர் சரத் காமினி டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ கவுன்ஸில் அதன் விதிகளை மாற்ற வேண்டுமென சிலர் எதிர்ப்பார்க்கின்றனர். ஆனால், நாம் எமது கொள்கைகளை தொடர்ந்தும் கடைப்பிடிப்போம் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கை மருத்துவக் கவுன்ஸிலின் பதிவாளரான டாக்டர் என்.ஜே.நோனிஸ், இலங்கை மருத்துவ கவுன்ஸில் தற்போது மூன்று முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார் என்று கூறினார்.

வெளிநாட்டில் வைத்திய பட்டம் பெற்றோரை இலங்கையில் கடமையாற்ற அனுமதிக்கும் பரீட்சை, இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள், வெளிநாட்டு வைத்தியர்களை இலங்கையில் கடமைபுரிய அனுமதித்தல் என்பவையே இந்தப் பிரச்சினைகள் என்று அவர் தெரிவித்தார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி இன்னும் இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் தராதரங்களைப் பூர்த்திசெய்யவில்லை. இங்கு விரிவுரையாளர்கள் பற்றாக்குறை உள்ளது. அத்துடன், இன்னும் போதனா வைத்திய சாலையும் அமைக்கப்படவில்லை என்று ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவ பீடாதிபதி ஜயந்த ஜயவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கென நடத்தப்படும் பரீட்சையை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக இலங்கை மருத்துவ கவுன்ஸில் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதிபதி ஹர்ஷ செனவிரத்ன தெரிவித்தார்.

சட்டங்களை பிரயோகித்து தரமான மருத்துவ வாண்மையாளர்களை உருவாக்கவே நாம் உள்ளோம். நாங்கள் அழுத்தங்களுக்குப் பணியப் போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பதவி விலகுமாறு நான் கூறவில்லை

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.25

பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத்தை பதவியிலிருந்து விலகுமாறு நானோ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸோ கூறவில்லை என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக் கீம் தெரிவித்தார்.



பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தனது பதவியிலிருந்து விலகச் செய்தமை குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எனது இல்லத்தில் நானும் தவிசாளர் பசீர் சேகுதாவூத்தும் மனம் விட்டுக் கலந்துரையாடினோம். அப்போது தனது பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக என்னிடம் கூறினார்.

உடனடியாக அவ்வாறு செய்ய வேண்டாம் என நான் அவரிடம் கேட்டுக்கொண்டேன். இது கூட்டுப்பொறுப்பாகும். கூட்டாக சேர்ந்தே எந்த முடிவையும் எடுக்க வேண்டும் என நான் கூறியிருந்தேன் என்று அவர் தெரிவித்தார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் வார்த்தைகளில் நகைச் சுவை அதிகரிக்கும். காரியங்களை உரிய நேரத்தில் செய்து முடிக்கத் திட்டமிட்டுச் செயற் படுவீர்கள். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். உறவுகளால் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் நிர் வாகத்தினரின் நம்பிக்கையைப் பெறுவர்.

**இடபம்:** நீங்கள் விரும்பியோ, விரும்பா மலோ சில பொறுப்புகள் ஏற்படும். ஏற்றுக் கொண்ட பொறுப்புகளால் சிரமங்களை எதிர் கொள்ள நேரிடலாம். எதிலும் பொறுமையோடு செயற்படுங்கள். பேச்சுகளால் சில காரியங்களை எளிதாக முடிக்க வாய்ப்பு உண்டு. உறவினர் ஒருவரின் காரியம் பொருட்டு அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**மிதுனம்:** கவனக்குறைவான வார்த் தைகள், கண்மூடித்தனமான செலவுகள், அவ சரப்பட்ட செயல்கள் என்று இருக்கும். யோசித்து பின் செயற்படுங்கள். வீட்டிலும், வெளியிலும் வார்த்தைகளில் மென்மை கலந்து இருக்கட்டும். புதிய வேலை வாய்ப்புக்கான முயற்சி வெற்றி தரும்.

**கடகம்:** தெளிவாகத் திட்டமிட்டபோதும், என்னவோ சற்று தடுமாற்றத்துடனேயே செயற்படுவீர்கள். பல சிந்தனைகளை மனதில் போட்டு குழப்பிக் கொள்ளாமல், மனநிலையை ஒருநிலைப்படுத்தி செயற்படுங்கள். பண வரவுகள் பற்றாக்குறையாக இருந்தபோதும், தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமம் இருக்காது.

**சிங்கம்:** உங்களின் யதார்த்தமான செயற் பாடுகளால் பிறரால் பாராட்டப்படுவீர்கள். மனநிலையில் ஏற்படும் மாற்றம், சில பணிகளை விரைவாகச் செய்து முடிக்க உதவும். பணத் துக்காக அலைச்சல் இருக்கும். நண்பர் ஒருவரின் உதவி மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** அடுத்தடுத்து பணிகள் இருந்த போதும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நண்பர் ஒருவரின் காரியத்திற்காக அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். குடும்பம் சம் பந்தப்பட்ட பணிகளை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**நாளை**

ஆவணி- 10 ஞாயிற்றுக்கிழமை 26.08.2012
திதி: தசமி பி.இ. 02.53 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.ப. 10.41 வரை
சுபநேரம்: 09.05-10.35 வரை
ராகு காலம்: 04.35- 06.05 வரை

**துலாம்:** எதிலும் இரட்டை சிந்தனையோடு செயற்படுவீர்கள். நண்பர் ஒருவரின் உதவிக ளுக்காக காத்திருக்க வேண்டியிருக்கும். உடல் நிலையில், சிறு சிறு அசௌகரியங்கள் ஏற்பட்ட போதும், இன்றைய பணிகளை மேற்கொள்வதில் சிரமம் இருக்காது. மனநிம்மதியான சூழ்நிலை சந்தோஷத்தை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை உரிய நேரத்துக்கு முன்பாகவே செய்து முடிப்பீர்கள். மேலும், மற்றவர்கள் பாராட்டும் வகையில் அறி வுத் திறனுடன் செயற்படுவீர்கள். அலுவலகப் பணிகளில் பளு குறையும். கொடுக்கல், வாங்கலில் சீரான நிலைமை காணப்படும்.

**தனுசு:** நீண்ட நாள் எண்ணம் பூர்த்தியாகும். பண நிலையில் பற்றாக்குறையை சரி செய்ய, மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்வீர்கள். அறிமுகமற்ற நபர் ஒருவரின் உதவி, மிகுந்த பயன்தரும். முக்கியமான செய்தி உங்களை வந்தடையும், மனைவி உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** காரணமற்ற கோபங்கள் குடி கொள்ளும், வார்த்தைகளில் கூட தடுமாற்றம் நிலவும். எதிலும் சற்று நிதானத்துடனும், பொறு மையுடனும் செயற்படுதல் நல்லது. புதிய நபர்க ளின் சந்திப்பில் எச்சரிக்கை தேவை. நண்பர்கள் மத்தியில், குற்றம் காணும் போக்கைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** எதிர்பார்க்கும் உதவிகள், எதிர் பார்க்காத நபர்களிடமிருந்து கிடைக்கும். பழக்கப்பட்டவர்களால் நன்மையான பலன்கள் ஏற்படும். குடும்ப விடயங்களை, மூன்றாவது நபரிடம் கலந்தாலோசிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பயணங்களில் எச்சரிக்கை அவசியம். அலுவலகப் பணிகளில், கவனம் தேவை.

**மீனம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சந்திக்க நினைத்த நபர் ஒருவர், எதிர்பாராத விதமாக உங்களை வந்து சந்திப்பார். பணம் வரும். செலவுகள் கூடுதலாக இருக்கும். அலுவலகப் பணிகளில், முன் யோசனையுடன் செயற் படுங்கள். உறவினர்கள் வழியிலும், உதவிகள் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 5 | 2 | | | | 3 |
| 9 | 2 | 6 | | | | | | |
| 5 | | | | | 1 | 2 | | |
| | | 8 | 3 | 4 | 5 | 7 | | |
| | 6 | 4 | 9 | | 8 | 5 | 3 | |
| | | 5 | 1 | 6 | 2 | 8 | | |
| | | 2 | 7 | | | | | 5 |
| | | | | | | 9 | 4 | 2 |
| 4 | | | | 1 | 6 | | 8 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 5 | 7 | 9 | 6 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 2 | 6 | 3 | 8 | 1 | 5 |
| 3 | 5 | 6 | 8 | 1 | 4 | 7 | 2 | 9 |
| 4 | 7 | 2 | 1 | 5 | 8 | 3 | 9 | 6 |
| 5 | 6 | 3 | 7 | 9 | 2 | 4 | 8 | 1 |
| 9 | 8 | 1 | 3 | 4 | 6 | 2 | 5 | 7 |
| 8 | 9 | 7 | 6 | 2 | 5 | 1 | 3 | 4 |
| 6 | 2 | 4 | 9 | 3 | 1 | 5 | 7 | 8 |
| 1 | 3 | 5 | 4 | 8 | 7 | 9 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஓம் நமோ நாராயணா

# ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவும்

# 32 ஆவது பிறந்த ஆண்டும்




செல்வன்

## இரத்தினம் குணசிங்கம் (கண்ணன்)

**திதி:- பூர்வபக்க தசமி 26.08.2012**

**ஆண்டு இரண்டு சென்றதையா ஆறவில்லை எங்கள் இதயம்**
**அன்பின் செல்வமே கண்ணா! அணையாதீபமே கண்ணா!**
**எங்கள் இதயம் தனில் நித்தமும் சுடர்விடும் செல்வமே கண்ணா**
**ஓடோடி வந்திடையா கண்ணா எங்கள் உள்ளம் குளிர்ந்திட**
**உன்னை நினைக்கும் போதெல்லாம் கண் உறக்கம் கொள்வதில்லை**
**எங்கள் தெய்வமே கண்ணா!**
**நாங்கள் பரிதவித்து நிற்கிறோமையா**
**என்ன பாவம் செய்தோமென்று**
**தெரியவில்லையையா கண்ணா!**
**கண்ணனே கோயிலென்று கைகூப்பி வணங்குகின்றோம்**
**உள்ளமதில் வந்து போகிறாயோ கண்ணா.**
**நீ வந்து எங்கள் கண்ணீரைத் துடைத்து**
**கவலையைப் போக்கிடையா கண்ணா, கண்ணா, கண்ணா**

குறிப்பு:- இவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அன்னதானத்திலும்
(கிளிநொச்சி சித்தி விநாயகர் ஆலயம் - பழைய பஸ் டிப்போ)
கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(19310)(2-6-7)

**ஆ. இரத்தினம் குடும்பத்தினர் மாயவன் களஞ்சியம், இரத்தினம் ஸ்ரோர்ஸ்.**

**இல.60, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.**
T.P. 0779444569

# கிழக்குத் தேர்தல் தமிழரின் உயிர்நாடி

## தவறுவிட்டால் நாமே அனுபவிப்போம் என்கிறார் கூட்டமைப்பு வேட்பாளர்

எருவில்,ஓக.25

கிழக்கு மாகாணசபைத் தேர்தலானது தமிழ் மக்களின் உயிர்நாடியான. பிரச்சினை. இவற்றில் தமிழினம் தவறு விடுமேயானால் அது தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பான விடயமாக மாறும். அதன் பயனை நாமே அனுபவிக்கவும் நேரிடும் என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் த.மனோகரராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, சேற்றுக்குடாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் தமிழினம் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டது. மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு பகுதிகளிலும் மிகவும் கடுமையான பாதிப்புகளை எமது மக்கள் எதிர்கொண்டனர். இன்று அந்தப் பாதிப்புகளில் துப்பாக்கிகளின் பாதிப்புகள் ஓய்ந்தாலும் அடாவடித்தனங்களும் மக்களின் நில ஆக்கிரமிப்புகளும் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தை ஆட்சிசெய்தவர்கள் எமது மக்களுக்கு என்னைச் செய்துள்ளார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும். இன்று கிழக்கு மாகாணத்தின் பலத்த சவாலாக இருப்பது தமிழ் மக்களின் வாக்களிப்பாகும். எமது இனம் இன்று அரசியல் ரீதியாக சிந்திப்பது மிகவும் குறைந்த நிலையில் இருப்பது கவலை அளிக்கின்றது.

எமது சகோதர இனத்தை நாங்கள் நோக்கவேண்டும். அவர்களது வாக்களிப்பு வீதம் கடந்த காலத்தில் அதிகரித்துச்செல்வதன் காரணமாகவே அவர்களது பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது.

நாங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று எமது உரிமைகளைப் பயன்படுத்தவேண்டும். இந்தத் தடவை நடைபெற இருக்கும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தமிழ் மக்களின் தலைவிதி. இதில் நாங்கள் பிழைவிடுவோமேயானால் எமது சமூகம் ஆபத்தை எதிர்நோக்கும்.

கடந்த காலங்களில் ஜனநாயகத்துக்குத் திரும்பியுள்ளதாகக் கூறிக்கொண்டு இன்னும் அவர்கள் தங்களது அடாவடித்தனங்களை முடிவுக்கு கொண்டுவந்ததாகத் தெரியவில்லை. அவர்களை இந்தத் தடவை எமது மக்கள் தோற்கடிக்கவேண்டும். இந்தத் தடவை எமது மக்கள் வீட்டுக்கு அதிகளவில் வாக்களிப்பார்கள் என்று தெரிந்துகொண்டு அவற்றைக் குழப்புவதற்குப் பல்வேறு அடாவடித்தனங்களை மேற்கொண்டுவருகின்றனர்.


அவற்றின் மூலம் எம்மையும் எமது மக்களையும் குழப்ப நினைக்கின்றனர். இனி ஒருபோதும் அவ்வாறு அவர்களால் செய்யமுடியாது. இன்று மக்கள் தட்டிக்கேட்கும் நிலைக்குச் சென்றுவிட்டனர். மக்களை இனியும் யாராலும் முட்டாளாக்கமுடியாது. அபிவிருத்தியைப் பேசி எமது மக்களை ஏமாற்றமுடியாது. நாங்கள் எமது உரிமையைப் பெற்று அபிவிருத்தியடைய வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத்தடவை கிழக்கு மாகாணசபையைக் கைப்பற்றவேண்டும்-என்றார். (ச-31)



கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களான நஸார் ஹாஜியார், ஏ.எல்.தவம்ஆகியோர் அக்கரைப்பற்றில் வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட வேளையில்...

# 100 அடி பாதாளத்தில் பாய்ந்தது பஸ்

### பயணிகள் 15 பேர் காயம்



கண்டி,ஓக்.25

கண்டி - மாத்தளை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ், மாத்தளை, பலகடுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 100 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளா கியுள்ளது.

இந்த விபத்தில் 15 பேர் காய மடைந்துள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர். இலங்கை போக்குவரத்துச் சபையின் மாத்தளை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் கண்டியிலிருந்து மாத்தளை செல்லும்போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பஸ் சாரதி ஆபத்தான நிலையில் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் மாத்தளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மதுபான விற்பனை: ரூ.65,000 அபராதம்

மட்டக்களப்பு,ஓக.25

மட்டக்களப்பில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட 13 பேருக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் 65,000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கலால் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, ஈரான் குளம், கன்னன்குடா, கிராய் மடு ஆகிய பிரதேசங்களில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மு.காவுக்கு வாக்களித்தால் நியமனக் கடிதங்கள் குப்பையில்

### சிரேஷ்ட அமைச்சர் எச்சரிக்கை

நியமனங்களை வழங்கும்போதும், அபிவிருத்தித் திட்டங்களைச் செய்யும் போதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அனுப்புகின்ற கடிதங்களைக் கசக்கி குப்பைத் தொட்டியிலே போடுவோம். ஆகவே கடிதங்களை குப்பைத் தொட்டியிலே போட வேண்டும் என்றால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்குகளை அளியுங்கள் என்று சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கிண்ணியா, புஹாரியடிச் சந்தியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளை கடந்த புதன் கிழமை திறந்துவைக் கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் வென்றாலும் மரம் வென்றாலும் சரி எங்கள் ஜனாதிபதியை மாற்றமுடியாது. நாடாளுமன்றத்தையும் மாற்ற முடியாது. இது எங்கள் சுதந்திரக் கட்சியின் பக்கம் இருக்கின்றது. இங்குள்ள நகரசபை, பிரதேசசபை சுதந்திரக் கட்சியின் பக்கம் இருக்கின்றன. இன்று சுதந்திரக் கட்சிதான் பலமிக்க கட்சி ஆகும்.

பாடசாலையோ, வீதி அபிவிருத்தியோ, மின்சார வசதியோ மற்றும் ஏனைய அபிவிருத்திகளையோ செய்து கொடுக்க முடியும். ஐக்கிய தேசியக் கட்சியினாலோ அல்லது மரத்தினால் வெல்லுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாலோ ஒன்றும் சாதிக்கமுடியாது. ரவூப் ஹக்கீமுக்கு எல்லா அதிகாரமும் இல்லை. எங்கள் சுதந்திரக் கட்சியிடமே உள்ளது.

பிரதேசம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்றால், பள்ளிவாசல்களைக் கட்ட பணம் வேண்டும் என்றால் வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்குகளை அளியுங்கள். ஏனெனில் அதற்குத்தான் பலம் இருக்கின்றது. எதிர்வரும் 9ஆம் திகதி தேர்தல் வெற்றியைக் கண்டு யானை காட்டுக்குப் போய்விடும். இன்று ரணில் விக்கிரமசிங்கவின் சேவையைக் கண்டு யானை சிறியதாகப் போய்விட்டது. அன்று 40 லட்சமாக இருந்த யானை இன்று 20 லட்சமாகக் குறைந்து விட்டது.-என்றார். (ச)

# சட்டவிரோத மரக்குற்றிகள் பொலிஸாரிடம் சிக்கின



தலவாக்கலை,ஓக.25

தலவாக்கலையில் இருந்து கொழும்புக்கு அனுமதியின்றி கொண்டு செல்லப்பட இருந்த ஒரு தொகை யூக்கலிப்டஸ் மரக்குற்றிகளை தலவாக்கலை போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

சென் கிளாயர் நீர் வீழ்ச்சிக்கு அண்மையில் கைப்பற்றப்பட்ட இந்த யூக்கலிப்டஸ் மரக்குற்றிகளின் பெறுமதி 10 லட்ச ரூபாவாக இருக்க முடியும் என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரக்குற்றிகளையும் இரண்டு சந்தேகநபர்களையும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# முஸ்லிம் அமைச்சர்கள் மௌனம் சாதிப்பது ஏன்?

### தமிழர் பிரதிநிதிகளைப் பார்த்துத் திருந்தட்டும் என்கிறார் திருமலை ஐ.தே.கட்சி வேட்பாளர்



திருகோணமலை,ஓக.25

முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக்கேட்காது - நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பாமல் முஸ்லிம் அரசியல்வாதிகள் மௌனம் சாதிப்பது ஏன்? தமிழ்ப் பகுதிகளில் ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெறும் போது தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புகின்றனர். அவர்களைப் பார்த்து முஸ்லிம் அமைச்சர்கள் பாடம் கற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் பதுர் நஸ்ருல்லா தெரிவித்தார்.

திருகோணமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் சமூகத்திற்காகக் குரல் கொடுப்பதாகக் கூறிக்கொள்ளும் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் நாடாளுமன்ற அமைச்சர்களாகவும், ஆலோசகர்களாகவும் கடமையாற்றி வருகின்றார்கள்.

இவர்கள் இதுவரை காலமும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை தட்டிக்கேட்பதற்கு நாடாளுமன்றத்தில் அக்கறை இல்லாமல் மீண்டும் மீண்டும் முஸ்லிம்களின் தலைவிதியை மாற்ற வேண்டும் எனக் கூறி கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்துப்போட்டியிடுகின்றனர். உண்மையாகவே இவர்கள் முஸ்லிம்களின் நலன் காப்பதற்கு வந்தவர்களா? எனக் கேள்வி கேட்கிறேன். இதற்கு மக்கள்தான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தீர்ப்பை வழங்கவேண்டும்.

நாடாளுமன்றத்தில் அமைச்சு பதவிகளில் உள்ளவர்கள், முஸ்லிம்கள் விடயத்தில் மௌனமாக இருந்தவர்கள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றா விவாதிக்கப்போகின்றார்கள்? சிங்கள ஊடகங்களில் ஒருவிதமான பேட்டியும், தமிழ் ஊடகங்களில் இன்னுமொரு விதமான பேட்டியும் வழங்குபவர்களுக்கா மக்கள் வாக்களிக்க வேண்டும்.?

முதுகெலும்பில்லாத அரசு - அமைச்சர்கள் எனக் கூறும் முஸ்லிம் அமைச்சர், தானும் அரசுடன் சேர்ந்து அமைச்சுப் பதவியில் உள்ளவர்தான் என்பதை நினைக்கவேண்டும். எனவே, அடுத்த மாதம் நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் போது சிறந்த கட்சியை - நேர்மையானவர்களை தெரிவு செய்ய வேண்டும் - என்றார். (ச)

## காணி விற்பனைக்கு

பளைநகரத்திருந்து 1கி.மீ. தொலைவில் (யாழ் நகரத்திற்கு வரும் வீதியில்) ஏ 9 வீதி ஓரமாக உள்ள தென்னங்காணி (40 பரப்பு) விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

(21961)(5-6-7) தொடர்பு: 077 985 6298

## வாகனம் வாடகைக்குண்டு

2000 கிலோ எடையைத்
தாங்கக்கூடிய யூஜின் வாகனம்
(புதியது) வாடகைக்கு

தொடர்பு: 077 978 9182 (22085)(5-6-7)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பற்றிக்ஸ்
பள்ளிக்கூடத்திற்கு அருகில்
இராசேந்திரா வீதியில் 1 பரப்புக்
காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே- 0776146434 (22085)(3.6.7)

## தவறிவிட்டது

மடத்தடி, சாவகச்சேரியைச் சேர்ந்த நடராசா இராசேந்திரம் என்பவருடைய தே.அ.அ (531314379V), சாரதி அனுமதிப்பத்திரம் (B725558) என்பன தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் இந்த 077 704 7194 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (22119)(5-6-7)

## புதிய கணித வகுப்புக்கள்

தரம் 6 முதல் சாதாரண தரம்(O/L) வரையிலான தரங்களுக்கு கணிதபாடம் வீட்டில் வந்து கற்பித்துத் தரப்படும். புள்ளிப் பெறுபேறுகளை உயர்த்திக் கொள்ளவும் (O/L) பரீட்சைக்கான துரித மீட்டலுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

(22118)(5-6-7) தொடர்பு: 077 687 2790

## ஓட்டோ விற்பனைக்கு

Ya-xxxx தொடர் இலக்கம்
உடைய ஓட்டோ
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 693 4120, 077 260 0256 (22116)(5-6-7)

## காணியும் வீடும் விற்பனைக்கு

நயினாதீவு, 4ஆம்
வட்டாரத்தில் $5\frac{3}{4}$ பரப்புடன்
கூடிய காணியும் வீடும்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 754 7507 077 848 2025 (22112)(5-6-7)

## விற்பனைக்கு

அமெரிக்காவிலிருந்து
தருவிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட
நல்ல நிலையிலுள்ள
முதியோருக்கான Electric power
wheel Chair விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 929 3181 (22106)(5-6-7)

## காணி விற்பனைக்கு/வாடகைக்கு

யாழ். கல்வியங்காடு சட்டநாதர் வீதிக்கு அருகில் 2பரப்பு காணி விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 071 252 0503
077 131 6095
075 239 0421
(20852)(5-6-7)

## தவறிவிட்டது

தம்பிராசா திருஞானசெல்வம் என்பவரின் தேசிய அடையாள அட்டை (601781050V), சாரதி அனு மதிப்பத்திரம் அச்சுவேலிக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 959 6809
077 353 6408
(22084)(5-6-7)

## பதவி வெற்றிடம்

ராம் சுப்ப சிற்றி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 0212221252

01. கணினி இயக்குநர் (இருபாலாரும்)
02. கணக்காளர் (பெண்)
03. பொதி செய்வோர் (பெண்)
04. விற்பனையாளர் (பெண்)

காலம்: 25.08.2012 நேரம்: முற்பகல் 10 மணி

தகைமையுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்கவும். (சி/2596)(3.14)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07★ 02 ★ 1947

உதிர்வு
29★ 08★ 1990

### திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு

திதி:-நவமி (25.08.2012)

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து இனிய வாழ்வு தந்த தெய்வமே...
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக
அமைந்த உங்கள் சிரித்த முகம்
காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம்
என்றும்.....
இதயக்கோயிலில் இருத்திப் பூசிப்போம் அம்மா....

103/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். (21494)(2-7-6)

## திருமண சேவை

*89 இல் பிறந்த RC வேதமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற RC வேதமுடைய வேத்துக்கு வரக்கூடிய பட்டதாரி மணமகன் தேவை.

* 83இல் பிறந்த 8இல் செவ்வாய் $20\frac{1}{2}$ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.)

* 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் சூரியனும் செவ்வாயும் சேர்ந்து $25\frac{1}{2}$ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: காமாக்கண்ணன் திருமண சேவை.
இல.325, கோவில் வீதி,நல்லூர்.
தொ.பே.:077 607 0862
(22120)(5-6-7)

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் $2\frac{3}{4}$ பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு. கிணறும்,
நான்கு பக்கமும் மதில்களும்
உண்டு.
தொடர்பு: 077 614 6434 (22084)(5.6.7)

# மரண அறிவித்தல்

### திருமதி சந்திரம்பிள்ளை சரஸ்வதி



சுதுமலை வடக்கு, மதவடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரம்பிள்ளை சரஸ்வதி கடந்த (22.08.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சந்திரம்பிள்ளையின் அன்பு மனைவியும், ராமச்சந்திரன், ராஜேஸ்வரி, ராசநாயகம் (கனடா), ராஜலக்சுமி (பட்டு - ஜேர்மனி), ராஜதுரை (தங்கம் - ஜேர்மனி), இந்திராதேவி (இந்தியா), திலகவதி (ராணி - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வரத்தினம் (ஓய்வூதியர்), பத்மரேக்கா, மேதினிதேவி, சிவயோகநாதன், மதிவதனி, காலஞ்சென்ற சிவதாஷன் (இளைப்பாறிய கிராமசேவகர்), லக்சுமிகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், பத்மசந்திரிகா, நிர்த்தன், சர்மிளா, ரஜீவ், சஜீவ், பிரபாகரன், கிருபாகரன், சுதாகரன், மேனன், சாஷினி, ஜெனா, சிவாஜினி, சிவாகரன், சிவராஜ், நிவேதன், நிசானி, ரஜிந்தா, லிவிந்தா, சர்மிளா, பிரதீப், நீகன், கண்ணன், துஷி, பிரசாந் ஆகியோரின் பேர்த்தியும் பிரவின், பிரகாஸ், திவ்வியா, வினுஷ், ரஜிதரன், றியானா, கரிஸ், கரனி, மதுஷா, யதுஷா, அபாஸ், யுவான், அபிஷன், விகாசினி, ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மதவடி
ஒழுங்கை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர். (22107)(2.7.6)

# மரண அறிவித்தல்

### திருமதி சிவசம்பு கனகம்மா



மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசம்பு கனம்மா நேற்று (24.08.2012) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் -ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திரோதயம், சந்திரகாந்தி, சந்திரவதனா(ஓய்வுபெற்ற ஆசிரியர்), தவநாயகி (ஆசிரியர், யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்), உதயகுமார், சந்திரவடிவு, செல்வக்குமார், நந்தகுமார், சந்திரமதி,ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஷன், காலஞ்சென்ற சிவமணி(கொழும்பு வர்த்தகர்), கனகரத்தினம் (அதிபர்,யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்) சிந்தா, தவீந்திரன், அனுஷா, பரா அனுஷா, இந்திரன், குமுதா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான வியா ழம்மா,இலட்சுமி,செல்லம்மா, விக்கினராஜா மற்றும் சிவகங்கை, கண்மணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரியின் அன்பு மைத்துனியும்,நிருபனா,நிவேதன்,ஷோபிகா, சாமந்தி, விவேக்கா, சரண்ஜா, ஷம்யுக்தா, துவாரகா, வாரணன், விதூஷிகா,அருணன், அஸ்மிகா, அஜித்தன், அபிசனா, அபூர்வனா,ஆதனா, சஜானா, விதூஷன், சுபாங்கி, நிலானி, விஷால், விஹாஸ், காவியா, சச்சின், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
மகன்(சி.உதயகுமார்) (22092)(5-6-7)

# இரண்டாம் ஆண்டு நினைவலை



அமரர்

### வேலுப்பிள்ளை விவேகானந்தன்

(இ.போக்குவரத்துச்சபையின்
இளைப்பாறிய உத்தியோகத்தர்)

தாயின் மடியில 23.02.1945
ஆண்டவன் அடியில் 18.08.2010

ஆண்டு இரண்டு ஆனாலும் அகலாது உம் நினைவு
காலமோடிப் போனாலும் மறைந்திடுமோ உம் அன்பு
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் சிறகடித்துப் பறந்ததுவோ
உம் சிரித்தமுகம் இனி எப்போது காண்போம் அப்பா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அருந்தியர் வளவு,
அல்வாய் மேற்கு, திக்கம்.

தங்கள் பிரிவால் வாடும்
சசி, நிரஞ்சா, முகுந்தன்
மற்றும் உறவினர்கள். (8729)(2.6.7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தேயிலை ஏற்றுமதி தொடர்ந்தும் வீழ்ச்சி

## சபையின் தரவுகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக 25

இலங்கையின் தேயிலை ஏற்றுமதி தொடர்ந்து வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக அரசால் நடத்தப்படும் தேயிலை சபையின் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இலங்கையில் கடந்த ஜூலை மாத தேயிலை உற்பத்தி, 25.17 மில்லியன் கிலோவாக இருந்து 24.11 மில்லியன் கிலோவாக குறைவடைந்துள்ளது. இது 4.2 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் ஏழு மாதங்களிலும் 195.83 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களிலும் 188.16 மில்லியன் கிலோ தேயிலையே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தேயிலை ஏற்றுமதி 3.9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தேயிலைத் தரகர் அனில் குக் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஒழுங்கான மழை கிடைக்காததால், உயர்தர மற்றும் நடுத்தர தேயிலையின் உற்பத்தி குறைவடைந்துள்ளன. இதன் காரணமாக சில தேயிலைத் தொழிற்சாலைகளைத் தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடந்த ஆண்டு 328.37 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்திருந்தது. இதன் மூலம் 1.5 பில்லியன் டொலர் வருமானத்தைப் பெற முடிந்துள்ளது- என்றார்.

இந்த ஆண்டில் 330 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்ய திட்டமிட்டிருந்த போதிலும், பின்னர் அந்த இலக்கு 325 மில்லியன் கிலோவாக குறைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

## கணினி பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக.25

வலி.மேற்கு சங்கானை விதாதா வள நிலையத்தினால் அடிப்படைக் கணினிப் பயிற்சி நெறி நடைபெற இருக்கின்றது.

இதில் பயிற்சியை பெற விரும்புவோர் தங்களது சுய விவரங்களை விஞ்ஞான தொழில் நுட்பவியல் உத்தியோகத்தர், பிரதேச செயலகம் வலி.மேற்கு, சங்கானை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சங்கானை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (3)

## இலவச உள ஆற்றுப்படுத்தல் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஓக.25

துளிர்கள் நிறுவனத்தின் இலவச உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவ சான்றிதழ் கற்கை நெறியின் 10 ஆவது பிரிவு ஆரம்பமாக இருக்கின்றது.

6 மாதங்கள் வரை நடைபெறவுள்ள இந்தக் கற்கை நெறியில் விரிவுரைகள் சனி, ஞாயிறுகளில் நடைபெறும். கல்விப் பொதுத்தராதரம் (சா/த) கற்ற ஆர்வம் உள்ள இருபாலாரும் இந்தக் கற்கை நெறியை மேற்கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் இல. 30, கம்பஸ் லேன், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என துளிர்கள் நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (3)

## சந்நிதி ஆலயத்தில் சொற்பொழிவு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஒன்பதாம் திருவிழாவான இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் 'திருப்பெரு வடிவம்' எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (3-8)

### மனனப் போட்டி

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கோட்டமட்ட ரீதியிலான மனனப்போட்டி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி புதன் கிழமை நடைபெற இருக்கின்றது என யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(3)

## சனசமூக நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை

கொழும்புத்துறை,ஓக.24

மீளக்குடியமர்ந்த கொழும்புத்துறை எழிலூர் கிராமத்திலுள்ள எழிலூர் சன சமூக நிலையத்தை மீள அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் யாழ்.மாநகரசபை சன சமூக நிலைய அமைப்பு அதிகாரிகளின் பங்களிப்புடன் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு எழிலூர் ச.ச.நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

கடந்தகால அசாதாரண சூழலில் சேதமடைந்த சனசமூக நிலைய கட்டடத்தைப் புனரமைக்க குறிப்பிட்ட தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-135)




பளை, ஓக.25

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் முதலாம் திகதி கேணித் தீர்த்தத்துடன் திருவிழா நிறைவு பெறும். (3-9)

* * *

மன்னார் எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி அம்பாள், ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. தொடர்ந்து 14 நாள்கள் நடைபெறும். இந்தத் திருவிழாவில் மாலை 5.30 மணிக்கு விசேட அபிஷேகமும் ஆராதனைகளும் தொடர்ந்து வசந்த மண்டப பூசையும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி உலா வருவார். (3)

## வரணி வைத்தியசாலைக்கு சுற்றுமதில் அமைக்க கோரிக்கை

வரணி, ஓக.25

வரணி அரசினர் பொது வைத்தியசாலைக்கு பாதுகாப்பு கருதி சுற்று மதில் அமைக்கவேண்டும் என நலன்விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட நாளில் போடப்பட்ட கம்பிவேலி தற்சமயம் பழுதடைந்த நிலையிலும் தூண்கள் உடைந்து விழும் நிலையிலும் உள்ளதுடன் வைத்தியசாலை நுழைவாயில் தூண்கள் அடிப்பாகம் பெயர்ந்தநிலையில் எப்போது விழும்? என்ற நிலையிலேயே உள்ளது.

இந்த நிலை இரண்டு நுழைவாயிலும் உள்ளன மேலும் வைத்தியசாலைக்கு உட்புறம் போடப்பட்ட வீதிகள் கற்கள் அள்ளப்பட்ட நிலையில் உள்ளன.

தற்சமயம் உள்ள பழுதடைந்த வேலி மூலம் கால்நடைகள் உட்புகுந்து வைத்தியசாலையை அசுத்தப்படுத்தும் நிலையும் உள்ளது. எனவே போர் ஓய்ந்து சமாதானம் நிலவும் இந்தச் சமயத்திலாவ்து வைத்தியசாலையைச் சுற்றி மதில் அமைத்து வைத்தியசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். (3-122)


# ஆண்டுகள் மூன்று ஆனபின்பும் ஆறவில்லை உம் நினைவு



அமரர்

## சின்னத்தம்பி செல்வராஜா

*(மாயவன் - பாரவூர்தி உரிமையாளர்)*

திதி:- நவமி

எங்கள் குலவிளக்கே!
ஆண்டுகள் மூன்று ஆனாலும்- இன்னும்
நீங்கவில்லையே அப்பா உங்கள் பிரிவுத்துயர்.
உமைப் பிரிந்து இப்பாரில் இன்றும் கூட
நடைப்பிணமாகத் தான் வாழ்கிறோம், நாம்.
எமை விட்டு என்றும் அகலாதப்பா உங்கள் நினைவுகள்.
அன்புக்கு அன்னை போலும்,
அறிவுக்கு நல்லாசான் போலும் இருந்து
எமக்கெல்லாம் நல்வழி காட்டி எம் வாழ்வில் ஒளி ஏற்றினீரே!
நீர்க்குமிழி போன்றது தான் வாழ்க்கை என
எமை நாமே தேற்றிக்கொள்ள முயன்றாலும்,
முடியவில்லை அப்பா, எம்மால் முடியவில்லை.
உங்கள் பண்பான குணமும், அன்பான பேச்சும்
இன்னும் எம் காதுகளில் எதிரொலித்து
எமக்கருகில் நீங்கள் இல்லா நீங்கா குறையை போக்குகின்றதையா!!
எமக்காய், உம்மையே அர்ப்பணித்த உத்தமரே!
எத்தனை எத்தனை ஆண்டுகள் ஆனாலும்,
அத்தனை அத்தனை ஆண்டுகளும் எம்முடன் என்றும் நீர் இருப்பீர்.

மண்ணோடு 06.07.1951 கண்ணோடு 28.08.2009

**குடும்பத்தினர்.**

சங்கானை வீதி, அச்சுவேலி.

(சீ/2902)(2-6-7)

## யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில் அறிவித்தல்

மேற்படி கோயிலின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 26.08.2012 (ஞாயிறு) மாலை 5.00 மணியளவில் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதனை அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

- நிர்வாக சபை செயலாளர்.

(22090) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது தொண்டர் சபை உறுப்பினர் ஆன

**இராமலிங்கம் மகேஸ்வரி** (ராசாத்தி அக்கா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**பெண்கள் தொண்டர் சபை**

துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

(இ/2903) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலிகள்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அபிமானிகளுள் ஒருவரும், யாழ்.பாரதி பதிப்பகத்தின் ஸ்தாபகருமாகிய

**இ.சங்கர்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுறுவதோடு, அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சபை.**

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். (இ/2905) (2-6-7)

## யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்கள்



இந்து அன்னையின் பழைய மாணவர்களோடு அந்நியோன்யமாய் அன்பு பேணி, அன்னையின் வளர்ச்சியில் அக்கறையோடு செயற்பட்ட சமூக ஆர்வலர்

**இ.சங்கர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். (இ/2907) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் மூத்த உறுப்பினரும், செயற்குழு உறுப்பினருமாகிய

**இ.சங்கர்**

அவர்கள் அமரராகிய செய்தியை அறிந்து ஆற்றொணாத் துயரம் அடைகின்றோம். அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினர்.**

வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(22086) (2-6-7)

## யாழ்.இந்துக்கல்லூரி சமூகத்தின் கண்ணீர்க் காணிக்கைகள்



எமது கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு அரும்பணியாற்றிய

**இ.சங்கர்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது குடும்பத்தினரின் ஆறாத் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அதிபர், ஆசிரியர்கள், ஆளணியினர் மற்றும் மாணவர்கள்.**

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். (இ/2906) (2-6-7)

## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கான விஞ்ஞானம், கணித பாடங்களும் (ஆங்கில மொழி மூலம்) ஆங்கில பாடமும் கற்பிக்கப்படும்.

தொடர்பு:- 0776179081

(22093) (2-6-7)

## காணி விற்பனைக்கு

ஒட்டுவெளி, மிருசுவில் ஏ-9 வீதியிலிருந்து ¼ கிலோ மீற்றர் தூரத்தில் 25 பரப்புக் காணி (பிராமணன் வளவு) விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

0779481100, 0774087674

(21507) (2-6-7)

## வாகனம் விற்பனைக்குண்டு

பருத்தித்துறையிலிருந்து வவுனியா சேவையில் ஈடுபட்டுவரும் ND 4959 இலக்கமுடைய லேலண்ட் வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0774680195

(21811) (2-6-7)

## துயர்பகிர்கின்றோம்



எமது மன்றத்தின் மூத்த அங்கத்தவரும், யாழ்ப்பாண அச்சுப்பதிப்புத் துறையின் முன்னோடியும், சமூகப் பற்றாளருமான

**இ.சங்கர்**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம், யாழ்ப்பாணம்.

(இ/2905) (2-6-7)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் சொர்ணம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், 2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சொர்ணம் (23.08.2012) வியாழக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2012) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி முனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மனோகரன் குடும்பம்.(சோபா)

வரத்துப்பளை, கற்கோவளம், பருத்தித்துறை.

(22091)(2.7.6)

## கண்ணீர் அஞ்சலி



எமக்கு உற்ற துணையாய் விளங்கிய மூத்த பத்திரிகையாளரும் முன்னாள் பாரதி பதிப்பக உரிமையாளருமாகிய

**இ.சங்கர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். **சிவராம் பதிப்பகம்**

(இ/2904) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் கலாநிதி செ. அறிவழகன் அவர்களின் அன்புத் தந்தையார் திரு.இ.செங்காரப்பிள்ளை(சங்கர்) அவர்கள் 23.08.2012 (வியாழக்கிழமை)அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள், கணித புள்ளிவிவரவியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(22121)(5.5.7)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. French மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்குச் செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo. com

(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(22081) (2-6-7)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்

12★ 09★ 1965

ஆண்டவன் அரவணைப்பில்

28★ 08★ 2009

**அமரர் சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன்**

(மாலை வரோதயான்)

(பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கொழும்பு)

திதி: 25.08.2012

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்தாமாண்டு
ஆவணி உத்தராடத்தின் துதியையிலுதித்த பேறே!
பாரினில் வாழ்வமைத்துப் பற்பலவோடம்தாங்கி
பலரையுங் கவரும் பாங்கில் பக்குவமாக வாழ்ந்து
தேசத்தின் சரித்திரத்தில் செய்வன செய்த பின்னர்
சேர்ந்ததேன் நாற்பத்திநாலின் ஆவணி நவமியில் அனுசம் தன்னை
அன்புக்கும் இலக்கணமாய் அமைந்த அப்பாவே!
ஆண்டுகள் மூன்று கழிந்தனவோ! நீங்கள் பாடிய கவிதை யாவும்;
உங்களை இந்த மண்ணில் என்றும், உயிர்ப்புடன் வாழவைக்கும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"குமார் இல்லம்", உடுவில் தெற்கு, சுன்னாகம்.

அன்புடன் நினைவுகூரும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள்.

(22117) (2-7-6)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயரத்தினம் பாக்கியலஷ்மி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரத்தினம் பாக்கியலஷ்மி கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரகுநாதர் இராசையா (மலாயன் பென்சனியர்) - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், சங்கரத்தை, வட்டுக்கோட்டையை வதிவிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும், அகல்யா - சுதாகரன், ரகுராகவன், விக்கினராஜா, விமலன், கீதாஞ்சலி - சோமாஸ்கந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி - ஆறுமுகம், தனலஷ்சுமி - நடராசா, இராஜலஷ்சுமி - பொன்னையா மற்றும் சகுந்தலாதேவி - தவராசா, காலஞ்சென்றவர்களான சோமாஸ்கந்தன், ரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று பொறளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

"விக்கின கோட்டம்", மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

சகுந்தலாதேவி தவராஜா (சகோதரி)

(22124)(2.7.6)

## கண்ணீர் அஞ்சலி



**இ.சங்கர்** (செங்காரபிள்ளை)

(உரிமையாளர், பாரதி பதிப்பகம்)
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தீபம் பிறிண்டேர்ஸ்**
(22130) (2-6-7) இல.717, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடங்கள்

சைவச் சிறுவர் இல்லத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உப விடுதிக் காப்பாளர்**

தகைமைகள்:-

* ✱ க.பொ.த.சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
* ✱ வயதெல்லை 30 - 60
* ✱ விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
* ✱ விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
* ✱ ஊதியத் திட்டம்: 7700 - 6× 225 + 10×255 - 11600/=

**02. சமையல்லாள்:- பெண்**

* ✱ சைவச் சிறுவர் இல்லத்துக்கு அனுபவம் வாய்ந்த பெண் சமையலாள் தேவை.
* ✱ இல்லத்தில் தங்கியிருப்பது கட்டாயம்
* ✱ வயதெல்லை 35 - 55
* ✱ ஊதியம் பேசி நிர்ணயிக்கப்படும்

**அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள்:- 03.09.2012**

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
தி.செல்வமனோகரன், கலாசாலை வீதி, திருநெல்வேலி,
செயலாளர். (வி/2909) (2-6-7) யாழ்ப்பாணம்.

## உதைபந்து இறுதியாட்டம்

வடமராட்சி, ஓக.25

அல்வாய் கிழக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் எஸ். செல்வதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர், 521ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் டிக்கிரி திசநாயக்கா, வடமராட்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜசிந்த வரமதே, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் எம். கேதாபரணம், செயலாளர் லி.வரதராஜன், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.சங்கார ஆகியோர் கலந்து கொள்வார்கள். (16-8)

## இரத்ததான நிகழ்வு

வடமராட்சி, ஓக.25

அல்வாய் கிழக்கு மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியை ஒட்டி விசேடமாக நடத்தப்பட்ட இரத்ததான நிகழ்வில் 26 பேர் இரத்ததானம் செய்தனர்.

மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத்தலைவர் எஸ். செல்வதீபன் தலைமையில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இதில் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை இரத்தவங்கி வைத்திய நிபுணரால் இரத்ததானம் பெற்றுக்கொள்ளப் பட்டது.

இந்த நிகழ்வில் மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்கள் மற்றும் குருதிக் கொடையாளிகளுமாக 26பேர் இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

(16-8)

**காணி விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை சங்கரத்தையில் 7 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. மேற்படி காணி மாவடி முருகன் கோயில் அருகில் செல்லும் ஒழுங்கையில் உள்ளது. விற்பனை விலை 14 இலட்சம்
தொடர்பு K. சாந்தகுமார் 0772247609 (வி/2624)(2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமதுசகநண்பரும்,கணித,புள்ளி விபரவியற்துறை யாழ்.பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அறிவழகனின் அன்புத் தந்தை **இ.செங்காரபிள்ளை** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு மனமார்ந்த அனுதாபங்களை யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவிக்கின்றது.

யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம்.
**யாழ்.பல்கலைக் கழகம்.** (22094) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது தந்தையின் நூல்களையெல்லாம் அச்சிட்டு வெளியீடு செய்தது மட்டுமன்றி, நெருங்கிய நண்பராகவும் இருந்து அவரது துறைசார்ந்த வளர்ச்சிக்கு உதவிய **சங்கர் மாமாவுக்கு** எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அமரர் காரை.செ.சுந்தரம்பிள்ளை குடும்பம்.**
மனைவி, பிள்ளைகள் (கொழும்பு, லண்டன்) (22088) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரான விஞ்ஞான பீட கணித புள்ளிவிவரவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி செ.அறிவழகன் அவர்களின் அன்புத் தந்தை

**இ.சங்கர் (செங்காரபிள்ளை)**

அவர்கள் 23.08.2012 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம். (22131) (2-6-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
03 ★ 02 ★ 1934

மறைவு
26 ★ 07 ★ 2012

அமரர்
**சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை**

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து இனிய வாழ்வு தந்த
தெய்வமே.........
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த
உங்கள் சிரித்த முகம் காண்பதற்கு
ஏங்கித் தவிக்கின்றோம் என்றும்......
இதயக் கோயிலில் இருத்திப் பூசிப்போம் அம்மா.....

இன்று (25.08.2012) சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடை பெறவுள்ளன.

அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அம்பன்,
வடமராட்சி கிழக்கு. (சி/2912)(5-6-7) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி அஞ்சலா செபஸ்ரியன் தம்பிராஜா



இல.14,டேவிற் றோட், யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி அஞ்சலா ஜெனிவி தங்கராஜினி செபஸ்ரியன் தம்பிராஜா 21.08.2012 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியன் தம்பிராஜா(ஓய்வுபெற்ற மின்சார சபை அலுவலர், வல்வெட்டித்துறை, முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ். S.P.C-O.B:A) அருமை மனைவியும், காலஞ்சென்ற பற்றீசியா-செபஸ்ரியனின் தாயாரும், காலஞ்சென்றவர்களான A.P.எதிர்மன்னசிங்கி (Retired Chief Clerk, P.W.D), குளோரியா எதிர்மன சிங்கியின் மூத்த மகளும், R.தம்பிராஜா(Retired Excise Inspector,வல்வெட்டித்துறை), றோஸ் மரியரெட்ணம் தம்பிராஜாவின் அருமை மருமகளும், U.K. யில் வசிக்கும் மேர்வின் எதிர்மன சிங்கி,ஞானேந்திரா,ஜோசப் சுவின்ரா, இராஜேஸ்வரன், திருமதி கார்மலிற்றா,தேவநாயகம்,திருமதி K.அன்ரோநெற்,ஜெயம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,திருமதி M.திரேசா, திருமதி G.மேர்சி, திருமதி J.ஜெனற், திருமதி R.டெலோரிஸ், தேவநாயகம், மைக்கல் குமார்,கிருஷ்ணசிங்கம்,திருமதி J.வசந்தி, திருமிகு அன்ரன் தம்பிராஜா(Rtd.Teacher,St. Henry's College, Illavalai) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.08.2012) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் புனித மரியன்னை பேரா லயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னார் சமாதான ஒளியில் ஒளிர்வாராக. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14,டேவிற் றோட்,
யாழ்ப்பாணம். (22074)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## தேர்தல் வன்முறை இடம்பெறும் அபாயம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தேர்தல் வன் முறைச் சம்பவங்கள் இடம் பெறக் கூடிய அபாயம் காணப்படுவதாக சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த மாவட்டங்களில் தேர்தல் சூழ்நிலை வன்முறை சார்ந்த நிலைமையை பிரதிபலிப்பதாக மனித உரிமைகள் தொடர்பான புத்திஜீவிகள் அமைப்பின் தேர்தல் கண்காணிப்புப் பிரிவு தெரிவித் துள்ளது.

அரசகாணிகளில் தேர்தல் அலுவலகங்களை அமைத்தல், அரச சொத்துக்களை தேர்தலுக்காகப் பயன்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் சட்ட மீறல்கள் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரையில் 161 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் வன்முறைகள் மற்றும் சட்ட மீறல்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ச)

## கண்ணீர் அஞ்சலி



ஈழத்துப் பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவம் வாய்ந்தவரும், உதயன் பத்திரிகைக் குழுமத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்தவரும், மூத்த ஊடகவியலாளருமான **இ-சங்கர்** அவர்களது மறைவுபேரிழப்பாகும்.

அன்னாரின்ஆன்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**உதயன் நிர்வாக இயக்குநரும், பணியாளர்களும்.**

(சி/2920)(2.6.7)

## தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) கொடிகாமம்

எமது சங்கத்தில் பயன்படுத்தப்பட்ட மில் உபகரணங்களும் (மோட்டர்கள் உட்பட), மின்பிறப்பாக்கியும் மற்றும் பழைய எரிபொருள் தாங்கியும் விற்பனை செய்யப்படவுள்ளது.

இதனை கொள்வனவு செய்ய விரும்புவோர் கேள்விப் பத்திரத்தினை சங்கத் தலைமைப் பணிமனையில் பெற்று தங்களது மூடிய கேள்வித் தொகையினை 'பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை வீதி,கொடிகாமம் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ 10.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறச் செய்யவும்.

மேற்படி பொருள்களை சங்க காரியாலய நேரத்தில் காரியாலயத்தில் பார்வை யிட முடியும்.

**பொதுமுகாமையாளர்,**

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ-து) கொடிகாமம்.

(சி/2915)(5.6.7)

## விவசாயக் கடன்

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்புக்குட்பட்ட காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான விவசாயக் கடன், இலங்கை வங்கியினால் வழங்கப்படவுள்ளது.

எனவே இந்தக் கடனுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பப் படிவங்களை கமக்கார அமைப்பின் செயலாளரின் அலுவலகத்தில் இன்று பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(16-9)

## முதலாம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
15.05.1953

உதிர்வு
23.07.2012

அமரர்

### கந்தையா சிவராசா

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து கடந்த 23.07.2012 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள்,உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலமாக இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (25.08.2012) சனிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(22139)(5-6-10)

குடும்பத்தினர்.

## துயருடன்...



பாரதி பதிப்பக உரிமையாளர்

அமரர்

### இந்திரராசா செங்காரப்பிள்ளை (சங்கர்)

மலர்வு
21.10.1937

உதிர்வு
23.08.2012

கலங்கரை விளக்கொன்று
கானல் நீராய்க் கரைந்த
மாயமென்ன....

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**உரிமையாளரும் ஊழியர்களும்.**

**கரிகணன் பிறிண்டேர்ஸ்**

இல. 424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2918) (2-6-7)

# 90 வீதமான மக்கள் சொந்த இடங்களில்

துணுக்காய்,ஓக.25

நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த 90 வீதமான மக்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டதையடுத்து தற்பொழுது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்த மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய மாவட்டங்களிலுள்ள நண்பர், உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களில் 14 கிராம சேவகர் பிரிவுகளில் வசித்து வந்த 727 குடும்பங்களைச் சேர்ந்த 2250 உறுப்பினர்கள் கடந்த இரு தினங்களில் மட்டும் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அனைத்து வீடுகளும் அழிந்த நிலையில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தங்கள் காணிகளைத் துப்புரவு செய்து வாழ்விடங்களை அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள 19 கிராம சேவகர் பிரிவுகளில் வசித்து வந்த மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலும் நண்பர் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் நலன்புரி முகாம்களிலுள்ள 90 வீதமான மக்கள் படிப்படியாக சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இதையடுத்து தற்பொழுது நண்பர், உறவினர் வீடுகளில் தங்கியிருப்பவர்களைக் குடியமர்த்தும் பணியில் அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த இரு தினங்களில் மட்டும் 14 கிராம சேவகர் பிரிவுகளில் வசித்து வந்த 727 குடும்பங்களைச் சேர்ந்த 2250 உறுப்பினர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

(எ-115)

## பஸ் உரிமையாளர்களுக்கு பங்குலாபம் பகிர்ந்தளிப்பு

வவுனியா,ஓக. 25

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தால் இந்த வருடபங்குலாபமாக 30லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது.

இந்த பங்கு லாபம் பஸ் உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது என்று வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் கம்பனியின் தலைவர் எஸ்.ரி இராஜேஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சங்கத்தில் பதிவு செய்து அனைத்து மாவட்டங்களுக்குமான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் மூலம் 30லட்சம் ரூபா பங்குலாபமாகப் பெறப்பட்டுள்ளது.

இந்தப் பணம் நாளை வவுனியா நகரில் நடைபெறும் 14ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் வைத்து சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது என்றார்.

இந்தக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதால் அனைத்து பஸ் உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார்.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா நகர சபைத் தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ-400)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் தேவஸ்தானம் வருடாந்த மகோற்சவம் - 2012

ஒன்பதாம் திருவிழா



சஞ்சலம் தீர்க்கும் சந்நிதியானே!
சஞ்சலம் தீர்க்கும் சங்கரன் பாலா
சண்முக சீலா சக்தி வடிவேலா
சரவண பவனே சந்நிதி பாதா
சந்தான வாழ்வருள் சர்வலோக நாயகா
சர்வமெங்கும் சாந்தி சமாதானம் நிலவ வா!
தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

(சி/2427)(2-6-7)

எட்டாம் திருவிழா
விளம்பர அனுசரணை:

ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்
தொட்டில் கந்தசாமி கோயிலடி, கெருடாவில்.
தொ.பே. 021 3212692

FRENCH LANGUAGE CENTER

FRENCHCLASSES-பிரஞ்சு வகுப்புகள் (Easy way to Learn French)

நெல்லியடியிலும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலும்....
france,canadaக்கு திருமணம்முடிந்து செல்லவுள்ளோர்க்கும் மொழி அறிவை விருத்தி செய்யவுள்ளவர்களிற்குமான french மொழி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

வகுப்புகள் யாவும் Franceல் ஆசிரியப் பயிற்சி பெற்றவரும், பல்கலைக் கழக பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரால் மேற்கொள்ளப்படுகிறது.

அனுமதிக்கான பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

83, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.(சோ உணவகம் அருகில்)

நெல்லியடியில்.........
M.M.V வீதி,
காளி கோவிலடி, நெல்லியடி.

தொடர்பு:-0779789456

வெகுவிரைவில் Deutsch வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
25
06
1957



மறைவு
26
07
2012.

அமரர் நவரட்ணம் சுகுமார் (சுக்கு)

அன்பின் பிறப்பிடமே அமைதியின் திருவுருவே!
பண்பின் இருப்பிடமே பாசத்தின் ஒளிவிளக்கே
நல்லூரான் உற்சவத்தில் நற்பேறு அடைந்தீரே
என்றும் நாம் மறவோம் உம் நினைவில் வாழ்ந்திருப்போம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இன்று (25.08.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

56, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி. (22144)(3.14)

குடும்பத்தினர்.

## ஸ்ரீமுத்துமாரியம்மன்திருவிழா ஆரம்பம்

வவுனியா-பாரதிபுரம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பெருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

தேர்த்திருவிழாவில் பறவைக் காவடி, செடில்காவடி, பாற்குடம் என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-400)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை வருடாந்த மகோற்சவம் - 2012

எட்டாம் திருவிழா



அன்னையின் பாதம் பணிந்து
அருள் பெறுவோம்

(சி/2427)(2-6-7)

விளம்பர அனுசரணை:



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
மற்றும் ஆனந்தி சிற்பாலயம்
கே.கே.எஸ்.வீதி, துர்க்காபுரம், தெல்லிப்பழை.

NALIN INFORMATION TECHNOLOGIES(PVT)ltd

கணனி திருத்தம்

நளின் கணனி நிறுவனத்தின் தனியான சேவை நிலையத்தில் சிறந்த முறையில் அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்டு உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்

Computer, Laptop, Printer, Scanner, UPS, Projector, Mother board, Power supply

- உங்கள் இருப்பிடங்களுக்கு விஜயம் செய்து திருத்தித் தரப்படும்
- ஆகக் குறைந்த கட்டணம் 200/= முதல்
- 5 நிமிடம் முதல் 5 மணிநேரத்துக்குள் முற்றுமுழுதான திருத்தம்
- அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் திருத்திக் கொடுக்கப்படும்

சேவை நேரம் 8.30 - 5.30 வரை

Call: 021 222 1166, 0777 667974
No.195/4, Palaly Road,Parameswara Junction, Jaffna.

இதய அஞ்சலி



இலங்கை தமிழரசுக் கட்சியில் இணைந்து தமிழரசு வாலிப முன்னணியின் ஆரம்பகால செயலாளராகச் செயற்பட்டவரும் தமிழரசுக் கட்சிப் பத்திரிகையான சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராகத் தந்தை செல்வாவினால் நியமிக்கப்பட்டு செயல்பட்டவருமான

இ.சங்கர்

அவர்களின் மறைவு குறித்து எமது இதய அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அண்மைக்காலங்களிலும் கட்சியின் வளர்ச்சிக்காக அளித்துவந்த ஆதரவை நன்றியோடு நினைந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

30, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம். (22154)(9.14)

இலங்கைத் தமிழரசுக்கட்சி.

## தெற்கு பயிற்சியாளர்கள் பயிற்சிக்காக வருகை

அக்கராயன்,ஓக.25

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவை பயிற்சியாளர்கள் பயிற்சிக்காக வருகைதந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு 50 பயிற்சியாளர்களும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு 36 பயிற்சியாளர்களும் வருகை தந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய 5 பிரதேச செயலகங்களில் 10 பேர் என்ற அடிப்படையிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப் பிரதேச செயலகத்தில் 11 பேரும், கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் 12 பேரும், பூநகரி பிரதேச செயலகத்தில் 6 பேரும், கரைச்சிப் பிரதேச செயலகத்தில் 7 பேரும் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

(எ-18)

## சிவன் கோயில் வீதி குடியிருப்பு இருளில்



மல்லாவி அணிஞ்சியன் குளம் சிவன் கோயில் வீதிக்கான குடியிருப்பு பகுதிகளுக்கு மின்சாரம் வழங்காமையால் இரவில் கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இல மு/31 அணிஞ்சியன் குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சிவன் கோயில் வீதியில் சுமார் 15 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அணிஞ்சியன் குளம் 2 ஆம் பகுதிக்கான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதும் இன்று வரையும் சிவன் கோயில் வீதிக்கான மின்சாரம் வழங்காமையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் தனியார் கல்வி நிலையங்களில் மாலை கல்வியை முடித்துக்கொண்டு, இருளில் வீடுகளுக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இரவில் கைக்குப்பி விளக்குடன் மாணவர்கள் கல்வியைக் கற்று வருகின்றனர்.

இந்தப் பகுதியில் சிவன் ஆலயத்தின் முன் வீதியில் சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ளவர்களுக்கு மின்சாரம் கிடைப்பதற்காக பெரும் பணச் செலவுகள் செய்தும் வீடுகளுக்கு மின் உபகரணங்களைப் பொருத்தியும் 3½ வருடங்களாக மின்சாரம் கிடைக்கவில்லை.

மின்சாரம் கிடைக்கும் என்று காத்திருக்கும் மக்களுக்கு மின்சாரம் விரைவாகக் கிடைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என கேட்கின்றனர். (எ-415)

# உதயதாரகை வெற்றிக்கிண்ண ஆட்டங்களின் முடிவுகள் சில

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடனும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு -

புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் சென். அன்ரனிஸ் அணியைத் தோற்கடித்தது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

போட்டி நேர முடிவில் இரு அணியினரும் தலா இரண்டு கோல்களை பெற்றிருந்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி அபாரமாக ஆடி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)



வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால், விளையாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட பயிற்றுநர்கள், மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள் என்போருக்காக வழங்கப்பட்ட காலணிகள், அலுவலக பைகள் போன்றன வவுனியா மாவட்ட அரச அதிபர் ஹரிச்சந்திர தலைமையில் கடந்த வியாழக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது கையளிக்கப்பட்டன. (ங-23)

# ஊரெழு றோயல், பாஷையூர் அன்ரனிஸ் எவரெஸ்ட் உதைபந்து இறுதியில் மோதல்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம், வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றை வீழ்த்தி ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் இறுதியாட்டத்துக்குள் நுழைந்தன.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் ஞானமுருகன் அணியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

வியாழக்கிழமை இடம்பெற்ற மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

இதில் அபாரமாக ஆடிய பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாட தகுதி பெற்றது.

எவரெஸ்ட் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பலம்மிக்க அணிகளாக ஊரெழு றோயலும் பாஷையூர் சென். அன்ரனிஸும் மோதவுள்ளதால் ஆட்டத்தில் அனல்பறக்கும் என்பதே இரசிகர்களின் எதிர்பார்ப்பு. (ங-23)

# ஆசிய வலைப்பந்து ஆரம்பம்

வலி.வடக்கு, ஆக25.

எட்டாவது ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை இன்று மு.ப. 10.35 மணிக்கு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் போட்டியாக மு.ப.11.30 மணிக்கு இலங்கை வலைப்பந்தாட்ட அணிக்கும் ஹொங்கொங் நாட்டு வலைப்பந்தாட்ட அணிக்கும் இடையேயான போட்டி நடைபெறவுள்ளது.

இலங்கை அணிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங்கனை தர்சினி தலைமை தாங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.25

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இன்று சனிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

திக்கம் விளையாட்டுக் கழகம் எதிர் நவஜீவன் விளையாட்டுக்கழகம்

* * *

மன்னார் பெரிய கடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பெறவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு -

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கிளிநொச்சி விளையாட்டுக் கழகம்

சென். விக்ரோறிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சென். ஜோசப் விளையாட்டுக்கழகம்.

கிறீன்பீல் விளையாட்டுக்கழகம் எதிர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

கிளிநொச்சி விளையாட்டுக்கழகம் எதிர் ஏசியன் விளையாட்டுக்கழகம்.(ங-23)

# அனைத்துப் பல்கலைக்கழக மெய்வன்மை பதக்கம் வென்ற யாழ்.பல்கலை வீரர்கள்

110 மீற்றர் தடை தாண்டல் 400 மீற்றர் தடை தாண்டல், ஆகிய போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும், 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டிக் குழுவில் பங்குபற்றி இரண்டாமிடத்தையும் [வெள்ளிப் பதக்கத்தினையும்] யாழ்.பல்கலைக் கழகத்துக்கு இவர் பெற்றுக் கொடுத்துள்ளார்.



கே.ஐங்கரன்



தி.திரோன் கொடுதோர்

மிகச் சிறந்த ஓட்டவீரரான இவர் 400 மீற்றர் ஓட்டப் போட்டி, 4X400 அஞ்சல் ஓட்டப் போட்டிக் குழு ஆகியவற்றில் பங்குபற்றி, இரண்டு நிகழ்வுகளிலும் இரண்டாமிடத்தைப் பெற்று [வெள்ளிப் பதக்கத்தினையும்] 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் மூன்றாமிடத்தையும் [வெண்கலப் பதக்கத்தினையும்] பெற்றுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் சிறந்த களவீரர்களில் ஒருவரான நிஷாந்தன் தட்டெறிதல் போட்டியில் முதலாமிடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினை பல்கலைக் கழகத்துக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார். அத்துடன் குண்டு எறிதல் நிகழ்விலும் இவர் மூன்றாமிடத்தினை [வெண்கலப்பதக்கத்தினையும்] பெற்றுள்ளார்.



வி. நிஷாந்தன்



இ.ஜெயரூபன்

யாழ்.பல்கலைக்கழகத்தின் மெய்வன்மைத் துறையில் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவரான இ.ஜெயரூபன் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் உயரம் பாய்தல் நிகழ்வில் இரண்டாமிடத்தினைப் பெற்று, யாழ். பல்கலையின் வெள்ளிப் பதக்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவியுள்ளார்.

கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகத்தின் அசைக்க முடியாத வீரராக விளங்கும் வி.திவாகர் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டியிலும் தன்மீதான எதிர்பார்ப்பை நிறைவேற்றியுள்ளார். இவர் கோலூன்றிப் பாய்தலில் மூன்றாமிடத்தினை [வெண்கலப் பதக்கத்தினை] பெற்றுள்ளார்.



வி. திவாகர்



வி. கணதீபன்

அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி வேகம் கொண்டு விளையாடிய போதும் இரண்டாம் இடத்தினையே பெறமுடிந்தது. வெள்ளிப் பதக்கத்தைப் பெற்ற யாழ்.பல்கலை அணியின் வெற்றிக்கு, அந்த அணியில் இடம்பெற்ற வி.கணதீபனும் முக்கிய காரணியாக விளங்கினார்.



# கலக்குவாரா மென்டிஸ்

## 'ரி-20' அணியில் இணைப்பு

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெறவுள்ள இந்தத் தொடருக்கான அணியே நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கை அணியில் இடம்பெறுவதற்கு தடுமாறி வரும் சுழற் பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

அணியின் தலைவராக மஹேல ஜெயவர்தனவும், உப தலைவராக அன்ஜலோ மத்தியூஸும் தொடர்ந்தும் நீடிக்கும் அதேவேளை, எதிர்பார்க்கப்பட்ட வீரர்கள் அனைவரும் இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளனர்.

புதுமுக வீரர்களாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் டில்ஷான் முனவீரவும், சுழற்பந்து வீச்சாளரான அகில தனஞ்சயவும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவிற்கெதிராக அண்மையில் இடம்பெற்ற தொடரில் காயமடைந்ததன் காரணமாகப் போட்டியில் பங்குபற்ற முடியாது போன சிரேஷ்ட வீரர்களான குமார் சங்ககார, நுவான் குலசேகர ஆகியோரும் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

(5)

### அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அணி:

மஹேல ஜெயவர்தன, அன்ஜலோ மத்தியூஸ், குமார் சங்ககார, திலகரட்ண டில்ஷான், லஹிரு திரிமன்ன, ஜீவன் மென்டிஸ், டில்ஷான் முனவீர, திஸர பெரேரா, லசித் மலிங்க, நுவான் குலசேகர, ரங்கன ஹேரத், அஜந்த மென்டிஸ், டினேஷ் சந்திமால், ஷமின்ட எரங்க, அகில தனஞ்சய.

## இறுதியில் இந்தியா-ஆஸி

19 வயதிற்குட்பட்டவர்களுக்கான இறுதி ஆட்டத்தில் இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் தகுதி பெற்றுள்ளன. நாளை நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் மோதவுள்ளன. 19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(5)




# இந்தியக் கிரிக்கெட் சபையில் குழப்பம்

இந்தியக் கிரிக்கெட் அணியின் அடுத்த தெரிவுக் குழுத் தலைவராக மொகிந்தர் அமர்நாத் தெரிவு செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழுத் தலைவராக ஸ்ரீகாந்த் இருந்து வருகிறார். இந்தக் குழுவிற்கு சமீபத்தில் முன்னாள் வீரர் மொகிந்தர் அமர்நாத் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். ஸ்ரீகாந்த்தின் பதவிக்காலம் வருகிற செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைகிறது. இதனால் புதிய தலைவராக அமர்நாத் தெரிவாகக் கூடும் என்று கூறப்பட்டது.

இதற்கிடையே அமர்நாத்தை நீக்கிவிட்டு அந்த இடத்திற்கு முன்னாள் வீரர் ரோஜர்பின்னியை கொண்டு வந்து அவரை தெரிவு குழு தலைவராக நியமிப்பதற்காக பி.சி.சி.ஐ. களமிறங்கியுள்ளதாக பகீர் தகவல் வெளியாகி உள்ளது.

இது தொடர்பாக செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற உள்ள பி.சி.சி.ஐ. ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிய இந்திய அணி தொடர்ச்சியாக 8 டெஸ்ட் போட்டியில் படுதோல்வியை சந்தித்தது.

இதனால் அணித்தலைவர் டோனி மீது கடும் விமர்சனம் எழுந்தது. டெஸ்ட் போட்டியில் அவர் அக்கறையில்லாமல் விளையாடுவதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்தச் சமயத்தில் டெஸ்ட் அணித்தலைவர் பதவியில் இருந்து டோனியை நீக்க வேண்டும் என்று அமர்நாத் ஆலோசனை கூறியுள்ளார்.

ஆனால் இதற்கு தெரிவுக் குழுவில் உள்ள ஏனைய உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதன் காரணமாகவே அமர்நாத் நீக்கப்பட உள்ளதாக கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன. (5)




# செல்சி கழகம் வெற்றி


இங்கிலாந்துப் பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் செல்ஷி கழகம் வெற்றிபெற்றுள்ளது. ரெடிங் கழகத்திற்கெதிராக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் செல்ஷி கழகம் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் ஆரம்பத்திலேயே கிடைத்த பெனால்ட்டி உதை வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திய செல்ஷி கழகம் கோலொன்றைப் பெற்றுக் கொண்டது. 18 ஆவது நிமிடத்தில் பெறப்பட்ட இந்தக் கோலை லம்பாட் பெற்றுக் கொடுத்தார். எனினும் சிறிது நேரத்திலேயே பதிலடி வழங்கிய ரெடிங் கழகம், 25 ஆவது நிமிடத்திலும், 29 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பெற்று 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

முதற் பாதியின் மிகுதி நேரத்தில் கோல்கள் எவையும் பெறப்படாது போக முதற் பாதியில் ரெடிங் கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் கோல்கள் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆரம்பத்தில் கோல்கள் கிடைக்கப் பெறாத போதிலும் 69 ஆவது நிமிடத்தில் செல்ஷி அணி தனது 2 ஆவது கோலைப் பெற்று கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தியது.

அதன் பின்னர் போட்டி மேலதிக நேரத்திற்குச் செல்லுமோ என்று கருதப்பட போட்டியின் 81 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்று கோல் எண்ணிக்கையில் 3-2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. அதன்பின்னர் 90 ஆவது நிமிடத்தில் மீண்டும் கோலொன்றைப் பெற்று 4-2 என்ற கணக்கில் அந்த அணி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

(5)




# தரப்படுத்தலில் முன்னேற்றம் தேவை

ஆஸ்திரேலிய அணியின் தரப்படுத்தலில் முன்னேற்றங்கள் தேவை எனவும், தற்போதைய தரப்படுத்தல் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று எனவும் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணத்திற்கு முன்னதாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகின் முதற்தர அணியாக விளங்கிய ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் தரப்படுத்தலில் 3 ஆவது இடத்திலும், ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தரப்படுத்தலில் 4 ஆவது இடத்திலும், 'ரி-20' சர்வதேசத் தரப்படுத்தலில் 9 ஆவது இடத்திலும் காணப்படுகிறது.

பாகிஸ்தான் அணிக்கெதிராக ஆஸ்திரேலிய அணி 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலும், 3 'ரி-20' சர்வதேசப் போட்டியிலும் பங்குபற்றவுள்ள நிலையில் 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றாலும் உடனடியாக தரப்படுத்தல் மாற்றம் ஏற்படாது.

ஆனால் 'ரி-20' தரப்படுத்தலில் 9 ஆவது இடத்திலுள்ள ஆஸ்திரேலிய அணி 3 போட்டியிலும் வெற்றி பெற்றால் சிறப்பான முன்னேற்றத்தை அடைந்து ஆகக்குறைந்தது 4 இடங்களாவது முன்னேறுவதற்கு வாய்ப்புக்களுண்டு. ஆஸ்திரேலிய அணியில் இடம்பெறுவதற்கு அதிக கடுமையான உழைப்பும், அர்ப்பணிப்பும் தேவைப்படுகின்றன எனத் தெரிவித்த மைக்கல் கிளார்க், ஆனால் அணியில் இடம்பெற்ற பின்னர் அதைவிடப் பலமடங்கு உழைப்பும், கடுமையான அர்ப்பணிப்புத் தேவைப்படுவதாகவும், அதையே அனைவரிடமும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு போட்டிக்கு முன்னதாக வீரர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது முக்கியமானதல்ல எனத் தெரிவித்த மைக்கல் கிளார்க், போட்டியின் போது அவர்கள் சிறப்பாகச் செயற்படுவதே முக்கியமானது எனத் தெரிவித்தார். அனைத்து வீரர்களும் நிலையை உணர்ந்து சிறப்பாகச் செயற்படுவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். (5)

## விற்பனைக்கு

Epson புறஜெக்ரர் (Projector), கண்ணாடியிலான இறக்குமதி செய்யப்பட்ட சாப்பாட்டு மேசை (6 கதிரைகளுடன்), மாருதி 800 தனிப்பாவனைக்கார் என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778418344

(22122)(3.6.7)

## கடை வாடகைக்கு

யாழ்.கன்னாதிட்டி வீதியில் இரண்டு மாடியுடன் கூடிய கடை உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0775269182, 0774079078

(21975)(3.6.7)


# வெற்றி பொருத்தமானது

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடரில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெறப் பொருத்தமான அணியாகக் காணப்பட்டதாக இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் தெரிவித்துள்ளார். இந்தத் தொடரில் தங்களை விடச் சிறந்த ஓர் அணியால் தாங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளதாகவும் பிளவர் தெரிவித்தார்.

வெற்றி பெறுவதற்கு இங்கிலாந்து அணிக்கு வாய்ப்புக்கள் காணப்பட்டதாகத் தெரிவித்த அன்டி பிளவர், 3 ஆவது லோர்ட்ஸ் டெஸ்ட் ஆட்டத்தில் 2 முக்கியமான பிடிகளைத் தாங்கள் தவறவிட்டதாகத் தெரிவித்தார். தென்னாபிரிக்க வீரர்கள் ஸ்லிப் திசையில் சிறப்பான களத்தடுப்பில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகின் இரண்டு சிறப்பான பந்துவீச்சு அணிகள் மோதிக் கொள்ளும் தொடரெனக் கருதப்பட்ட இந்தத் தொடரில் இங்கிலாந்து வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அன்டி பிளவர், தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்கள் இங்கிலாந்துப் பந்துவீச்சாளர்களை விடச் சற்று அறிவுக்கூர்மமானவர்களாகக் காணப்பட்டார்கள் எனத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் ஆரம்பங்களைச் சரியாகப் பயன்படுத்திச் சிறப்பாகச் செயற்பட்டார்கள் எனத் தெரிவித்த அன்டி பிளவர், தவறவிடப்பட்ட பிடிகளின் உதவியுடனேயே அவர்கள் பெரிய ஓட்ட எண்ணிக்கைகளைப் பெற்றுக் கொண்டார்கள் என்ற போதிலும், அவர் வெற்றி பெறப் பொருத்தமானவர்கள் எனத் தெரிவித்தார். (5)

## மரண அறிவித்தல்

### இ.சங்கர் (செங்காரபிள்ளை)



(உரிமையாளர், பாரதி பதிப்பகம்)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்த பத்திரிகையாளரும், பாரதி பதிப்பக உரிமையாளருமாகிய இ.சங்கர் நேற்று முன்தினம் (23.08.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இந்திரராசா- செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி தவமணி மற்றும் காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரவேல், ஆனந்தவேல் மற்றும் காலஞ்சென்றவர்களான யாழ்மொழிநாயகி, சிவகாமசுந்தரி, மனோன்மணி, கதிரவேல் ஆகியோரின் மைத்துனரும், கலாநிதி அறிவழகன் (கணித புள்ளி விவரவியல்துறை- யாழ். பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி அறிவுச்செல்வன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தயாநீ, வைத்தியகலாநிதி கலைமகள் (கண்டி போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், ஆரபி, இலக்கியா, அறிவுஆதித்தன், அறிவுஅரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2012) சனிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. அறிவழகன்- (மகன்).

273/1, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(22114)(3.6.14)


Personal-Group classes
(Colombo-Vavuniya-Jaffna)

## Auto CAD

2D-Drawing & 3D-Modeling

By Mr. K. N. Muguntham (D/A) ***** 071-8617972*****
Cert. in 2D-Drawing & 3D-Modeling - Open University [SL]
Cert. in Auto CAD (1st Class) - University of Colombo [SL]
Cert. in Auto CAD (2D&3D Drawing)-(1st Class-Batch Top)
Information Technology Park-Ministry of Rehabilitation[SL]
Diploma in Engineering Drawing & Auto CAD (1st Class)
IIS-International University–Dublin ***மேலதிக விவரம்***

## கணினி மலிவு விற்பனை

HP DUAL CORE Full Set
(LCD Monitor)



அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும்
Free: Web Cam/ 4GB Pendrive
ஒரு வருட உத்தரவாதம் 28,750/=

St.Antony's.com
187, K.K.S. Road Jaffna.
222 4865/ 0750698608
(சத்திர சந்திக்கு அருகில்)
Digital Camara, Computer Repair

(c/2397)(9.14)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 25-08-2012 09.00 - 12.00 | Batch II: 26.08.2012 03.00 - 5.00 | Batch III :27.08.2012 09.00 - 12.00 |
|---|---|---|

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

2 Months

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

(க/2325)

**A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074

## பதவி வெற்றிடம்

01. போட்டோ சொப் டிசைனர் (Photo shop Disignar)
(அல்ப வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
02. போட்டோ கிறபிக், வீடியோ கிறபிக்
03. வீடியோ எடிட்டிங்
04. அலுவலக உதவியாளர்
05. பாதுகாப்பு ஊழியர்
(30 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

மேற்குறிப்பிட்ட துறைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ உரிய ஆவணங்களுடன் 26.08.2012 அன்று 9.00 am - 12.00 pm நேரில் வரவும்

**சிறிநந்தியா டிஜிற்றல் கலர்லாப்,**
108 A, லக்ஸ்ன் பிளாசா கட்டடம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021 222 8412

(சி/2593)(2-6-7)

ஆங்கிலத்தின் அறிவுக் களஞ்சியம் என போற்றப்படும்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

பெருமையுடன் அறிமுகப்படுத்தும்

**Young Learners for English (YLE)**

[வயதெல்லை : 7 - 12]

* British Council உடன் இணைந்து நடாத்தும் கற்கை நெறி
* இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
* Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.

(க/2582)

மாணவர்களின் ஆங்கில அறிவிற்கான சர்வதேச அடித்தளமாக இது கருதப்படுவதால் இன்றே உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

Batch I 27.08.2012

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தேச பக்தி
இல்லாதவனுக்கு
வேறு எதிலும் பக்தி
இருக்க முடியாது.
-பைரன்-

# வார வசந்தம்

01

உதயன் 25 ஓகஸ்ட் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு




# மக்களின் அடையாளத்தை பயன்படுத்தும் சின்னத்திரை

தமது ஆற்றல்களோடும் தமது இயலாமைகளோடும் மோதிக்கொள்ளும் இன்றைய தமிழ் இளையோரின் மறு வடிவங்கள் இவர்கள். ஒரு கட்டத்தில் அவர்கள் தாமாகக் கிளர்ந்து எழுவதைத் தவிர்க்க முடியாததாகவும் போகிறது.

## ஜேர்மன் நாடகம் முதல்முறையாக யாழில் நாளை

தொலைக்காட்சி ஒன்று உள்ளார்ந்த வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றது, எவ்வாறு மக்களுடைய அடையாளங்களைத் திரைப்படங்களும், சின்னத்திரைகளும், புகைப்படங்களும் தவறாகப் பயன்படுத்துகின்றன என்பது விவாதத்துக்குரிய பொருளாக தமிழ்ச் சமூகத்தில் மாறிவிட்ட நிலையில் அது பற்றி அலசும் ஒரு நாடகம் சாலப் பொருத்தமானதுதான்.

ஜேர்மன் நாடக ஆசிரியர் லூட்ஸ்ஹப்னர் எழுதிய 'கிரீப்ஸ்' நாடகம் இதைத்தான் பேசுகிறது. அதிலும் குறிப்பாக இளம் பெண்களிடம் சின்னத்திரைகளும் திரைப்படங்களும் ஏற்படுத்தும் தாக்கத்தை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து மேய்கின்றது.

தமிழ்ச் சமூகத்தை தொலைக் காட்சிக் கலாசாரம் வெகுவாகப் பாதிக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படும் நிலையில் அதன் குறுக்குவெட்டு முகமாகக் காணப்படுகிறது.

இளையோருக்கான இந்த நாடகம் யாழ்ப்பாணத்தில் முதற் முறையாக மேடையேற்றப்படவுள்ளது. இந்த நாடகத்தை ஜியொட்டிக்கா டலல் என்பவர் 2003 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்தார்.

ஈழத்தின் நவீன நாடகத்தின் தாய் என்று வர்ணிக்கப்படுகின்ற கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் இந்த நாடகத்தை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்த்துள்ளார்.

தமிழில் 'சுணைக்கேடு' என்ற பெயரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாளை 10.30 மணிக்கு மேடையேற்றப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தின் அரங்க நிறுவமான செயல்திறன் அரங்க இயக்கம் கொழும்பில் இயங்கி வருகின்ற ஜேர்மன் கலாசார நிறுவனமான 'கோத்தே' நிறுவனத்தின் அனுசரணையுடன் நாடகத்தை மேடையேற்றவுள்ளது.

மூன்றே மூன்று பெண் பாத்திரங்களுக்கு ஊடாக மொத்தக் கதையும் நகர்த்தப்படுகிறது. பெட்ரா, மரேன், லில்லி ஆகிய மூன்று பெண்களும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் அறிவிப்பாளர் இறுதித்தேர்வில் பங்குபற்றுகின்றார்கள். இவர்கள் மூவரும் நவநாகரிக பகட்டாரவாரம் மிக்க இளையோர் பண்பாட்டைக் கொண்டவர்கள்.

அதேவேளை வெவ்வேறு சமூக மட்டங்களில் இருந்தும் வெவ்வேறு இடங்களிலும் இருந்தும் வந்து ஓர் இடத்தில் சந்திக்கின்றார்கள். தங்களுக்கான வேலை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக ஆர்வமிகுதியால் தமது ஆற்றல்களை வெளிக்காட்டப் போட்டிபோடுகிறார்கள். இந்த மூன்று பேரையும் தயாரிப்பாளர் ஒரு பரிசோதனைக்கூட மனிதர்களாகப் பயன்படுத்தி அவர்களை வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கு ஊடாகப் பரிசோதித்துப் பார்க்கிறார்.

தொலைக்காட்சியில் தோன்றிவிட வேண்டும் என்ற ஆர்வத்தால் தமது மனக்கிளர்ச்சிகளை அப்பட்டமாகக் காட்டுவதோடு தமக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டும், ஒருவர் மனதை ஒருவர் துன்பப்படுத்திக்கொண்டும், அழுதும், ஆத்திரப்பட்டும், புலம்பியும் தம் உணர்வுகளுடன் போராடும் இவர்கள் இறுதியில் என்ன செய்கிறார்கள் என்பது சுவாரஸியமானது.

தமது ஆற்றல்களோடும் தமது இயலாமைகளோடும் மோதிக் கொள்ளும் இன்றைய தமிழ் இளையோரின் மறுவடிவங்கள் இவர்கள். ஒரு கட்டத்தில் அவர்கள் தாமாகக் கிளர்ந்து எழுவதைத் தவிர்க்க முடியாததாகவும் போகிறது.

அவர்களின் தொழில் வேணவாவைப் பயன்படுத்திக் கொண்டு அதற்கான வெகுமதியாக, மகிழ்ச்சி. ஆத்திரம், அழுகை, எள்ளல் போன்ற உணர்வுகளின் கணங்கள் அடங்கிய செய்கைகளைப் பதிவு செய்த ஒரு வீடியோ காட்சித் தொகுப்பு மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

தொலைக்காட்சி ஒன்றினுடைய ஆதிக்கம் பெண்களிடம் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்ற யதார்த்தத்தை, உண்மையை இந்த நாடகம் வெளிக்கொண்டு வருகிறது. 'சுணைக்கேடு' என்ற இந்த நாடகத்தை ஈழத்தின் முக்கியமான நாடக நெறியாளர்களில் ஒருவரான தே.தேவானந்த் நெறியாள்கை செய்திருக்கிறார்.

நாடக ரசிகர்களுக்கும், நாடக ஆர்வலர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் புதியதொரு அனுபவத்தை இந்த நாடகம் நவீன தொழில்நுட்ப வசதிகளோடு வழங்க இருக்கிறது என்று செயல் திறன் அரங்க இயக்கத்தினர் கூறுகின்றனர்.




# உங்கள் கைரேகைகளின் பலன்கள்





**புதன் ரேகையும் பலாபலன்களும்**

புதன் ரேகை சந்திரமேட்டிலிருந்து சுண்டுவிரலுக்கடியிலுள்ள மேட்டை நோக்கிச் செல்கிறது. இதையும் சூரிய ரேகையைப் போல் எல்லோருடைய கைகளிலும் காண்பது அரிதாகிலும், இதை வேறு பெயர் கொண்டழைக் கின்றனர். புதன் ரேகை பல எல்லைகளினின்றும் உற்பத்தியாகி,




புதன் மேட்டை நோக்கியிருக்கும். இந்தப் புதன் ரேகை ஜீரண சம்பந் தமான கருவிகளின் நிலைமையை வெளியாக்குகிறது. ஆரோக்கியத்தைப் பற்றி ஆராயும் போது பட்டும்படாம லுமாய் அமைந்திருக்கும் புதன் ரேகையை ஆதரவாக்கிக் கொள்ளலாம். சனி, சூரியன் ஆயுள் ரேகைகளைக் கவனிக்குமிடத்து புதனுடைய ஒத்து ழைப்பு மிக்க அவசியமாகும். தேகாரோக் கியத்துக்கான முதற்காரணம் புதன் வசமுள்ளதாகும். சனி, புதன் கிரக ஆதிக்கம் கெட்டவிடத்து மூர்க்கரா யிருப்பர். தேக இயல்பை அறியமாட்டார். உண்பது அளவுக்கு மிஞ்சி விடுவதால், ஜீரண சக்திக்குப் போதுமான பித்தநீர் உண்டாவதில்லை. உடனே அஜீரணம் தோன்றி பற்பல வியாதிகளாய் மாறி




விடுகின்றன. ஈரலும் ஜீரணக் கருவி களும் சரிவர வேலை செய்துவரின், மூளையும் தங்குதடையின்றி வேலை செய்யும். எனவே புதன் ரேகை ஜீரண சக்தி, ஈரல், தேகாரோக்கியம் முதலான வைகளின் ஏற்றத் தாழ்வைக் குறிப் பதாகும்.

ஒருவர் தேகாரோக்கியம் கெட்டி ருந்தால், அவருடைய ஆதிக்க நிலை யையும், புதன் ரேகையையும் கவ னிக்க வேண்டும். குரு ஆதிக்கர் மித மிஞ்சி உண்பவர். ஆதலால் எப்பொழு துமே அது, ஆபத்தை அதிகப்படுத்தும். அஜீரணம் ஏற்படுங்கால் தலைக் கிறு கிறுப்பு உண்டாகும். புத்தி ரேகைக்குப் புதன் ரேகை ஆதாரமாயிருக்கிறது. மூளை நன்கமைந்திருந்தால் புத்தி வேலை செய்வதற்கு ஜீரண சக்தியும் ஈரலும் செல்வாக்குடையதென்பது விளங்கும். அஜீரணம் அதிகப்படில் இருதய ரேகையின் சீர்கேடும் புலப்படும். இதுவும் புதன் ரேகையின் நிலைமையை அறிய ஆதரவாயுள்ளது.

சோதிடத்திலும் புதனுக்கு மிக்க விசேஷம் சொல்லப்பட்டிருக்கிறது. புதன், வாக்குக்கும் கலைகளுக்கும் அதிபதியென வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் விஞ்ஞானிகளாவதற்கும் புதனே காரணமாயிருந்து வருகிறது. இதனால் புதன் ரேகையும் கையிலிருக்க வேண்டு மென்பதாயிற்று.

புதன் ரேகை சந்திரமேட்டில் உற் பத்தியாகி சுண்டு விரலுக்கடியிலுள்ள மேடு வரைக்கும் செல்ல வேண்டும். பெரும்பாலும் அவ்விதம் அமைவ தில்லை. சனி அல்லது ஆயுள் ரேகையி னின்றும் புதன் ரேகை உற்பத்தியாகிறது.

இன்னும் சிலருக்கு செவ்வாய் மேட்டிலிருந்தும் உற்பத்தியாவதுண்டு. இருதய ரேகைக்கு மேல் உற்பத்தியாகி புதன் மேட்டையும் கடந்து செல்லும். ஆயுள் ரேகையினின்றும் உற்பத்தி யானால், பிரதிகூலத்தைக் குறிக்கும். ஆயுள் ரேகையைத் தொடாமலிருந்தால் வாழ்க்கையில் வெற்றியுண்டு.

புதன் ரேகை நன்கு பதிந்திருப்பதே சிறப்பானது. இது நல்ல ஜீரண சக்தியையும் தேகாரோக்கியத்தையும் குறிக்கும். இன்னும் தேகபலம், களங் கமற்ற மூளை, நல்ல ஞாபக சக்தி முதலானவைகளையும் புலப்படுத்தும்.

1.ஆயுள் ரேகை மெல்லியதாகவோ, குற்றங்குறையுள்ளதாகவோ காணப் படும்போது, செம்மையான புதன் ரேகை பதிந்து தோன்றினால் ஆயுளி லுள்ள குற்றங்கள் நிவர்த்தியாகும். ஆயுள் ரேகைக்குள்ள நல்ல பலனை எல்லாம் புதன் ரேகையே கொடுத்துச் சமன் செய்யும்.

ஜீரண சக்தி கெட்டு ஆகாரத்தில் வெறுப்பு உண்டாகிறது. ஆகாரக் குடல் பின்னப்பட்டபோது ஒருவன் தன்னை நோயாளி எனக் கருதும்படி செய்கிறது. மந்தம் சீர்ப்பட்டுவிட்டால் மூளையும் சீர்ப்பட்டு நல்லறிவு உண்டாகிறது. ஆகையால் புத்தி ரேகைக்கும் இது ஆதாரமாயிருந்து வருவது நன்கு விளங்குகிறது.

(தொடரும்)

# குடும்ப வாழ்க்கை பலவீனமடைகிறதா?

■ களஞ்சியன்

ஆய்வுகளின் அடிப்படையில் மணமுறிவிற்கான காரணங்களை ஆராய் கையில் தம்பதியினரிடையே போதிய அளவுக்கு உரையாடல்கள் இல்லாமல் போதல், வேறு நபர்கள் மீது எழும் சபலம், மன அழுத்தம், உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கப்படுதல், போதைகளுக்கு அடிமை யாதல், அலுவலகத்தில் அதிக நேரம் செல வழித்தல், குடும்ப வாழ்வில் நம்பிக் கையிழத்தல் போன்றவை மிக முக்கிய மான காரணங்களாக கோடிட்டப்படுகின்றன.

கிறிஸ்தவ மதம் திருமண உறவை புனித மான உறவாக மையப்படுத்துகிறது. கத்தோ லிக்க திருச்சபை மணமுறிவைக் கடுமை யாக எதிர்க்கிறது. எனினும் கிறிஸ்தவ நாடான அமெரிக்கா மணமுறிவில் முன்னிலையில் இருப்பது ஆன்மிக சிந்த னைகள் மக்களை நெறிப்படுத்தவில்லை என்பதைத்தான் வெளிப்படுத்துகிறது.

மணமுறிவினால் தம்பதியரை விட அதிகம் பாதிப்புக்குள்ளாவது அவர்களுடைய குழந் தைகள்தான். பெரும்பாலும் தந்தையை விட்டு தாயுடன் வாழ்க்கை நடத்தும் பிள் ளைகள் தங்கள் வாழ்வில் நிஜமான அக்கறை கொண்ட ஒரு வழிகாட்டியை இழந்து விடுகிறார்கள். வாழையடி வாழை யாக இந்த உறவு விரிசல் குழந்தைகள் மனதிலும் பதிந்து விடுகிறது.

உலகளாவிய புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில் இந்தியா குடும்ப உறவில் பலமான நாடாகத் தோன்றினாலும் இன் றைய கலாசார மாற்றங்கள் தொடருமானால் இன்னும் ஓரிரு தலைமுறைகளுக்குப் பின் இந்தப் பட்டியலில் இந்தியா இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

உறவுகள் நிலைக்க வேண்டுமானால் அன்றாடம் நிகழும் சிறு சிறு விஷயங்களில் கவனம் செலுத்தினாலே போதுமானது. குடும்பம் என்பது தம்பதியர் தோழர்களாக வாழ்வது. இதில் ஆணாதிக்க சிந்தனை களோ, ஆண் பெண் பாகுபாடுகளோ எழாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியம். தம்பதி யரிடையே ஆழமான மனம் திறந்த உரை யாடல்கள் நிகழ வேண்டியது அவசியம். நிகழும் கருத்து மோதல்களில் பேசும் வார்த்தைகள் தங்கள் வாழ்க்கைத் துணை யின் மனதில் ஆறாத வடுவாக மாறிவிடக் கூடும் என்னும் கவனத்தோடு உரையாட வேண்டும்.

இருபுறமும் கூரான வாளைக் கையேந்தும் கவனத்துடன் வார்த்தைகளைப் பயன் படுத்த வேண்டும். தம்பதியர் வார்த் தைகளாலோ, செயல்களாலோ தங்கள் அன்பை அவ்வப்போது வெளிப்படுத்துவது உறவு ஆழமாக வழி வகுக்கும். அலுவலக வேலைகளுக்கு பாராட்டு எதிர்பார்க்கும் நாம் குடும்பம் சார்ந்த பணிகளைச் செவ்வனே செய்யும் போதும் ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொள்வதே சரியானதும்கூட.



முடிந்து போன பிரச்சினைகளைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசாமலிருப்பதே பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்த்து விடும். தேவையற்ற மூட்டைகளைத் தூக்கிச் சுமக்கும் கழுதைகளாக மாறாமல், ஆனந்த நிகழ்வுகளை மனதில் சுமந்து பறந்து திரிவதே சிறந்தது.

தேவையற்ற ஆசைகளுக்கு இடம் கொடாமலும், மற்றவர்களோடு தங்களை ஒப்பீடு செய்யாமலும் இருக்கப் பழக வேண் டும். ஆசைகள் என்பவை கடல் அலைகள் போல ஒன்றைத் தொடர்ந்து இன்னொன்று என விடாமல் வந்து கொண்டே இருக்கும். அவற்றில் விழுந்து விடாமல் நம் மனதை நாமே காத்துக் கொள்வது மிக அவசியம்.

ஒருவருக்கொருவர் புரிந்து நடப்பது மிகவும் முக்கியம். தவறு செய்யாமல் இருப்பது மட்டுமல்ல, தவறு செய்தால் அதை ஏற்றுக் கொள்ளும் துணிச்சலையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். அதிகாலை முதல் இரவு தூங்குவது வரை தன் வாழ்க் கைத் துணையின் உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுத்தே நாள்களை செலவிட வேண்டும்.


இருவருமாக சேர்ந்து உணவு உண்பது, தனியே நடப்பது, மற்றவர் சொல்வதை பொறுமையுடன் கேட்பது போன்ற சிறு சிறு செயல்கள் எல்லாம் உறவின் உறுதிக்கு வலுச்சேர்க்கும்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில், உங்களை உங்கள் வாழ்க்கைத் துணை எப்படி நடத்தவேண்டும் என்று விரும் புகிறீர்களோ, அப்படி நீங்கள் அவர்களை நடத்துங்கள். அது எல்லா பிரச்னைக ளையும் தீர்த்து உங்கள் வாழ்வை அர்த்த முள்ளதாக்கும்.

[முற்றும்]



தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க வெள்ளி விழாவில் மாணவிகளின் கலை நிகழ்ச்சியைக் காணலாம். (8)




பள்ளிக் காலம்
பல வர்ண ஜாலம்
பண்புடன் பல கலைகள்
படிப்போமே இங்கு.

படிப்பும் கற்பித்து
பண்பாடும் புகட்டும்
பள்ளிதனை விட்டு
பதினெட்டு வயதுதனில்
புகழ் தனைச்சூடி
பல்கலைக் கழகம்
செல்வோமே...

ர.மதியுகன்
தரம் 8
யாழ்ப்பாணக் கல்லூரி



# பேராசை பெரும் நஷ்டம்

விஜய நகரத்தில் வட்டிக்கு பணம் கொடுக்கும் ஒரு சேட்டு வசித்து வந்தான். அவன் மக்களிடம் அநியாய வட்டி வாங்கினான். ரூபாய்க்கு ஐம்பது சதம் என அவனது வட்டி இருந்தது. இதனால் வட்டிக்கு அவனிடம் பணம் வாங்கும் மக்கள் அவதியுற்றனர். இதையறிந்த தெனாலிராமன் அந்த சேட்டை நயவஞ்சகமாக திருத்த திட்டம் தீட்டினான்.

அந்தச் சேட்டு பாத்திரங்களையும் வாடகைக்கு விடுவதுண்டு. ஒரு நாள் தெனாலிராமன் சேட்டைச் சந்தித்து தன் மகனுக்குக் காதணி விழா நடைபெறுவதாகவும் அதற்குச் சில பாத்திரங்கள் வாடகைக்கு வேண்டுமென்றும் விழா முடிந்ததும் கொண்டு வந்து தருவதாகவும் கூறினான்.

அதன்படியே சேட்டும் பாத்திரங்களை தெனாலிராமனுக்குக் கொடுத்தான். சில நாள் கழித்து தெனாலிராமன் அந்தப் பாத்திரங்களோடு சில சிறிய பாத்திரங்களையும் சேர்த்துக் கொடுத்தான். இதைப் பார்த்த சேட்டு ''நான் பெரிய பாத்திரங்கள் மட்டும் தானே கொடுத்தேன். சிறிய பாத்திரங்களை நான் கொடுக்கவில்லையே......... அவற்றையும் ஏன் கொடுக்கிறாய்'' என்று கேட்டான்.

அதற்குத் தெனாலிராமன் ''உமது பாத்திரங்கள் குட்டி போட்டன. அவற்றையும் உம்மிடம் கொடுப்பதுதானே முறை. ஆகையால்தான் அவற்றையும் சேர்த்து எடுத்து வந்தேன்'' என்றான்.

இவன் சரியான வடிகட்டின முட்டாளாக இருப்பான் போல என்று எண்ணி ''ஆமாம் ஆமாம். இவற்றை நான் உன்னிடம் கொடுக்கும் போது இவை சினையாக இருந்தன. ஆகையால் தான் குட்டி போட்டுள்ளன'' என்று அனைத்துப் பாத்திரங்களையும் பெற்றுக் கொண்டான். சில மாதங்கள் கழித்து தெனாலிராமன் மீண்டும் வந்து தன் வீட்டில் விசேடம் நடைபெற இருப்பதாகவும் அதற்கு மன்னரும் அரசுப் பிரதானிகளும் கலந்து கொள்ள இருப்பதாகவும் அதற்கு தங்கப் பாத்திரங்களும் வெள்ளிப்பாத்திரங்களும் வேண்டும் என்றும் கேட்டான்.

இவனுடைய நாணயத்தை அறிந்த சேட்டு பொன் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களைக் கொடுக்கச் சம்மதித்தான். கொடுக்கும் போது ''இவை கர்ப்பமாக இருக்கின்றன. விரைவில் குட்டிபோடும். இவற்றின் குட்டிகளையும் சேர்த்துக் கொண்டு வா என்றான்''. ''சரி'' என்று ஒப்புக் கொண்டு தங்க வெள்ளிப் பாத்திரங்களைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான் தெனாலிராமன். சில மாதங்கள் ஆயின. பாத்திரங்கள் திரும்ப வருவதாகக் காணோம்.

ஆகையால் சேட்டு நேரே தெனாலிராமன் வீட்டுக்குச் சென்றான். தெனாலிராமனைச் சந்தித்து ''இவ்வளவு நாள்களாகியும் ஏன் பாத்திரங்களைத் திரும்பக் கொண்டு வந்து தரவில்லை'' என மிகக் கோபமாக கேட்டான்.

அதற்கு தெனாலிராமன் ''சொன்னால் நீங்கள் வருத்தப்படுவீர்கள் என்று தான் தங்களைப் பார்க்க வரவில்லை. பாத்திரங்கள் கர்ப்பமாக இருந்தனவல்லவா பிரசவம் கஷ்டமாக இருந்தது. அதனால் அனைத்துப் பாத்திரங்களுமே இறந்து விட்டன'' எனத் தெரிவித்தான்.

இதைக் கேட்ட சேட்டு ''யாரிடம் விளையாடுகிறாய்? பாத்திரங்கள் சாகுமா?'' எனக் மிகக் கோபமாகக் கேட்டான். அதற்குத் தெனாலிராமன் ''பாத்திரங்கள் குட்டி போடும் போது அவை ஏன் இறக்காது?'' என்று கேட்டான். ''என்னுடன் வா மன்னரிடம் முறையிடுவோம் அவரின் தீர்ப்புப்படியே நடந்து கொள்வோம்'' என தெனாலிராமன் கூறினான்.

வேக, வேகமாக அவ்விடத்தை விட்டு அகன்றான் சேட்டு. இருப்பினும் தெனாலிராமன் அவனை விடாது மன்னரிடம் இழுத்துச் சென்று மக்களிடம் அநியாய வட்டி வாங்குவது பற்றி முறையிட்டான்.

எல்லா விவரங்களையும் கேட்டறிந்த மன்னர் ''பாத்திரங்கள் குட்டி போடும் என்றால் அவை பிரசவத்தின் போது ஏன் இறக்கக் கூடாது? உன் பேராசைக்கு இது ஒரு பெரு நஷ்டமே ஆகையால் இனிமேலாவது மக்களிடத்தில் நியாயமான வட்டி வாங்கு'' என புத்திமதி கூறி சேட்டை அனுப்பி வைத்தார். தெனாலிராமனின் புத்திசாலித் தனத்தை மன்னர் மனமாரப் பாராட்டி பரிசுகள் வழங்கினார்.

# நாய்



### உணர்வு மிக்க மிருகம்

நாய் தனது உரிமையாளரின் உடலையோ அல்லது பிறநட்பு நாயின் உடலையோ உராய்ந்து கொண்டிருக்கும். தட்டிக்கொண்டிருப்பதை விரும்பும், தட்டிக்கொடுப்பது, லேசாக அடிப்பது, அணைப்பது, போன்ற செய்கைகளை நாய் விரும்பும். தனது மூக்கினை நமது உடலில் அழுத்துவதையும் கை, கால்களை நக்குவதையும் நாய் பிரியமாகச் செய்யும். கட்டி வளர்க்கும் போது ஒரு வித முரட்டுக்குணம் இதற்கு ஏற்படுகிறது. நாய் ஒரு போதும் தனிமையை விரும்புவதில்லை .

### நாய்மொழி

நாய்கள் ஒன்றுக்கொன்று தமது உள் உணர்வை, எண்ணத்தை வெளிப்படுத்த முகர்ந்து பார்த்தல், முகம் மற்றும் உடல் காட்டும் தோற்ற வேறுபாடுகள். குரைத்தல், சிறுமுனங்கல் என்பவற்றைப் பயன்படுத்துகின்றன. நட்போடு பழக நினைத்தால் முன்காலை வளைத்து வாலை ஆட்டிக் குதித்து விளையாடும். அதேபோன்று கோபப்பட்டால் பிடரி மயிர் சிலிர்க்க பற்களைக் கடுமையாய் வெளிகாட்டி அதிகளவு முறைக்கும். இதிலிருந்து அதனது சுயபாதுகாப்பு உணர்வு அதிகம் என்பதை உணரலாம்.

### நாய்க்கான பயிற்சி

நாயினை அதன் குட்டிப்பருவத்திலிருந்தே பழக்க வேண்டும். 6 வாரத்திலிருந்து பயிற்சி அளிக்கலாம். முதலில் குட்டிக்கு பெயர் சூட்டி அழைக்கலாம். பின்பு கூடாது (NO) நட (Heel) இரு (Sit) நில்[Stay] வா[come] என்று சிறு சிறு ஆணைகளை பிறப்பித்து பயிற்சி அளிக்கலாம். சரியாக செய்யும் போது Good, Good. என கூறி தட்டிக்கொடுக்கலாம் . உடனே செய்யும் என எதிர்பார்க்க முடியாது. பயிற்சியின் முடிவில் தண்டனை வழங்கக்கூடாது. உணவை உண்ணச்செய்யலாம். பந்தை எறிந்து எடுத்துவரச் சொல்லலாம். இவ்வாறு வேறு பயிற்சிகளும் கொடுத்தால் உங்கள் செல்லப்பிராணியும் உங்களுடன் சேர்ந்து விளையாடும் .

# விந்தைச் செய்திகள்

சா. பபிதா
யா/கோ/இராமகிருஸ்ண
மகாவித்தியாலயம்


## திமிங்கிலம்

உலகிலேயே மிகப்பெரிய பாலூட்டி நீலத்திமிங்கிலம். இதன் நிறை சுமார் 150 தொன். ஆனால் அதற்கு பற்களே கிடையாது. அது தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போது பற்கள் இருக்கும். குட்டியாக வெளி வந்ததும் பற்கள் மறைந்துவிடும்.



## சுறா

சுறா மீனுக்கு ஒரு பல் விழுந்தால் விழுந்த இடத்தில் வேறு பல் முளைத்து விடும். இப்படித்தான் அதன் ஆயுள் முழுவதிலும் ஏராளமான பற்கள் முளைத்துக் கொண்டே இருக்கும். இதனால் சுறாவின் முதுமையான காலத்திலும் எதிரிகளை எதிர்த்துப் போராட முடியும்.



## முதலை



முதலைக்கு சுமார் 68 பற்கள் உள்ளன. ஆனால் அந்தப் பற்கள் உணவு அரைக்கப் பயன்படுவதில்லை. இரையைப் பற்றிப்பிடித்துக் கொள்ளவே பயன்படுகின்றன. விழுங்கப்பட்ட இரை அதன் வயிற்றினுள் தான் அரைக்கப்படும்.

# புராதன கட்டடக் கலையை மிளிரவைத்த பிரமிட்டுக்கள்!

எகிப்து என்றதுமே எல்லோருக்கும் ஞாபகத்திற்கு வருவது உலக அதிசயங்களிலொன்றான 'பிரமிட்டுக்கள்' ஆகும். இதைப்பற்றி ஆராய்வதற்கு முன் அந்த நாடு தொடர்பான வரலாறு, பூகோள அமைவிடம் என்பவை பற்றி தெரிந்து கொள்வோம். அந்தக் காலகட்டத்தில் இந்த நாட்டை எகிப்திய அரேபியகுடியரசு என்று அழைத்தனர். எகிப்து நாடானது மேற்கே லிபியாவையும், தெற்கே சூடானையும் வடக்கே மத்திய தரை கடலையும் வடகிழக்கே இஸ்ரேலையும், கிழக்கே செங்கடலையும் எல்லையாக கொண்டுள்ளது. தற்போது இதன் தலைநகரம் கெய்ரோ ஆகும். இது பண்டைய கீழைத்தேய நாட்டுநாகரிகம் தோன்றிய நாடு என்றும் கூறலாம். அதன் நாகரிகத்தின் பிடியில் பண்டைய இஸ்ரேலும், கிரீஸும் நன்கு வளர்ந்தன. அவற்றின் வழியாக இந்தக்கால மேலைநாட்டு நாகரிகம் உருவாயிற்று என்றும் கூறலாம்.

எகிப்தின் நில அமைப்பைப் பார்த்தோமாகில் அதில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மத்தியதரைக்கடலை சென்றடையும் நீண்ட நைல் ஆற்றால் உண்டாக்கப்பட்டது உலகிலுள்ள மிக நீண்ட நதிகளில் ஒன்றான இது மத்திய ஆபிரிக்காவில் தோன்றி மலைகளிடையே வளைந்து சென்று குன்றுகளே இல்லாத பாலை நில சமவெளியில் பாய்ந்து கடலருகில் விசிறிபோல் பல கிளைகளாகப் பிரிந்து சமுத்திரத்தில் சங்கமிக்கின்றது. கடலோரப் பகுதிகளில் பெரும்பாலும் விளைச்சலுக்கு ஒவ்வாத பாலைநிலங்களே காணப்படுகின்றன. நைல்நதி வெள்ளம் ஏற்படும் காலங்களில் கொண்டு வந்து சேர்க்கின்ற வண்டல் நிலமே எகிப்தில் பயிர் விளைச்சலுக்கு ஏற்ற நிலமாகும். இங்கு தூசியுடன் கூடிய புயல் வீசுவதுமுண்டு. மழைகாலம் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும் கோடை வெப்பம் மிகவும் கொடூரமானது. நைல் பள்ளத்தாக்கில்தான் பேரீச்சை மரம், முந்திரிகை காணப்படுகின்றன. ஒட்டகம், கழுதை, எருமை, செம்மறிஆடு, வெள்ளாடு போன்றவை மக்களுடைய வளர்ப்பு மிருகங்களாகும். மக்கள் பேசும் மொழி அரேபிய பாஷை ஆகும். முதலில் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியிருந்தது. ஆனால் 1923 ஆம் ஆண்டிலிருந்து இலவசக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. ஐந்து பெரிய பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்ற அல் அசார் சர்வ கலாசாலையாகும். அரசாங்க கல்வி நிறுவனங்களைத்தவிர தனியார் பல்கலைக்கழகங்களும் கல்வி நடவடிக்கைகளை மிகவும் சிறப்பான முறையில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மக்களின் சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு 10 ஆயிரத்துக்கும் அதிகமான

**அருணா தருமலிங்கம்,**
**வந்தாறு மூலை கிழக்கு,**
**செங்கலடி.**



மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்பட்டு கணிசமான மருத்துவர்கள் சேவைக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

1952இல் நடைபெற்ற இராணுவப்புரட்சி முக்கியமான ஒன்றாகும். இந்த உலகில் தொன்மையான நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகம் மிகவும் முதன்மையானது. ஓவர்டுகார்டர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது தான் காமன் என்ற எகிப்திய மன்னரின் கல்லறை. அது அந்நாட்டின் வரலாற்றுக்கு ஒரு கருவூலமாகத் திகழ்கின்றது. மன்னர் பயன்படுத்திய கத்தி, அழகுசாதனப் பெட்டி, தங்கத்திலான மிதியடிகள், முகமூடி, அரியணை, நாற்காலி, மேசை போன்ற எண்ணற்ற பொருள்கள் அங்கு கிடைக்கப் பெற்றன.

எகிப்தின் வரலாற்றை ஐந்து பிரிவுகளாக வகுக்கலாம். சமுதாயத்தில் சாதி முறை இல்லை. பொருளாதார அடிப்படையில் மக்கள் பல வகுப்புகளாகப் பிரிந்திருந்தனர். அவையாவன, அரச குடும்பத்தினர், சமய குருமார்கள், நடுத்தர வகுப்பினர், பண்ணை அடிமைகள் என்பன ஆகும்.

இனி எகிப்தில் உருவான பிரமிட்டுகளில் தோற்றம் அதன் பரிணாமம், வரலாறு என்பவை பற்றி சிறிது ஆராய்வோம். இம்கோடேப்பு மூன்றாம் மரபைச் சேர்ந்த அரசரான இந்த கோடேப்பு காலத்தில் அரசவைக்கு வேந்தனாகவும், விளங்கிய அதேவேளை எகிப்திய கட்டடக் கலை வளர்ச்சிக்கும் அடிகோலினார். அடுக்கு பிரமிட்டுக்கள் இவரால் நிர்மாணிக்கப்பட்டவையாகும். செங்கற்களைக் கொண்டு அழகாகக் கட்டப்பட்ட கட்டடங்கள் போன்று கருங்கற்களை வைத்து வனப்பு மிக்க பிர்மிட்டுக்களை உருவாக்குவதில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார்.

கிரேக்கர்கள் எகிப்திய பிரமிட்டுக்களை உலகின் ஏழு அதிசயங்களிலொன்றாகக் கருதினார்கள். இதன் உயரம் 146.95 ஐந்து மீற்றராகக் கணிக்கப்பட்டது. அகலம் 230.38 மீற்றராகும். இந்தப் பிரமிட்டுக்கள் சுமார் 54000 சதுர மீற்றர் பரப்பைக் கொண்டதாக உள்ளன.

எகிப்தின் கட்டடக் கலைக்கு பிரமிட்டுகள் மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகவும் கொள்ளலாம். பிரமிட்டுகளைச் சுற்றி வேறு கட்டங்கள் நிர்மாணிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பிரமிட்டுகளின் மருங்கில் சடங்குகள் மேற்கொள்ளும் பிணமனை அரங்குகளும் உருவாகின. மேலும் இந்தப் பிரமிட்டுக்களுக்கு அருகில் பிரபுக்களின் கல்லறைகளும் தென்படுகின்றன. கீசாவில் உள்ள காப்ரீ கட்டடத்திற்கு கீழ்ப்பகுதியிலிருந்து மேற்பகுதிக்குச் செல்ல ஒரு சாய்தளப் பகுதி வாசல் உள்ளது. இதை இசு பிங்சி என்று அழைப்பார்கள். இதன் உச்சியில் சிங்கத்தின் தலை செங்குத்தாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. லியேயின் சிரசு எகிப்திய அரசர் காப்ரி தலை போன்று மாற்றப்பட்டு செதுக்கப்பட்டுள்ளது. இது பார்ப்பவர்களை வியக்க வைக்கின்றது எனலாம். எகிப்தின் பிரமிட்டுக்கள் அனைத்திலும் அரசர்களின் வெற்றுடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. என்பது தொன்று தொட்டு வழங்கி வருகின்ற கூற்றாகும். அதன் பரிமாணம் ரம்மியமான நுழைவாயில் போன்றவை அதனை உலக அதிசயங்களில் ஒன்றாகக் கணிப்பதற்கு உறுதுணை புரிந்துள்ளது என்பது வெள்ளிடமலை.



# கை...

## வியப்பூட்டும் ... ஆப...

**இப்போதெல்லாம் ...**
**கையே இல்லாதவன் ...**

கைபேசிகள் சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் அந்தஸ்தின் அடையாளமாகக் கருதப்பட்டன. கைபேசி வைத்திருப்பவர்கள் அதை மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியும் விதமாக வைத்திருப்பதும். பொது இடங்களில் சத்தமாகப் பேசி மற்றவர்கள் கவனத்தை ஈர்ப்பதுமாக இருந்த காலம் மலையேறிவிட்டது. இப்போதெல்லாம் கைபேசி இல்லாதவனை கையே இல்லாதவன்போல பார்க்கிறது சமூகம். என்னது உன்கிட்டே கைபேசி இல்லையா? என்று ஏதோ சாவான பாவத்தைச் செய்து விட்டது போல நம்ப முடியாத ஆச்சரியக் குரலில் தான் கேட்கிறார்கள் கைபேசி இல்லாதவர்களிடம்.

ஊருக்கு ஒரு தொலைபேசி என்றிருந்த காலம் தாண்டி, வீட்டுக்கு ஒரு தொலைபேசி என்னும் நிலையையும் கடந்து, ஆளுக்கு ஒரு கைபேசி எனும் நிலையில் இருக்கிறது இன்றைய வாழ்வு. அதுவும் அலுவலகவாசிகள் பலருக்கும் ஒன்றுக்கு இரண்டாக கைபேசிகள் இருக்கின்றன. இன்றைக்கு பிரமிப்பூட்டும் வகையில் வளர்ந்துள்ள கைபேசிகளின் வரலாறு பல சுவாரஸ்யங்களை உள்ளடக்கியது.

தொலைபேசி வலையமைப்புடன் இணைக்கப்பட்ட முதல் கைபேசி சுவீடன் நாட்டு பொலிஸாரால் 1946 ஆம் ஆண்டு வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது. பொலிஸார் உபயோகப்படுத்தி வந்த தகவல் தொடர்பு வானொலி இதன் முன்னோடி எனலாம். 1947ஆம் ஆண்டு பெல் சோதனைச் சாலை பொறியியலாளர் டி.எச். ரிங் என்பவரால் இந்த கைபேசிகள் தன்னுடைய நிலையிலிருந்து சற்று முன்னேறின. எனினும் 1960 களில் மின்சாதனத்துறை மேம்படும் வரை இந்த கைபேசிகள் வளர்ச்சியடையவில்லை.

1967 களில் கைபேசி வைத்திருப்பவர்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டபின் அந்த எல்லையை விட்டு வெளியே சென்றால் அழைப்புத் துண்டிக்கப்பட்டு விடும். ஒவ்வொரு அழைப்புக் கோபுரத்தின் எல்லைக்குள்ளேயே அந்தந்த அழைப்பை பேசி முடித்துவிட வேண்டும். அப்போதெல்லாம் அந்த அழைப்பு எல்லையே மிகவும் குறுகியது என்பது வேறு விடயம்.

பெல் ஆய்வுக்கூட பொறியியலாளர் ஆமோஸ் எட்வர்ட் என்பவர் 1970 இல் தானியங்கியாக ஒரு அழைப்பு கோபுர எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு அழைப்பு துண்டிக்காமலேயே செல்லும் அழைப்பு கைமாற்ற தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். அது கைபேசி வளர்ச்சிக்கு பேருதவியாயிற்று. 1971இல் ஏ.டி.டி. நிறுவனம் கைபேசி சேவை ஒப்புதலுக்காக பெடரல் தொலைத் தொடர்பு குழுவிடம் விண்ணப்பித்தது. அது சுமார் பதினோரு ஆண்டுகளுக்குப் பின் 1982இல் அங்கீகரிக்கப்பட்டு தனியாக அலைவரிசை ஒதுக்கப்பட்டது.


1956இல் எரிக்ஸன் நிறுவனம் சுவீடன் நாட்டில் தனது முதல் தானியங்கி கைபேசியை வெளியிட்டபோது அந்த கைபேசியின் எடை எவ்வளவு தெரியுமா ? சொன்னால் நம்ப மாட்டீர்கள். நாற்பது கிலோ. அரை மூட்டை அரிசியின் எடை. எப்படித் தான் தூக்கிச் சுமந்தார்களோ !! அதன் பின் அதே நிறுவனம் 1965இல் நவீன இலகுவான கைபேசி ஒன்றைத் தயாரித்தது. அதன்

எடை ஒன்...
போதைய ...
எண்ணிக்...
சுமார் பதி...
பிறகும் அ...
யாளர் என்...
தான்.

முழுதும்...
படத் துவங்...
ஆம் ஆண்...
தான். இ...
கைபேசி ...
னும் எண்ப...
கள் வாக...
பொருத்த...
தொலைபே...
பட்டன. க...
மற்றும் எ...

1990 இ...
நுட்ப கை...
ஆரம்ப...
ஆண்டு மு...
நுட்ப ...
துவங்கியது...
கைபேசி அ...
டாக் கனி...
ருந்து அத்...
னும் தளத்...

இப்பே...
ஒரு கணினி...
பேசுவதற்க...
வசதியைத்...
எடுப்பது, ...
மின்னஞ்ச...
பக்கங்களை...
சேமித்து ...
மேலே ...
நிகழ்ச்சிக...
கைபேசிக...



# பணம் ...

அமெரிக்காவின் டேனியல் ... வருடங்களாகப் பணத்தைத் தொடவே... என்றால்... நம்புவீர்களா?

51 வயது டேனியல் சோலா, உ... நகரைச் சேர்ந்தவர். கடந்த 2000 இல் த... இருந்த 30 டொலர் பணத்தை ஒரு போன்... வைத்து விட்டு, மோப் உதக் என்கிற ... இருக்கும் குகைகளில் குடியேறிவிட்... சைக்கிள், நாக்கைந்து உடைகள், இர... அடுப்புகள், கத்தி, கிடார், பாட்டில் இவ்... அவரது சொத்து. மீன் பிடித்து அ பழங்க... இறந்து கிடக்கும் விலங்குகளை உண்டு ... தற்செயலாகத் தன் வாழ்க்கை... பிளாக்கில் எழுத, பணம் இல்லா மனித... பெயரோடு பாப்புலர் ஆகிவிட்டார்.

டேனியலுக்குப் பணத்தின் மீது அ... கோபம்? ஒரு ஃபிளாஸ்பேக்.

இளம் வயதில் கிறிஸ்துவத்தில் ஈ... இருந்தவருக்கு, கல்லூரி வந்ததும் இ... மேயும் பழக்கம் வந்தது. பலான பக்...

# கைபேசி

## ...டும் வளர்ச்சியும் ஆபத்தும்

■ வலையவன்

...ல்லாம் கைபேசி இல்லாதவனை ...லாதவன் போல பார்க்கிறது சமூகம்.




எடை ஒன்பது கிலோ !!!! அப் போதைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 150 !. அன்றிலிருந்து சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகும் அங்கே மொத்த வாடிக்கை யாளர் எண்ணிக்கை வெறும் 600 தான்.

முழுதும் தானியங்கியாக செயல் படத் துவங்கிய முதல் கைபேசி 1981 ஆம் ஆண்டின் நோர்டிக் கைபேசி தான். இதை முதல் தலைமுறை கைபேசி என்று அழைத்தனர். ஆயி னும் எண்பதுகளிலெல்லாம் கைபேசி கள் வாகனங்களில் நிரந்தரமாக பொருத்தப்பட்டு அவை வாகன தொலைபேசிகள் போல செயற் பட்டன. காரணம் அவற்றின் அளவு மற்றும் எடை.

1990 இல் முதல் டிஜிடல் தொழில் நுட்ப கைபேசி அமெரிக்காவில் ஆரம்பமானது, அதற்கு அடுத்த ஆண்டு முதல் ஜி.எஸ்.எம் தொழில் நுட்ப கைபேசி ஐரோப்பாவில் துவங்கியது. அதன் பின்பே இந்த கைபேசி அசுர வளர்ச்சி பெற்று எட் டாக் கனியாக இருந்த நிலையிலி ருந்து அத்தியாவசியத் தேவை என் னும் தளத்துக்கு இடம் பெயர்ந்தது.

இப்போதையை கைபேசிகள் ஒரு கணினி போல செயற்படுகின்றன. பேசுவதற்கான என்னும் அடிப்படை வசதியைத் தாண்டி, புகைப்படம் எடுப்பது, வீடியோ படம் எடுப்பது, மின்னஞ்சல் அனுப்புவது, இணையப் பக்கங்களை வாசிப்பது, தகவல்கள் சேமித்து வைப்பது, இன்னும் ஒரு படி மேலே போய் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது கூட கைபேசிகளில் கைவந்திருக்கிறது.

(தொடரும்)



■ களஞ்சியன்

# சாலை பயணிக்கவா? மரணிக்கவா?

ஒரு அமெரிக்கரும், ஒரு பிரிட்டன் நாட்டவரும், ஒரு இந்தியரும் பேசிக்கொண் டார்கள். அமெரிக்கர் சொன்னார், எங்கள் நாட்டில் வாகனங்கள் வலது புறமாகச் செல் லும். பிரிட்டன்காரர் சொன்னார், "எங்கள் ஊரில் இடது புறமாகச் செல்லும்". இந்தியர் கடைசியாகச் சிரித்துக் கொண்டே சொன்னார், "எங்கள் ஊரில் இடைவெளி இருக்குமிட மெல்லாம் செல்லும்".

சாலைப்பயணம் என்பது மரணத்தை முன்னிருக்கையில் அமரவைத்துச் செல்வது போலாகிவிட்டது இப்போது. வாகன எமன் எப்போது வந்து உயிரை இழுத்துச் செல்வான் என்று அறியமுடியாத சூழல். எப்போதும் மரணம் நிகழலாம் என்னும் நிலையில் நிகழ்கின்றன இன்றைய சாலைப் பயணங்கள்.

இந்திய சாலைகளில் மட்டுமே சுமார் மூன்று இலட்சம் விபத்துகள் வருடம் தோறும் நிகழ்கின்றன. எண்பதாயிரம் உயிர்களைக் கொல்லும் இந்த சாலை விபத்துகள் மூலம் ஆண்டுக்கு மூவாயிரத்து அறுநூறு கோடி ரூபாய் இழப்பும் ஏற்படுகின்றது என்பது அதிர்ச்சியளிக்கிறது. சாலைகளைப் பயன் படுத்துவோரின் அலட்சியமே தொண்ணூறு விழுக்காடு விபத்துகளுக்குக் காரணமாகிறது என்று உலக அளவில் எடுக்கப்பட்ட ஆய்வு முடிவுகள் தெரி விக்கின்றன.



மஞ்சள் விளக்கு என்பது வேகத்தைக் குறைப் பதற்கான எச்ச ரிக்கை விளக்கு என்பதற்குப் பதி லாக வேகத்தைக் கூட்டுவதற்கான எச்சரிக்கை விளக் காகத்தான் புரிந்து கொண் டி ருக்கிறார்கள். மஞ்சள் விளக்கு வந்தவுடன் காரை நிறுத்தினால் பின்னால் வருபவன் அடுத்த சமிக்ஞை வரும் வரை திட்டித் தீர்ப்பான். அல்லது மூன்று இருசக்கர வாகனங்களும், இரண்டு ஓட்டோக்களும் நம் முடைய காரை முத்தமிடும். வீதி ஒழுங்கு களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ப தும் பெரும்பாலானோருக்குத் தெரியவில்லை. அல்லது தெரியாததுபோல நடிக்கிறார்கள்.

ஓட்டோக்கள் என்றால் பாம்பு போல வளைந்து ஓட வேண்டும் என்பதும், தண்ணீர் பவுசர் எனில் சோகிப் அக்தரின் வேகப் பந்து போல செல்ல வேண்டும் என்பதும், இரு சக்கர வாகனங்கள் எனில் கோடிட்ட இடங் களை நிரப்புவது போல செல்லவேண்டும் என்பதும் தான் இன்றைய போக்குவரத்து விதிகள். இந்த விதிகளின் படி செயற் படவில்லையெனில் பஸ்ஸ புதுசா செலுத்து றான் போல என்னும் நக்கல் பேச்சுகளும் தான் பரிசு.

உலகின் 80 வீத வாகனங்கள் வளர்ந்த நாடுகளிடம் இருக்கின்றன. ஆனால் எண்பது வீத விபத்துகள் வளரும் நாடுகளில் தான் நிகழ்கின்றன என்கிறது ஆய்வு ஒன்று. காரணம் வளர்ந்த நாடுகளில் உள்ள சீரான போக்குவரத்து விதிமுறைகளும், அதை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்படும் பாரபட்சமற்ற சட்ட ஒழுங்குகளும் தான்.

அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் வீதி விதி முறைகளை மீறுவோர் பாரபட்சமின்றி தண்டனை பெறுகிறார்கள். குறிப்பிடப்பட்டுள்ள வேகத்துக்கு அதிகமாக வாகனச் சாரதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் அபராதம் கட்டியே ஆக வேண்டும். விஸ்கான்சின் மாநிலத்திலுள்ள மில்வாக்கி யில் அதிக வேகத்தில் வாகனம் ஓடிய ஒரு உயரதிகாரிக்கு போக்குவரத்துக் காவலர் அபராதம் விதித்த நிகழ்வு ஜார்னல் செண்டினல் பத்திரிகையில் வெளியானது.

ஓடும் வேகத்துக்கு ஏற்ப அபராதத் தொகை அதிகமாகும். எத்தனை தடவை வேகமாய் ஓடுகிறோம் என்பதற்கு ஏற்பவும் அபராதம் அதிகரிக்கும். பாடசாலை இருக்கும் பகுதிகளில் வேகமாகக் காரை செலுத்தினாலோ, வீதிப் பணி நடக்கும் இடங்களில் வேகமாக காரை ஓடினாலோ பல மடங்கு அபராதம் கட்ட வேண்டியி ருக்கும். அபராதம் கொடுக்க வரும் பொலிஸாரை லஞ்சம் கொடுத்தும் மடக்க முடியாது.

வாகனங்களில் குழந்தைகளுக்கான தனிப்பட்ட இருக்கை பட்டி இருக்கின்றன. அங்கே அந்த இருக்கைகளில் தான் குழந்தைகளை அமர வைக்க வேண்டும், இல்லையேல் கடுமையான அபராதம் கட்ட வேண்டியது தான்.

குறிப்பிட்ட வரிசையில் பயணிப்ப வர்கள் சிக்னல் செய்யாமல் அடுத்த வரிசைக்குச் செல்வதோ, அல்லது குறுக்கும் நெடுக்குமாக ஓட்டுவதோ அமெரிக்காவில் அபூர்வமான காட்சிகள்.

(தொடரும்)

# ...ம் என்னடா பணம்

...னியல் சோலா 12 ...த் தொடவே இல்லை

... சோலா, உடன்வார் ...2000 இல் தன் கையில் ...த ஒரு போன் பாக்ஸில் ...க் என்கிற இடத்தில் ...டியேறிவிட்டார். ஒரு ...டைகள், இரண்டு தகர ...ட்டில் இவ்வளவுதான் ...து அ பழங்கள் பறித்து, ...ளை உண்டு வாழ்பவர், ...ழ்க்கையைப் பற்றி ...ல்லா மனிதன் என்கிற ...ட்டார்.

...ன் மீது அப்படி என்ன

...வத்தில் ஈடுபாட்டோடு ...ந்தும் இணையத்தை ...லான பக்கங்களைத் தேடாமல், புத்தர், ராமகிருஷ்ணர், காந்தி என்று தத்துவ மேதைகளின் போதைகளைத் தேடித் தேடிப்படித்தார். அந்த எல்லாத் தத்துவங்களையும் ஒட்டுமொத்தமாக இந்த ஒரே வாழ்க்கையில் பரிசோதித்துப் பார்க்க விரும்பினார். டேனியல் ஒரு கட்டத்தில், தனிமையில் இருப்பது, தத்துவமாகப் பேசுவது என்று வித்தியாசமாக வாழ ஆரம்பித்தார்.

டேனியலுக்கு அவ்வளவாக எதிலும் ஸ்பெஷல் திறமை இல்லை. அதனால் நிரந்தரமாக எந்தப் பணியிலும் நிற்க முடியவில்லை. பசி, வயிற்றைக் கிள்ளியது. கிடைத்த வேலையைச் செய்வது, அதில் கிடைக்கும் சம்பாத்தியத்தில் இன்னும் நான்கு புத்த கங்கள் வாங்கிப் படிப்பது, பின் வேலையை விட்டு விடுவது என இருந்தார். ஆனால், அதுவும் டேனியலுக் குப் போரடித்தது. கொஞ்சம் பீர் அடித்துவிட்டு, காரை எடுத்துக் கொண்டு மேலே ஏறி டாப் கியரில் பள்ளத்தில் பாய்ந்தார். அதிர்ஷ்ட தேவதை அந்த நேரம் டேனியல் பக்கத்துச் சீட்டில் அமர்ந்திருக்க வேண்டும். பாறை இடுக்குகளில் முட்டி கார் தொங்கியது. டேனியலுக்குப் போதை தெளிந்தது.

(தொடரும்)

# மருத்துவத்துறையை உலுக்கும் போலிகளின் படையெடுப்பு



வலையவன்

(கடந்தவாரத் தொடர்ச்சி..)

தடை செய்யப்பட்ட மருந்துகளைப் பரிந்துரை செய்யாமலும், அவற்றை விற்பனை செய்யாமலும் இருக்க வேண்டியது அவர்களுடைய கடமை.

பரிந்துரைக்கப்படும் மருந்துகள் உலக நலவாழ்வு நிறுவனத்தின் தடைசெய்யப்பட்ட மருந்துகளின் பட்டியலில் இருக்கிறதா என்பதைக் கவனித்தால் ஆபத்திலிருந்து தப்பலாம். தனிநபர்களைப் பொறுத்தவரையில் இது சாத்தியமான வழிமுறை அல்ல. ஆனால் இந்தச் சோதனையை மருந்தகங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்கள் எளிதில் செய்ய முடியும்.

தடை செய்யப்பட்ட மருந்துகள் எவை என்று தகவல்களை பெரிய மருத்துவமனைகளில் இருக்கும் மருத்துவர்கள் பெரும்பாலும் எளிதில் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் இந்தியாவின் பல எல்லைகளிலும் இருக்கும் சிறு சிறு மருத்துவமனை மருத்துவர்களை இந்தத் தகவல் சென்றடைவதில்லை. எனவே அவர்களுக்கு எந்த மருந்துகள் தடை செய்யப்பட்டவை என்பதில் தெளிவில்லை. பெரும்பாலும் இவையெல்லாம் மருத்துவ இதழ்கள், அறிக்கைகள் மூலம் மட்டுமே மருத்துவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அவை எல்லோரையும் சென்றடையாமல் இருப்பதில் வியப்பில்லை.

நேரடியாக வாங்கும் கடைகளிலேயே இத்தகைய போலிகளின் புழக்கம் இருக்கும் போது இணையம் மூலமாக வாங்கும் மருந்துகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். இணையத்தில் மருந்துகள் வாங்கும்போது தரமற்ற மருந்துகளே ஐம்பது விழுக்காடு நேரங்களில் வழங்கப்படுகின்றனவாம். முடிந்தவரை இணையம் மூலம் மருந்துகள் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். இணையம் மூலமாக வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் கூட விலையைப் பார்க்காமல் அங்கீகரிக்கப்பட்ட வலைத்தளங்கள் மூலமாக மட்டுமே வாங்க வேண்டும். இந்தப் போலி மருந்துகள், தடை செய்யப்பட்ட மருந்துகள், அங்கீகாரமற்ற மருந்துகள் போன்றவை சமூகத்தில் நிகழ்த்தும் பாதிப்பு மிகப்பெரிய தீவிரவாதத் தாக்குதல் போன்றது என்பதை உணர்தல் அவசியம். இதைத் தடுக்க அரசு ரீதியான திட்டமிட்ட செயல்பாடு மிக அவசியம். அனைத்து மருத்துவமனைகளும் தரக்கட்டுப்பாடுக்குள் வரவேண்டும். டிரேட்மார்க் இல்லாத மருத்துவமனைகள் இயங்க அரசு அனுமதி மறுக்க வேண்டும். இந்த மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளைத் தரமான நிறுவனங்களிடமிருந்து மட்டுமே பெறவேண்டும். அந்த நிறுவனங்களின் தயாரிப்புத் தரத்தையும் அடிக்கடி பரிசோதனை செய்யவேண்டும்.

போலி மருந்துகள், அனுமதியற்ற மருந்துகளுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். ஒரு பயங்கரவாத, கொலைக்குற்றத்துக்குரிய அல்லது அதற்கும் மேற்பட்ட வீரியத்துடன் இந்தக் குற்றங்கள் அணுகப்பட வேண்டும். போலி மருந்துகளுக்கு எதிரான விசாரணைகள் சமூகத்தின் ஒட்டுமொத்த நலன் சார்ந்தது என்பதால் விரைந்து முடிக்கப்படவும் வேண்டும்.

போலி மருந்துகள், தரமற்ற தயாரிப்புகள் இவற்றுக்கான அனுமதிகளில் ஈடுபட்டுள்ளவர்கள், சுயநல நோக்கங்களுடன் அனுமதி வழங்கியவர்கள் இவர்களுக்கு எதிராய் சட்டம் கடுமையாய் பாயவேண்டும்.

கடுமையான தரக்கட்டுப்பாடு அமைப்பும், அதில் தனிநபர் நலம் கலக்காத அணுகு முறையும் வேண்டும். போலி மருந்து குறித்த புகார்கள் எளிமையாக்கப்படவேண்டும். போலியா ? அப்படின்னா என்ன? எனக் கேட்கும் பொதுமக்களுக்கு இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவையெல்லாம் இருந்தால் சந்தையிலும், தயாரிப்பு நிலையங்களிலும், இறக்குமதிகளிலும் இந்தப் போலி மருந்துகளை ஒழித்தல் சாத்தியமே. நைஜீரியா இத்தகைய போலி மருந்துகளால் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த ஒரு நாடு. 2001 இல் சுமார் 41 விழுக்காடு மருந்துகள் அங்கே போலியாகவே உலவிவந்தன. நைஜீரிய அரசு எடுத்த தீவிர முயற்சிகளின் பயனாக தற்போது அந்த விகிதம் கணிசமாய் குறைந்து 15 விழுக்காடு எனுமளவுக்குக் குறைந்திருக்கிறது. பதிவு செய்யப்படாத மருந்துகள் 68 விழுக்காடிலிருந்து 19 விழுக்காடாக வீழ்ந்திருக்கிறது. இவையெல்லாம் மற்ற வளரும் நாடுகளுக்கான ஒரு முன்னுதாரணம் எனலாம்.

சரி இந்த போலி மருந்து விஷயத்தில் நமது பங்கு என்ன ? முதலில் விளம்பரங்களின் வசீகரத்தைக் கொண்டு எந்த முடிவையும் எடுக்காமல் இருப்பது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் மருந்து என்றால் கண்டிப்பாக உயர்தரம் என முடிவு கட்டாமல் இருப்பது. இரவு நேரங்களில் தொலைக்காட்சியில் பேசும் வாலிப வயோதிக அன்பர்களே அழைப்புகள் உண்மை என நம்பி ஏமாறாமல் இருப்பது. போலிகளை எந்த விதத்திலும் ஊக்குவிக்காமல் இருப்பது என பல வழிகளில் நமது பங்காற்றல் இருக்கமுடியும்.

போலி மருந்துகளை தெரிந்தே வாங்கும் போது நாம் அந்தக் குற்றத்தின் பங்கு தாரர்கள் ஆகின்றோம் என்பதையும், நாமும் பணத்தைக் கொடுத்து அந்தக் குற்றத்தையும் அது தொடர்பாய் எழக்கூடிய தொடர் குற்றங்களையும் ஊக்குவிக்கிறோம் என்பதையும் உணரவேண்டும்.

போலி மருந்துகளை விற்கும் மருந்தகங்கள், தங்களுக்கு அதிகப்படியான லாபம் கிடைக்கும் என்பதால் இந்த பிழையைச் செய்கின்றனர். இத்தகையோர் சமூகத்தைச் சிதைக்கும் கொடும் செயலைச் செய்கின்றோம் என்பதை உணரவேண்டும். வளரும் நாடுகளிலுள்ள மக்கள் சுகாதார வசதிகள் இல்லாமல் தொடர் நோய்களுக்கு இலக்கானவர்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் ஏழைகள். தினசரி வாழ்க்கையை இழுக்கவே திராணியற்ற மக்கள் லாபமானதை வாங்கவே விரும்புவர். அவர்களுடைய பொருளாதார இயலாமையை மூலதனமாக்கி ஆபத்தான போலிகளை அவர்கள் தலையில் கட்டாமல், மருந்தகங்கள் அது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

போலி மருந்துகளைக் கண்டறிவது கடினம். எனினும் நம்மால் முடிந்த அளவுக்கு போலியில்லாத மருந்து தானா என்பதை ஊர்ஜிதப்படுத்திய பின்பே வாங்க வேண்டும். மருந்துகள் வாங்கும்போது அளவிலோ, வடிவத்திலோ, நிறத்திலோ, எழுத்துகளிலோ ஏதேனும் வித்தியாசம் தென்பட்டால் வாங்காதீர்கள். வேறொரு மருந்துக் கடையை நாடுங்கள்.

வாங்கிவிட்டால் மருத்துவரை அணுகி உங்கள் சந்தேகத்தைத் தெரிவிக்கலாம். பெரும்பாலும் போலிகள் மாத்திரைகளில் தான் காணப்படுவதாக ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. எனவே மாத்திரைகள் வாங்கும் போது அதிக கவனம் செலுத்துங்கள்.

மருந்துகளின் ஆயுளைக் கண்டிப்பாகப் பாருங்கள். அதன் கடைசி நாள் தாண்டியிருந்தாலோ, அதன் மீது புதிதாக ஸ்டிக்கர் ஏதேனும் ஒட்டப்பட்டிருந்தாலோ, நாள் திருத்தப்பட்டிருந்தாலோ அதை வாங்காதீர்கள். மருந்துகள் காலாவதி நாள் இல்லாமல் இருந்தால் அது நிச்சயம் போலி மருந்து என்பதைக் கண்டுகொள்ளுங்கள். மருந்துகளில் தயாரிப்பு நிறுவனத்தைக் குறித்த விவரம் இல்லாமல் இருந்தாலும் அது போலியே. கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் இந்தப் போலி மருந்துகள் ஆயிரம் சதவீதம் அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் அதிர்ச்சியளிக்கின்றன. போலி மருந்துகள் பிரச்சினை சமூகத்தைக் கறையானாக அரித்து, சமூகத்தின் நலனையே கெடுக்கும் பிரச்சினையாகும்.

இந்த பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து அரசு தீவிர நடவடிக்கைகள் எடுப்பது, ஊடகங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது, மருத்துவர்கள் மற்றும் மருந்தகங்கள் தங்கள் தார்மீகக் கடமையை உணர்ந்து செயல்படுவது எனக் கூட்டு முயற்சி கைகூடினால் சுகர்தாரமான சமூகம் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை.

## புத்தகசாலை

### காசநோய்




மாவட்ட காசநோய்க் கட்டுப் பாட்டு அதிகாரியான டாக்டர் சி.யமுனானந்தா அவர்களின் ''காசநோய்'' எனும் நூல் கைவரப் பெற்றோம். காசநோய் ஏற்படுவதற்கான காரணங்களும் அவற்றைத் தடுக்க எடுக்க வேண்டிய முயற்சிகள் குறித்தும், விரிவாகவும் தெளிவாகவும் கருத்துரைக்கின்ற அரிய நூல் இது.

காசநோய் ஒரு சுவாசநோயாக நுரையீரல் தொகுதிகளில் தொற்றுக்களைக் கொண்டு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. இது தவிர நுரையீரல் தவிர்ந்த ஏனைய உறுப்புக்களிலும் காசநோயின் பாதிப்பு எவ்வாறு விரிவடைகிறது என்பதையும் சலரோகம் எயிட்ஸ் போன்ற நோய்களையுடையோர் இலகுவாகக் காசநோயின் தாக்கத்துக்கு உள்ளாகும் வகை குறித்தும் இந்த நூலில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

காசநோய்க்கான சிகிச்சை முறைகள், சுகாதார உத்தியோகத்தர்கள் காசநோயைக் கட்டுப்படுத்த எடுக்கும் பணிகள், காசநோய் பரவாது தடுக்கும் வழிகள் பற்றிய விழிப்புணர்வு எனக் காசநோய் பற்றிய முழுமையான விவரங்களையும், விளக்கங்களையும் இந்த நூல் கொண்டுள்ளது.

இந்த நோயின் தாக்கத்துக்கு உள்ளாகாதிருக்க நாம் ஒவ்வொருவரும் வாசித்து ஒழுக இது ஒரு சிறந்த கைநூலாகும்.

இதனை எழுதி வெளியிட்ட டாக்டரின் வெற்றி, சுகவாழ்வுக்கான நற்பாதைக்கு ஒவ்வொருவருக்கும் வழிகாட்டும் எனலாம்.

## ஸ்கொலசிப்,

நடும் விதைக்கு
கொடு[ம்] வதை!
புலமைப் பெயரில்
இளமைகளைக் கொல்லும்
தலைமைகளின் தவறு...!
கல்விப் புலத்தில் சொல்லில் அடங்கா
அல்லலின் அவலம்!
இல்லங்களில் இன்னல்கள்...
இயல்பாய் முளைக்கும்
இங்கிதத் தளிர்களை
அசேதனப் பசளைகளால்
உதாசீனம் செய்யும் உயிர்கொல்லி!
சீரான துலங்கலை
கூரான அம்புகளால்
புத்திக்காக குத்தும்
புது ஆயுதம்!
துளிர்களின் தூக்கங்களைக் கெடுக்கும்
துக்க மாத்திரை!
கௌரவப் பிரச்சினைகளே – எங்கள்
அபூர்வப் பிஞ்சுகளின்
ஆக்க பூர்வ நெஞ்சங்களை
அஞ்ச வைப்பதா...?
வஞ்சம் செய்வதா...?
புத்திகளைத் தீட்டுவது
ஒரு வகையில்
புதுமை தான்! இந்த
வித்தகத்துக்காக
கத்திகளைக் கொண்டே
புத்திகளைத் தீட்டும்
சித்தி வேண்டிய மு[க]த்திரைகளின்
அகத்திரைகளே அழிந்து போ...!
கல்விப் புலத்தை மட்டும்
காரணம் காட்டி,
''எல்லாப் பயனும் எம்பெருமான்'' – என்ற
சொல் வேலியிட்டு
சொர்க்கங்களை நரகமாக்காதீர்...!
இந்த எல்லை
கடக்கும் பயணத்தில்
எல்லோர்க்கும்
இழி கூலப் பங்குண்டு...!
சிந்தியுங்கள்... – எங்கள்
சிந்தனை சந்ததிகள்
முந்தி முளைக்க,
வெந்தணலில் வேகவேண்டாம்!
இந்த நந்தவனப்பூக்கள்
செந்த வனப்பில்
சோதனைகளைச் சந்தித்து
சாதனை மணம் வீசும்...
அதுவரை,
எல்லாம் வல்ல வல்லுநர்களே,
வழிகாட்டிகளே,
கெஞ்சிக் கொள்கின்றோம்...
கொஞ்சம் மௌனியுங்கள்...!

மானியூர், ரட்னேஸ்

# நன்றே செய்க-அதை இன்றே செய்க

உடனடியாகச் செய்து முடிக்கக் கூடிய வேலைகளைக் கூட ஒத்திப்போடுவது என்பது சிலர் வழக்கம். அரச அலுவலகங்களின் சாபக்கேடு-ஏன் மானக்கேடு இந்தப் பிரச்சினை. உடனே செய்யக்கூடிய காரியங்களைக் கூட பிற்போட்டு பிற்போட்டு மக்களை நடையாக நடக்க வைப்பது, நமக்கேன் வம்பு என்று முடிவே எடுக்காமல் பேப்பருக்கு மேல் பேப்பராக ஃபைலை அடுக்கி வைப்பது.. காலதாமதம் என்பதை ஒரு கலையாகவே போதிப்பது.. இவை எல்லாம் அரசுத் துறையின் அவமானங்கள்.

தனி மனிதர்களும் அப்படித்தான். பல் வலிக்கிறது என்று வாய் வலிக்கப் புலம்புவார்களே ஒழிய, மருத்து வரை உடனே பார்க்க மாட்டார்கள். ஆனால் வாழ்க்கையில் வெற்றி பெற்ற தலைவர்கள் (உண்மையான) உலக வழிகாட்டிகள், இதிகாச நாயகர்கள் எதையும் ஆழமாகச் சிந்தித்து, அறிவுபூர்வமாக முடிவெடுத்து உடனே செயலுக்கும் கொண்டு வருகிறார்கள்.

இராமனுக்கு முடிசூட்டுவது என்று தசரதர் அதிகமாக ஆலோசித்து உடனே முடிவெடுத்தார். எப்படி? ஆலோசனை தான் நீண்ட நேரம் நடந்ததே ஒழிய, பட்டாபிஷேகம் என்றதும் 'நாளைக்கு' என்று அதிரடியாகத் தீர்மானிக்கிறார். அதற்குள் விதி விளையாடியது என்பது வேறு விஷயம். ஆனால் முடிசூட்டுவது என்று முடிவெடுத்த உடனே நாளை பட்டாபிஷேகம் என்கிற நடவடிக்கை வேகம் தசரதன் தலைமைக்கு அத்தாட்சி.

கைகேயி ''ஆட்சி இல்லை'' என்று இராமனுக்கு அறிவித்தாள். காடு போகத் துணிந்தான் காகுத்தன். கால அவகாசம் கேட்டானா? இடைக்காலத் தடையுத்தரவு கேட்டுப் போராடினானா? இல்லையே. காடு போவது என்று தீர்மானித்தவுடன் இன்றே போவது என்று முடிவு செய்தான். ''மின் ஒளிர்கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்'' என்று புறப்பட்டுப் போயும் விட்டான். ஒத்திப் போடுகிற மனோபாவம் அந்தத் தலைவனுக்கு இல்லை.

மகாபாரதத்தில் வரும் பீஷ்மன். அடேயப்பா என்ன உறுதி? என்ன மனோபலம். தந்தை சந்தனு, ஒரு பெண்ணை மணக்க விரும்புகிறார் என்ற செய்தியைத் தேரோட்டி மூலம் அறிந்து கொண்டான். ( சாரதிக்குத் தெரியாத ரகசியமா?, அந்த மீனவப் பெண்ணை வளர்க்கும் பெரியவரை வணங்கினான். தந்தைக்குப் பெண் கேட்டான்.

பரிமளகந்தி என்று அந்த மீனவப் பெண்ணின் தந்தை நிபந்தனை ஒன்று விதித்தான். சந்தனுவின் முதல் மகன் பீஷ்மன்தான். என்றாலும் பரிமளகந்தி வயிற்றில் பிறக்கும் மகனுக்குத்தான் பட்டம் சூட்ட வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. மீனவர் தலைவனின் நிபந்தனையை அறிந்ததும் பீஷ்மன் கால அவகாசம் கேட்கவில்லை. முடிவை ஒத்திப் போடவில்லை. தயக்கமின்றிச் சொன்னான்.

''உன் மகள் வயிற்றில் பிறக்கும் மகனுக்கு ஆட்சியை வழங்குவேன்.'' மீனவர் கிழவன் மிக மிகக் கெட்டிக் காரன். ''நீ நல்லவன். ஆனால் நாளை உன் வயிற்றில் பிறக்கும் பிள்ளை ஆசைப்பட்டு என் பேரனை வென்று, கொன்று ஆட்சியைப் பிடித்து விட்டால்?'' என்று இழுத்தான். அப்போதும் பீஷ்மன் தயங்கவில்லை. எடுத்த முடிவில் மாற்றம் இல்லை; குழப்பம் இல்லை. தெளிவாகச் சொன்னான்.

''எல்லோரும் கேளுங்கள். புத்திரப்பேறு இல்லாதவர்க்கு மோட்சம் இல்லை என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் மணம் முடிக்க மாட்டேன். மங்கையரைத் தீண்டி மகப்பேறு அடையேன். என் தந்தையின் ஆசை நிறைவேற நித்ய பிரம்மசர்யம் மேற்கொள்வேன்'' என்றான்.

வலிமையான முடிவுகளை உடனடியாக எடுத்து அமுல்படுத்தும் பலசாலிகள் ஒரு தேசத்தின் தேவை. அந்த இதிகாச புருஷர்கள்தான் இந்தியத் தலைவிதியை மாற்றி அமைக்கும் மகாபுருஷர்கள். வினோபா, காந்தி, ராஜாஜி, படேல் போன்ற விவேகம் உள்ளவர்கள் அப்படிப்பட்ட மகானுபவர்கள். முடிவெடுக்காது குழம்புதல், எடுத்த முடிவைச் செயல்படுத்த மாட்டாது தயங்குதல், கூடுமான வரை ஒத்திப் போடுதல், இவை முன்னேற்றத்தின் முதுகெலும்பையே ஒடிப்பவை.

இன்று செய்யக்கூடிய காரியங்களை நாளைக்கு ஒத்திப் போடுவதால் என்ன நன்மை வந்து விடும்? மின் கட்டணச் சீட்டை கடைசித் திகதியில் ஏன் கட்ட வேண்டும். மிக நீண்ட வரிசையில் ஏன் நெளிய வேண்டும்? பாடசாலைப் புத்தகங்களை இரவே அடுக்கி வைக்கப் பிள்ளைகளுக்குப் பழக்க முடியாதா?



தருமம் செய்கிறவர்கள்கூட இந்தப் பழக்கத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**சுகி.சிவம்**

# வாசகர் திருமுகம்

## நீதித்துறையை அவமதிப்பதை அனுமதிக்கமுடியாது

அமைச்சர் ஒருவரின் அடாவடிக்கு எதிராக வடமாகாண சட்டத்தரணிகள் போர்க்கொடி தூக்கியது பாராட்டத்தக்கது. நீதித்துறையை அவமதிப்பதை எவரும் அனுமதிக்கமுடியாது. அது ஆபத்தானது.

ஆனால் சட்டத்தரணிகள் குறிப்பாக வட மாகாண சட்டத்தரணிகள் தங்கள் சுய கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படும் போது மட்டுமல்லாது மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் தீர்ப்புகளுக்கு எதிராகவும் போர்க்கொடி தூக்க முன்வரவேண்டும்.

உதாரணமாக வடக்கு-கிழக்கு துண்டிப்பு இப்படியான சந்தர்ப்பங்களிலும் சட்டத் தரணிகள் போர்க்கொடி தூக்க முன்வரு வார்களா? இனியாவது முன்வருவார்களா?

தமிழ் நாட்டு சட்டத்தரணிகள் அநீதிக்கு எதிராக துணிந்து போர்க்கொடி தூக்குறார்களே, உங்களால் ஏன் முடியாது? ஏன் நீதிக்கு போர்க்கொடி உயர்த்தக்கூடாதா?

வைத்தியர்களைப் பாருங்கள் தங்கள் தேவைகளுக்கெதிராகவே போர்க்கொடி தூக்கி வெற்றிகண்டுள்ளார்கள். இந்தத் துணிவு சட்டத்தரணிகளுக்கு வராதா? Law makers should not be law breakers என்பது ஒரு பிரபல்யமான பழமொழி.

அதாவது சட்டத்தை இயற்றுபவர்களே அதனை மீறக்கூடாது. இந்த பழமொழியை சட்டத்தரணிகள் கடைப்பிடிக்கின்ற அதே வேளை The lawyers should not support injustice in any form சட்டத்தரணிகள் அநீதிக்கு எந்த வடிவிலும் துணை போகக்கூடாது. என்ற கூற்றையும் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்ப்போமாக.

**அனு, பொன்னாலை.**

## புராண நாடகங்களுக்கு உயிர்ப்பூட்டுவோம்

யாழ்.குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் தற்போது திருவிழாக்கள் வேள்விகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆலயங்களில் பெரும்பாலானவற்றில் இசைக் கச்சேரிகளும் நடைபெற்று வருகின்றன.

இதில் மனதிற்கு வேதனை தரும் விடயமாக, எமது முன்னோர்களால் நடிக்கப்பட்ட பழம்பெரும் புராண நாடகங்களான அரிச்சந்திரன், நல்லதங்காள், கோவலன் கதை என்று பல நாடகங்களை இன்று எமது இளம் தலைமுறை பார்க்கமுடியவில்லை. ஒரு சில ஆலயங்களில் மட்டும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து அரங்கேற்றப்படுவது மனதுக்கு பெரும் ஆறுதலைத் தருகிறது.

இப்படிப்பட்ட எமது முன்னோர்களால் நடிக்கப்பட்ட நாடகங்களை மறப்போமானால் வளர்ந்து வரும் எமது எதிர்காலச் சிற்பிகளுக்கு அவற்றின் தகவல்கள் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டு விடும் என்பது மட்டும் உண்மை.

கலையில் ஈடுபாடு கொண்ட மூத்த கலைஞர்களே, தயவு செய்து இன்றைய இளைய தலைமுறைக் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களை உற்சாகப்படுத்தி ஆலயங்களில் நாடகங்களை மேடையேற்றுங்கள்.

உங்கள் வாழ்வோடு உங்கள் கலைகளையும் தொலைய விடாமல் பாதுகாப்பது மூத்த கலைஞர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

தமிழர்களின் வாழ்வே சோகம், அதேபோல் பழம்பெரும் இசைக் கலையையும் சோகக் கடலில் விட்டு விடாதீர்கள். எமது இன்றைய ஆர்வமுள்ள இளம் கலைஞர்களே முன்வாருங்கள். எங்கள் முன்னோர்களால் பரம்பரை பரம்பரையாக நடிக்கப்பட்ட நாடகங்களை கற்று வளர்ந்து வரும் எமது தாயகத்து சிறுவர்களூடாக தொடர்ந்து கலைகள் வளரட்டும்.

அருகி இருக்கும் கலைகளை மறப்போமானால் எதிர்கால சந்ததிக்கு இப்படிப்பட்ட நாடகக்கலைகள் தெரியாமல் போகும் நிலைமை ஏற்படும். இனிவரும் காலங்களிலாவது இப்படிப்பட்ட நாடகங்களை எமது மூத்த கலைஞர்களிடமிருந்து கற்று மேடையேற்றுவோம்.

**மு.அருமைச்சந்திரன்**
**வரணி வடக்கு, வரணி.**

## வாக்குறுதிகளால் ஏமாற்றப்படுகிறோம்

வன்னிப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக வேதனம் இன்றி வேவையாற்றி வரும் எமக்கு, விரைவில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று கூறி அரசு எம்மை ஏமாற்றி வருகிறது.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களாகிய எமக்கும் ,ஏனைய பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கியது போல வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பொறுப்பு வாய்ந்தவர்கள் அனைவரிடமும் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இந்த முயற்சி பயனற்ற நிலையில் கடந்த 18.6.2012அன்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கக்கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இதனை அறிந்து அங்கு வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறியும் ,வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலனும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் சரா.புவனேஸ்வரனும் சேர்ந்து எமது நியமனத்திற்கான உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்தியதுடன் மிக விரைவில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்ற வாக்குறுதிகளையும் வழங்கினர். இதனை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் உறுதிபட வலியுறுத்திக்கூறியும் இருந்தார்.

இதனைத்தொடர்ந்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் இருந்து வன்னிப் பகுதிக் கல்வி வலயங்களுக்கு வருகைதந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தொண்டர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகளையும் அழைத்து 2011இல் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் நியமனத்திற்கான தொண்டர் ஆசிரியர்களின் விபரங்களை எடுத்துச் சென்றிருந்தார்கள்.

இதனால் வன்னித்தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளதாக தொண்டர் ஆசிரியர்களிடையே வதந்திகள் பரவின. ஒவ்வொரு நாளையும் எதிர்பார்த்துக் காத்திருந்து ஏமாற்றமடைந்தோம்.

தொடர்ந்தும் நம்பி இருந்து ஏமாற்றப்படுபவர்களாக வன்னித்தொண்டர் ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள். ஏமாளிகளாகவும் கோமாளிகளாகவும் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவுமே வன்னி மக்களை வைத்திருப்பதற்கு அமைச்சர் விரும்புகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

**எஸ்.மலர்**
**பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்.**



# ஆடைக்கேற்ற அழகான காலணிகள்

ஏதோ ஒரு செருப்பு வாங்கினோமா அதை பல வருடங்கள் போட்டு கிழித்து பின்னர் புது செருப்பு வாங்கிய காலம் எல்லாம் மலை ஏறிப் போய்விட்டது. தங்களது ஆடைகளுக்கும் சென்று வரும் இடங்களுக்கும் ஏற்ற வகை வகையான செருப்புகளை தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ளும் நாகரிகக் காலம் இது.

ஆடையின் நிறத்திற்கேற்ற செருப்பு அதிக உயரம் கொண்ட குதிக்கால் செருப்பு கால்களை முழுவதும் மூடிக் கொள்ளும் கட் ஷு மெல்லிய லேஸ்களைக் கொண்ட தளர்வான செருப்பு பெரிய கற்கள் பதித்தவை துணியால் அலங்கரிக்கப்பட்ட காலணிகள் என பலப் பல வகைகளில் காலணிகள் சந்தைகளில் குவிகின்றன.

ஒவ்வொன்றும் தரத்திற்கும் அழகுக்கும் ஏற்ற விலைகளில் கிடைக்கின்றன. குறைந்த விலையிலும் அழகான காலணிகளை வாங்கிச் செல்ல முடியும். பாதங்களின் அழகைக் கூட்டும் விதத்திலும் காலணிகள் கிடைக்கின்றன. இதிலும் மணப் பெண்களுக்கு என்று சில காலணிகள் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படுகின்றன.

அதாவது திருமண ஆடையின் நிறத்தில் அதில் உள்ள வடிவமைப்புக்கு ஏற்ற வகையிலும் மணப்பெண் அணியும் நகைக்கு ஏற்ற வகையிலும் காலணிகள் தயாரிக்கப்படுகின்றன. விருந்து நிகழ்ச்சி திருமண நிகழ்ச்சிக்குச் செல்வதென்றால் ஆடம்பரமான காலணிகளை அணிந்து கொண்டு அனைவரையும் அசத்தலாம்.

ஆனால் தினமும் அலுவலகத்துக்கு அணிந்து செல்வதற்கு இவை எல்லாம் சரிபட்டு வராது. மிகவும் நலினமாக ஆனால் பார்ப்பதற்கே கொஞ்சம் விலை கூடுதல் போல என்று நினைக்க வைக்கும் வகையில் காலணிகள் வந்துள்ளன. சாதாரண தோற்றத்தில் நல்ல தரத்துடன் அணிவதற்கு சுகமானதாகவும் அலுவலக பயன்பாட்டிற்கு பல வகைகளில் காலணிகள் இடம்பிடித்துள்ளன.

சந்தையில் பல வகைகளில் காலணிகள் வந்தாலும் நமக்கென்று ஒரு தேர்வு உள்ளது. உங்களுக்குப் பிடித்தவற்றைத் தேர்வு செய்து அணியுங்கள். காலுக்கும் காசுக்கும் எந்த பாதிப்பும் இல்லாத வகையில் உங்களது தேர்வு இருக்கட்டும்.



## கரட் பேஸ் பேக்....

நம் சருமத்தை செயற்கை முறையில் பாதுகாப்பதை விட இயற்கை முறையில் நம் வீட்டில் இருக்கும் கேரட்டை பயன்படுத்தி பாதுகாக்கலாம்.

கேரட் நம் உடலுக்கு மட்டும் உகந்தது அல்ல நம் சருமத்திற்கும் மிகவும் சிறந்தது. 2 கேரட்டை வேக வைத்து மசித்துக்கொள்ளவும். மசித்த கேரட்டுடன் 1 ஸ்பூன் ஆலிவ் ஆயில் 1/2 ஸ்பூன் தேன் லெமன் ஜூஸ் கலந்து முகத்தில் தடவி 15 முதல் 20 நிமிடன் ஊற வைக்கவும்.

பின்னர் குளிர்ந்த நீரால் முகத்தை கழுவி விடவும். இதனால் முகமானது பொலிவுடன் அழகாகக் காணப்படும். இவ்வாறு வாரம் இருமுறை செய்தால் உங்கள் முகம் படிப்படியாக பொலிவடைவதை பார்க்கலாம்.

# மெஹந்தி போட ஆசையா?



பெண்கள் கையில் மருதாணி இலையை அரைச்சு வட்ட வட்டமா வெச்சு அழகு பார்த்து வந்தவர்கள் இப்போது அந்த மருதாணிய கோன் உள்ளே வெச்சு போடுற மெஹந்தி டிசைனை அதிகமா விரும்புறாங்க. அதுக்காக அவங்க பார்லர் போய் அதிகம் செலவு பண்றாங்க. ரோட்டையே அடைக்குற அளவுக்கு கோலம் போடுற கைகளுக்கு கையை அழகுபடுத்த போட சொல்லிக்குடுக்கணுமா என்ன? அப்படி அதிக செலவு செஞ்சு பார்லர் போறதுக்கு அதை வீட்டிலேயே ஈஸியா ரெடி பண்ணி வைக்கலாம்.

கோன் எப்படி செய்யலாம்

முதலில் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை கொதிக்க வைத்து அதில் டீத்தூளை போட்டு நல்லா கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் அந்த டிகாஷனில் ஹென்னா பவுடரைக் கலந்து குறைந்தது 2 மணி நேரம் ஊற விடவும்பின் ஒரு கவரை கதுரமா வெட்டி அதை கோன் போல செய்து கொண்டு, பின் அதில் கலந்து வைத்திருக்கும் ஹென்னாவை கோனில் போட்டுக் கொள்ளவும்.

இந்த மெஹந்தி கோன் கடைகளிலும் கிடைக்கும். மெஹந்தி கோன் வாங்கும் போது நேச்சுரல் ஹென்னாவான்னு பார்த்து வாங்க வேண்டும். ஏனென்றால் செயற்கை கலர் சிலசமயம் அலர்ஜியை உண்டாக்கும். மெஹந்தி வைத்தால் ஜல தோஷம் படிக்கும்-னு சிலர் நினைப்பாங்க. அது தவறு மருதாணி இழை அரைச்சு வைக்கும் போது தான் நல்லா சூடு குறைந்து உடம்பு குளிர்ச்சியாகும் அதனால சிலருக்கு ஜலதோஷமும் படிக்கும். ஆனா பவுடரை வாங்கி கோனில் வைத்து போடுவதில் ஜலதோஷம் வர வாய்ப்பில்லை. ஆகவே ஈஸியா கோன் செஞ்சு உங்க கற்பனைக் குதிரையை கையில போடுங்க!



# அழகான சருமத்தை தரும் வாழை இலை



அழகைக் கெடுக்கும் வகையில் சருமத்தில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் மற்ற சருமப் பிரச்சினைகளான பொடுகுத் தொல்லை சொறி சிரங்கு மற்றும் தீப்புண் போன்றவற்றுக்கு மிகவும் சிறந்தது. இதன் புதிய இலைகளில் இருந்து கிடைக்கும் ஜூஸை பாதிக்கப்பட்ட இடங்களில் தடவினால் அந்த பிரச்சினையானது முற்றிலும் சரியாகிவிடும். மேலும் இதன் இலையைத் தீக்காயங்கள் ஏற்பட்ட இடத்தின் மேல் வைத்தால் குளிர்ச்சியாக இருக்கும்.

வாழை இலையில் பல மருத்துவ பொருள்கள் இருப்பதால் இவை விஷமிக்க பூச்சிக்கடித்தல் தேனீக்கடி சருமத்தில் அரிப்புகள் போன்றவற்றிற்கு மிகவும் ஏற்றது. சொல்லப்போனால், இத்தகைய சிறப்பால் இதனை ஓர் இயற்கை அளிப்பான் என்றும் சொல்வார்கள். அழகுப் பொருட்களான கிரீம் மற்றும் லோசனில் இருக்கும் அலன்டாயின் என்னும் பொருள் இந்த சிறப்புமிக்க வாழை இலையில் இருந்தே எடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த பொருள் கிருமிகளை அழிப்பதோடு விரைவில் எந்த ஒரு பிரச்சினையையும் சரிசெய்யும். மேலும் இது புதிய செல்கள் வளரவும் வழிவகுக்கும்.

குழந்தைகளுக்கு டயாஃபர் அணிவதால் வரும் அரிப்பு கொசு கடி போன்றவற்றில் இருந்து காப்பாற்ற வீட்டிலேயே இயற்கையாக மருந்துகளை வாழை இலைகளைப் பயன்படுத்தி தயாரிக்கலாம். அதற்கு வாழை இலைச்சாற்றுடன் சிறித ஆலிவ் ஆயில் சிறிது தேன் மெழுகு கலந்து அதனை பயன்படுத்த வேண்டும்.

மன அழுத்தம் போவதற்கும் மற்றும் மென்மையான சருமத்தை பெறுவதற்கும் வாழை இலையில் ஐஸ் கட்டிகளை வைத்து மசாஜ் செய்ய வேண்டும்.

# நகை அலங்காரம்

நகைகள் அணிய ஆசைப்படாத பெண்களே இல்லை. அதே போல் எந்த நகையை தேர்ந்தெடுத்து அணிவது என்று குழம்பாத பெண்களும் கிடையாது. நகைகளை அணியும் பொழுதும் தேர்ந்தெடுக்கும் பொழுதும் அதிகமாக நகைகளை அணிய வேண்டாம். திருமணம் அல்லது நிச்சயார்த்தம் போன்ற நிகழ்ச்சிகளின் போது மட்டும் நகைகளை அதிகமாக அணியவும்.

முத்தினால் ஆன ஆபரணங்கள் பார்ப்பதற்கு அழகாகக் காட்சியளிப்பதுடன் அணிபவரை எடுப்பாகக் காண்பிக்கும். இதனால் அலுவலகத்துக்குச் செல்லும் போதோ சின்ன சின்ன விருந்துகளில் கலந்துகொள்ளும் பொழுதோ முத்து பதித்த நகைகளை அணியவும். உயரமான பெண்கள் சின்னச் சின்ன நகைகளை அணிந்தால் எடுப்பாகத் தெரியாது.

இரு வேறு விதமான நகைகளை ( வெள்ளி மற்றும் தங்க நகைகளை ஒன்றாக அணிவது) ஒன்றாய்ச் சேர்த்து எப்பொழுதும் அணிவதைத் தவிர்க்கவும்).

நெற்றிச் சட்டி உங்களை அழகாய் காட்டக் கூடிய ஒன்றாகும்.

காலை நேரங்களில் நகைகளைக் குறைவாக அணிய வேண்டும். இரவில் அதிகமான நகைகளை அணியலாம்.

நீங்கள் அயல்நாட்டுத் துணி வகைகளை அணிபவராக இருந்தால் அதிகமான நகைகளை அணிய வேண்டாம். அவற்றுடன் மெல்லிய செயின் சின்ன சின்ன ஜிமிக்கிகளை அணியலாம். பாரம்பரிய உடைகளுடன் பாரம்பரிய நகைகளை அணிந்தால் அது உங்களுக்கு வித்தியாசமான தோற்றத்தை அளிக்கும்.

தற்பொழுது எங்கு பார்த்தாலும் கவரிங் நகை அதிகரித்து விட்டது. இவை மலிவாகக் கிடைப்பதோடு ஏர்க்கக் கூடியவையாகவும் தொலைந்து போனால் பெரிதாக எதையும் இழந்து விடவில்லை என்று மனதை தேற்றிக் கொள்ளும் படியாகவும் உள்ளன. நகைகளைத் தேர்வு செய்யும் பொழுது உங்கள் வயதைக் கவனத்தில் கொள்வது அவசியம். வயதானவர்கள் அளவில் பெரிய நகைகளை அணிவதை தவிர்ப்பது நல்லது. வயதில் சிறியவர்கள் சின்ன நகைகளை அணிவதைக் காட்டிலும் நடுத்தர அளவு நகைகளை அணியலாம்.